

Registered as a News Paper in Sri lanka
விலை : ரூபா 10 .00
தினப்பதிப்பு
# தினமுரசு
THINAMURASU
முரசு - 03 திருவள்ளுவர் ஆண்டு 2044 மாசி 20 திங்கட்கிழமை (04.03.2013) பக்கங்கள் 20 ஓசை - 155


Tilko Jaffna City Hotel
TILKO
❖ Banguet Hall
❖ Conference Hall
❖ Restaurant ❖ Luxurious rooms
❖ Swimming Pool
❖ Gymnasium/Spa
70/6, K.K.S Road, Jaffna.
E.Mail - tilkojaffna@gmail.com
Web - www.Cityhoteljaffna.com
T.P - 0212225969
Hotline: 0212229497
(C/2278)












# இலங்கைக்கு எதிரான பிரேரணை இன்று தாக்கல் செய்கிறது அமெரிக்கா

(ஜெனிவா)

இலங்கைக்கு எதிரான பிரேரணையை அமெரிக்கா இன்றைய தினம் ஐ.நா. மனித உரிமைப் பேரவையில் தாக்கல் செய்யவுள்ளதாகவும், இதற்கான வாக்கெடுப்பு எதிர்வரும் 22 ஆம் திகதி நடாத்தப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

47 நாடுகளை உறுப்பினர்களாகக் கொண்ட ஐ.நா. மனித உரிமைகள் ஆணையத்தின் கூட்டம் கடந்த மாதம் 27 ஆம் திகதி தொடங்கியது. இதில் இலங்கைக்கு எதிராக அமெரிக்கா மீண்டும் ஒரு தீர்மானம் கொண்டு வருகிறது. இன்று இந்தத் தீர்மானத்தை அமெரிக்கா தாக்கல் செய்கிறது. அமெரிக்கா கொண்டுவரும் தீர்மானத்தின் மீது வரும் 22 ஆம் திகதி வாக்கெடுப்பு நடைபெறவுள்ளது. தீர்மான விபரம் வெளியாகவில்லை என்ற போதிலும், இலங்கைக்கு சர்வதேச மனித உரிமை குழுவை அனுப்பிவைக்க வேண்டும் என்ற கோரிக்கை அதில் இடம்பெறும் எனத் தெரிவிக் கப்படுகிறது.

இந்தத் தீர்மானத்தை ஆதரிக்கப்போவதாக ஐரோப்பிய நாடுகள் ஏற்கனவே அறிவித்து உள்ளன. இதனிடையே ஐ.நா.மனித உரிமைகள் ஆணையக் கூட்டத்தில் உறுப்பினர்களின் விவாதத்துக்கு பின்தீர்மானத்தை கருத்து ஒற்றுமையின் அடிப்படையில் வாக்கெடுப்பின்றி ஒரு மனதாக நிறைவேற்ற அமெரிக்கா மும்முரம்காட்டி வருகிறது.

இதேவேளை இலங்கைக்கு எதிராக ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவை மாநாட்டில் முன்வைக்கப்பட உள்ள தீர்மானத்திற்கு 30 நாடுகள் ஆதரவளித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## செப்ரெம்பரில் வடக்கில் தேர்தல்

வடக்கு மாகாணசபைத் தேர்தலை செப்ரெம்பரில் நடத்தவுள்ளதாகவும். அதற்காக ஏனைய மாகாணசபைத் தேர்தல்களையும் நாம் பிற்போட்டுள்ளோம் என்று ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

'இந்து' பத்திரிகைக்கு வழங்கிய செவ்வியின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். வடக்கு மாகாணசபைத் தேர்தலை நிறுத்தி வைக்கும் எண்ணம் இல்லை. அதைச் செய்து விமர்சனங்களை எதிர்கொள்ள விரும்பவில்லை. ஏனைய எட்டு மாகாண சபைகளும் அனுபவிக்கும் அதிகாரங்களை விடவும் கூடுதலான அதிகாரங்களை வடக்கு மாகாணசபை கொண்டிருக்கும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

## சர்வதேசத்தை ஏமாற்றினால் விளைவுகள் பாதகமாகும்
### எச்சரிக்கிறார் தயான் ஜயதிலக



(கொழும்பு)

சர்வதேச சமூகத்தை இலகுவாக ஏமாற்றிவிட முடியுமென அரசாங்கம் நினைக்கின்றது. ஆனால் சர்வதேசத்தை சுலபமாக ஏமாற்றிவிட முடியாதென் பதுடன், இலங்கைக்கு எதிராக ஐ.நா.மனித உரிமைப் பேரவையில் தீர்மானம் நிறைவேற்றப் படக்கூடிய சாத்தியம் அதிகளவில் காணப்படுவதாகவும்

(19) ஆம் பக்கம் பார்க்க

## பயிற்சியில் வெடிவிபத்து 6 கடற்படையினர் காயம்

(யாழ்ப்பாணம்)

பயிற்சியின்போது ஏற்பட்ட வெடிவிபத்தினால் ஆறு கடற்படையினர் காயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

வேலணை மண்கும்பான் பகுதியில் நேற்றைய தினம் இச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. இது தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது,

மண்கும்பானில் கடற்படையினர் ஆர்.பி.ஜி. எறிகணைப் பயிற்சியை மேற்கொண்ட வேளை அது வெடித்துள்ளது. இதன்போது குறித்த ஆர்.பி.ஜி. குழலின் பின்பக்கத்திலிருந்து வெளியாகிய தீயினால் ஆறு

(19) ஆம் பக்கம் பார்க்க

## தமிழ் மக்கள் வீடொன்றைக் கட்டுவதற்கு கல்லாவது கொடுத்ததா கூட்டமைப்பு
### கேட்கிறார் அமைச்சர் பசில்


ஜெனிவாவுக்கு சென்றுள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள், வடக்கில் வாழும் தமிழ் மக்களுக்கு ஒரு வீட்டை நிர்மாணிப்பதற்கு தேவையான கல்லைக்கூட பெற்றுக் கொடுத்தார்களா என்பதை ஜெனிவாவில் விளங்கப் படுத்த முடியுமா என பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ கேள்வி எழுப்பியுள்ளார்.

வடக்கிலிருந்து பயங்கரவாதிகளினால் வெளியேற்றப்பட்ட தமிழ், முஸ்லிம், சிங்கள மக்களை அவர்களது சொந்த மண்ணில் மீள்குடியேற்றியே தீருவோம் எனவும் அவர் தெரிவித்தார்.

மன்னார் மாவட்டத்தில் மாந்தை மேற்கு பிரதேச செயலகப் பிரிவில் அமைந்துள்ள அடம்பன் கிராமத்தில் 300 மில்லியன் ரூபாய் செலவில் நிர்மாணிக்கப் பட்ட குடிநீர் விநியோகத்திட்டத்தை வைபவ ரீதியாக நேற்று ஆரம்பித்து வைத்து உரையாற்றும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார். இங்கு தொடர்ந்தும் உரையாற்றிய அவர், கடந்த 20 வருடங்களாக இலங்கையில் வாழும் மக்கள்

(19) ஆம் பக்கம் பார்க்க

## அமெரிக்கத் தீர்மானத்தை ஆதரிக்க வேண்டும் இந்தியா
### வலியுறுத்துகிறார் கருணாநிதி




ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணையத்தில் இலங்கைக்கு எதிராக அமெரிக்கா கொண்டுவரும் தீர்மானத்தை மத்திய அரசு ஆதரிக்க வேண்டும் என்று தி.மு.க. தலைவர் கருணாநிதி மீண்டும் வலியுறுத்தியுள்ளார்.

சென்னை அண்ணா அறிவாலயத்தில் நேற்று நடைபெற்ற தி.மு.க. பொருளாளர் மு.க.ஸ்டாலினின் மணிவிழா மலர வெளியீட்டு விழா நடைபெற்றவேளை அதில கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

(19) ஆம் பக்கம் பார்க்க

## இலங்கைத் தமிழர் விடயத்தில் மெத்தனம் காட்டும் மத்திய அரசு
### பா.ஜ.க.தலைவர் குற்றச்சாட்டு



இலங்கைத் தமிழர் பிரச்சினையில் மத்திய அரசு மெத்தனமாக இருக்கிறது. இலங்கையில் நடைபெற்ற போர்க்குற்றத்தை மத்திய அரசு மௌனமாகப் பார்த்துக் கொண்டிருந்தது தவறு என்று புதுடில்லியில் நடைபெற்ற பாரதீய ஜனதாக் கட்சியின் தேசியக் கவுன்சில் கூட்டத்தில் அக்கட்சியின் தலைவர் ராஜ்நாத் சிங் தெரி வித்துள்ளார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

மத்தியில் ஆளும் ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசு, வெளியுறவுக் கொள்கையில்

(19) ஆம் பக்கம் பார்க்க



தினமுரசு 20ஆவது ஆண்டு நிறைவையொட்டி பிரதேச செய்தியாளர்கள் மற்றும் விநியோகஸ்தர்களுக்கான கலந்துரையாடல் நேற்று மாலை நாவலர் கலாசார மண்டபத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் கல்விமுரசு நடாத்திய புதிர்ப்போட்டியில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கு பரிசில்கள் வழங்கப்பட்டன. சங்கானை சிவப்பிரகாச மகா .வித்தியாலயத்தைச்சேர்ந்த கி.கயறூபி முதலாமிடத்தையும் வேம்படி மகளிர் உயர்தர பாடசாலையைச்சேர்ந்த க.அபிராமி இரண்டாமிடத்தையும், யாழ்.மத்திய கல்லூரியைச் சேர்ந்த கு. ஜெயராமன் மூன்றாமிடத்தையும் பெற்றுக்கொண்டனர். இவர்களுக்கான பரிசில்களை பூபாலசிங்கம் புத்தகசாலையின் உரிமையாளர் வழங்கிக் கௌரவிப்பதைக் காணலாம். (படங்கள் ஆர். ராஜகுமார்)

# கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் சமுர்த்தி திட்டம் நடைமுறைப்படுத்தப்படும்

## – அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா



யாழ்.மாவட்டத்தில் மட்டுமல்லாது கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களிலும் வாழ்வின் எழுச்சியின் ஊடாக சமுர்த்தித் திட்டம் விரிவாக்கப்பட்டு நடைமுறைப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் அரசினால் முன்னெடுக்கப்பட்டு வருவதாக ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும், அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

அச்சுவேலி இராஜமாணிக்கம் மண்டபத்தில் நேற்று இடம்பெற்ற யாழ்.மாவட்டத்தில் புகைதலுக்கு எதிரான சமுர்த்தி கொடிதினம் மற்றும் புத்தாண்டு சேமிப்புத் திட்டத்தில் அர்ப்பணிப்புடன் செயற்பட்ட சமுர்த்தி உத்தியோகத்தர்களுக்கான கௌரவிப்பு நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், இம்மாவட்டத்தில் ஒருகால கட்டத்தில் சமுர்த்தித் திட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டுமென்ற எண்ணம் அப்போதைய அரசிற்கு இருந்ததில்லை. இருந்த போதிலும் அரசுடன் கலந்துரையாடி நாட்டின் ஏனைய பகுதிகளைப் போன்று இம் மாவட்டத்திலும் சமுர்த்தி திட்டத்தை நடைமுறைப்படுத்தியிருந்தோம்.

இதனூடாக யுத்தப் பாதிப்புக்களிலிருந்து எமது மக்களது வாழ்வாதாரத்தை மேம்படுத்த முடியுமென்ற நம்பிக்கை எமக்குள்ளது.

இந்நிலையில் வாழ்வின் எழுச்சித் திட்டத்தின் கீழ் சமுர்த்தியை உள்ளடக்கியதாக பல்வேறு செயற்திட்டங்கள் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இதனிடையே யாழ். மாவட்டத்தில் மட்டுமல்லாது யுத்தத்தால் பாதிக்கப்பட்ட கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களுக்கும் சமுர்த்தி திட்டம் விரிவாக்கப்பட்டு வாழ்வின் எழுச்சி திட்டத்தின் ஊடாக உதவித் திட்டங்களை வழங்க எமது அரசு தயாராகவுள்ளது.

வாழ்வின் எழுச்சி செயற்திட்டங்களுக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் எதிர்ப்புத் தெரிவித்து தடுக்க முற்பட்ட போதிலும் அரசு நாடாளுமன்றில் மூன்றிலிரண்டு பெரும்பான்மை வாக்குகளுடன் அதனை நிறைவேற்றி மக்களுக்கான பணிகளை முன்னெடுத்து வரும் நிலையில் இன்றுள்ள அமைதிச் சூழலை குழப்பும் வகையில் சுயலாப அரசியல்வாதிகள் செயற்பட்டு வருகின்ற போதிலும் இது குறித்து மக்கள் விழிப்பாக இருக்க வேண்டுமெனவும் கேட்டுக் கொண்டார்.

ஊடகங்களில் செய்திகளுக்காகவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் கருத்துக்களைத் தெரிவித்து வருகின்றார்களே தவிர மக்களுக்காக அவர்கள் எதையும் பெற்றுக் கொடுத்ததுமில்லை, கொடுக்கப் போவதுமில்லையென்றும் சுட்டிக்காட்டினார்.

இதனிடையே சமுர்த்தி திட்டத்திற்காக பல்வேறு வழிகளிலும் பங்காற்றிய அனைவருக்கும் அமைச்சர் இதன்போது நன்றிகளையும் தெரிவித்துக் கொண்டார்.

# வனமரக்கன்று பாதுகாப்பு கொடுப்பனவு விரைவில்

(வேலணை)

நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் பிரிவில் உள்ள பல இடங்களில் மர நடுகைத்திட்டத்தின் கீழ் நாட்டப்பட்ட மரங்களுக்கான பாதுகாப்பு கூடுகளை அமைத்தவர்களுக்கான கொடுப்பனவுகள் விரைவில் வழங்கப்படவுள்ளது.

இந்த மரங்களை நடுகை செய்வதற்கென ஏற்கனவே 150 பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டு அவர்கள் மூலமாக வ[illegible] மரங்கள் இங்கு நாட்டி வை[illegible]கப்பட்டிருந்தன. அவ்வாறு நாட்டி வைக்கப்பட்டிருந்த மரங்களினது பாதுகாப்புக்கான பாதுகாப்பு கூடுகள் அமைக்கப்பட்ட செலவாக இந்தப் பயனாளிகளுக்கு 3 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா வழங்கப்படவிருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது. (05)

# ஒன்றைக்கொடுத்து ஒன்றைப்பெறுங்கள்

(யாழ்ப்பாணம்)

ஒன்றைக் கொடுத்து ஒன்றைப் பெறுங்கள் சுய மாற்றச் செயற்றிட்டம் யாழ். பிரம்ப குமாரிகள் இராஜயோக நிலையங்களினால் ஆரம்பிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

சிவராத்திரி தினமான எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை மா[illegible] 4 மணி முதல் 8 மணிவரை நடைபெறும்.

இலக்கம் 211 பிறவுண் வீதி யாழ்ப்பாணத்தில்அமைந்துள்ள பிரம்மகுமாரிகள் இல்லத்துக்கும், மன்னாரில் திருக்கேதீஸ்வரர் ஆலய வளாகத்துக்கும், முல்லைத்தீவில் முள்ளியவளையில் அமைந்துள்ள பிரம்மகுமாரிகள் இராஜயோக நிலையத்துக்கும் சென்று இந்நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு ஆர்வலர்களுக்கு யாழ். பிரம்ம குமாரிகள் இராஜயோக நிலையத்தினர் அறித்துள்ளனர்.

# பாடசாலை மாணவரிடையே புத்தாக்க தெரிவுப்போட்டி

பாடசாலை மாணவர்களின் படைப்பாற்றல் திறனை விருத்தி செய்யும் நோக்கில், வடமாகாணப் பாடசாலை மாணவர்களிடையே புத்தாக்கத் தெரிவுப்போட்டி நடைபெறவுள்ளதாக தேசிய புத்தாக்க ஆணைக்குழு அறிவித்துள்ளது.

இப்போட்டி கோட்ட, வலய, மாகாண மட்டங்களில் நடைபெறவுள்ளது. புத்தாக்கப்போட்டிகளை நடத்தி அதில் தெரிவு செய்யப்பட்ட 5 புத்தாக்கங்களை கோட்ட மட்டப்போட்டிக்கு மே 15 இற்கு முன்னர் அனுப்பிவைக்கவேண்டும் இதிலிருந்து வலயமட்டப்போட்டிக்கான புத்தாக்கங்கள் தெரிவு செய்யப்படும். வலயமட்டப் புத்தாக்கத் தெரிவுப் போட்டி மே 25 ஆம் திகதி மாகாணக் கல்வித் திணைக்களத்தினால் நடத்தப்படும்.

மாகாண மட்டப்புத்தாக்கப் போட்டி யூலை 4 ஆம் திகதி நடைபெறும். ஒவ்வொரு மட்டங்களிலும் நடைபெறும் புத்தாக்கப் போட்டியின் போதும், கண்காட்சியும் இடம்பெறவுள்ளது.

மாணவர்களால் உருவாக்கப்படும் புத்தாக்கங்கள் நிகழ்கால வாழ்வியல் தேவைகளை நிறைவு செய்யக் கூடியதாகவும் பொருளாதார ரீதியில் இலாபம் தரக்கூடியதாகவும், எமது பிரதேசத்திற்குப் பொருத்தமானதாகவும் தொழில் வாய்ப்புக்களைப் பெற்றுத் தரக்கூடியதாகவும், எமது சூழலைப்பாதிக்காததாகவும் அமைந்திருந்தல்வேண்டும். இப்போட்டியில் மாணவர்கள் மட்டுமன்றி ஆசிரியர்களும் பங்கு பற்றமுடியும், என இப்போட்டிகளை முன்னெடுக்கும் தேசிய புத்தாக்க ஆணைக்குழு அறிவித்துள்ளது. 2013ஆம் ஆண்டில் நாடுமுழுவதும் தேசிய ரீதியில் 6000 புத்தாக்கக் கழகங்களை நிறுவவேண்டும் எனவும் இவ்ஆணைக்குழு தெரிவித்துள்ளது. (06)

# நிர்வாகத் தெரிவு

(நயினாதீவு)

நயினாதீவு நாகபூஷணி அம்மன் ஆலய அறங்காவலர் சபைத் தெரிவு கடந்த 25 ஆம் திகதி நடைபெற்றது.

தலைவராக முன்னாள் வடக்கு, கிழக்கு மாகாணச் செயலாளர் க.பரமலிங்கம் செயலாளராக ந. மோகனரூபன், பொருளாளராக கோ. வாமதாஸன் ஆகியோரும் 9 சபை உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர். (175)

# வெள்ளம் நிறைந்த வயல்கள் சிறுதானியச் செய்கை பாதிப்பு

(தென்மராட்சி)

தற்போது தென்மராட்சி பகுதியில் சிறுதானியச் செய்கை மேற்கொள்வதில் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

அண்மையில் பெய்த மழையினால் நெல்வயல்களில் வெள்ளம் ஏற்பட்டிருந்தது தற்போது வெள்ள நீரிலும் அறுவடைகள் மேற்கொள்ளப்பட்டாலும் அறுவடையின் பின்னரான சிறுதானியச் செய்கை உடன் மேற்கொள்ள முடியாத வகையில் வெள்ளம் தேங்கியுள்ளதாக விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

பயறு, கௌப்பி, உழுந்து போன்ற சிறுதானியங்கள் இந்த ஈரலிப்பில் விதைக்க முடியாத நிலை காணபபடுவதால் போகம் மாறி சிறு தானியம் மேற்கொளவதன் மூலம் அதிக விளைச்சலை பெற முடியாமல் போகலாம் என்றும் விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

ஈரலிப்பான நிலங்களில் உழவு இயந்திரத்தின் மூலம் உழுது பண்படுத்த முடியாமல் இருப்பதாகவும், இதனால் விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டிருப்பதாகவும் விவசாயிகள் பலரும் கவலை வெளியிட்டுள்ளனர்.

# உதைபந்தாடிய சிறுவன் விபத்தில் மரணம்

மன்னார் சிலாபத்துறை பிரதேசத்திலுள்ள பாடசாலை ஒன்றில் உதைபந்தாட்டம் விளையாடிக் கொண்டிருந்த சிறுவன் ஒருவர் விபத்தின் போது உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவத்தின் போது 10 வயதான சிறுவன் ஒருவனே உயிரிழந்துள்ளதாக சிலாபத்துறை பொலிஸார் தெரிவித்தனர்.

விளையாட்டு மைதானத்தில் அலங்கார வேலைப்பாடுகளுக்காக வைக்கப்பட்டிருந்த இரும்புக் குழாய் ஒன்று சிறுவனின் மீது விழுந்தமையினால் இவ் விபத்து ஏற்பட்டுள்ளது.

சிறுவன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதன் பின்னர் நேற்று முன்தினம் இரவு உயிரிழந்துள்ளார்.

# மாணவர்களின் சாதனைகளுக்கு உடல் ஆரோக்கியமும் அவசியமானது

## வைத்திய கலாநிதி வேலாயுதம் கமலநாதன்

(வடமாராட்சி)

எமது உடலை ஆரோக்கியமாக வைத்திருந்தால் மாத்திரமே இணைபாட விதான செயற்பாடுகளில் குறித்த வெற்றியை அடையமுடியும். இதற்காக நல்ல போசாககான நிறையுணவுகளை உட்கொள்ளுதல் வேண்டும் என யாழ். போதனா வைத்தியசாலை வைத்திய கலாநிதி டாக்டர் வேலாயுதம் கமலநாதன் தெரிவித்துள்ளார்.

கம்பர் மலை வித்தியாலத்தின் மெய்வல்லுநர்ப் போட்டி அண்மையில் பாடசாலை மைதானத்தில் அதிபர் முத்துராசா ரவீந்திரன் தலைமையில் நடைபெற்றது. இதில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றுகையிலே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

பாடசாலை கல்விக்காலப் பருவத்தில் இணைபாட விதான செயற்பாடுகளான கல்வி, விளையாட்டு போன்ற செயற்பாடுகளில் சமாந்தரமாக செயற்படும் விதத்தில் மாணவர்களை வளர்த்தெடுக்க வேண்டும்.

இவற்றில் பாடசாலையில் நடைபெறுகின்ற பரிசளிப்பு விழா, விளையாட்டுப் போட்டி ஆகியன பிரதான நிகழ்வுகளாக அமைந்துள்ளன.

மாணவரின் உடல் ஆரோக்கியத்திற்கு விளையாட்டு நிகழ்வு அமையப் பெறுகின்றது. விளையாட்டுகளின் மூலமான உடற்பயிற்சி உடலை ஆரோக்கியமாக வைத்திருப்பதற்கு பெரும் பங்களிப்பாற்றுகின்றது.

இதனைவிடவும், விளையாட்டுப் போட்டிகள் மூலம் வெற்றி -தோல்வியை சமமாக மதிக்கின்ற நல்ல மனப்பாங்கும் விருத்தியடைகின்றது.

இத்தகைய சீரான உடற்பயிற்சியும், தளராத முயற்சியும், தன்னம்பிக்கையும் இருந்தால் விளையாட்டுக்களில் மாணவர்கள் வெற்றி இலக்கை அடைய முடியும்.

அந்த வகையில் இப்பாடசாலை மாணவி, மாகாண மட்டத்தில் முதலாமிடம் பெற்று தேசிய மட்டத்தில் போட்டியிலே பங்குபற்றியமை இதற்குச் சிறந்த முன்னுதாரணமாகும்.

இவ்வாறான மாணவர்களின் திறமைகளைப் புரிந்துகொண்டு அவர்களுக்கேற்ற முறையில் பாடத்தைப் போதித்து அவர்களை சமுதாயத்தில் உயர் நிலைக்கு கொண்டுவர ஆசிரியர்கள் பெரும் பங்காற்ற வேண்டும் என அவர் தெரிவித்தார். (116)

# மின்சார விநியோகத்தை வழங்குமாறு கோரிக்கை

(நயினாதீவு)

நயினாதீவு - 4 ஆம் வட்டாரப் பிரதேச மக்கள் மின் விநியோகத்தைப் பெறுவதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்ட போதிலும், இதுவரை மின்சார விநியோகம் வழங்கப்படவில்லை என மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

இப்பிரதேசத்திற்கான மின்சாரத்தை பெறுவதற்கு நயினாதீவு நாகபூசணி அம்மன் ஆலய அறங்காவலர் சபையினர் 3 இலட்சம் ரூபாவும், அப்பகுதி பொது மக்கள் ஒரு இலட்சத்து 20 ஆயிரம் ரூபாவும் சேர்த்து 4 இலட்சத்து 20 ஆயிம் ரூபா மின்சார சபைக்கு வழங்கப்பட்டுள்ளது.

எனினும், வழங்கப்பட்ட 4 மாதங்கள் கடந்துள்ள நிலையில் இதுவரை இப்பிரதேசத்திற்கு மின்சாரம் வழங்கப்படவில்லை எனவும், இதனால் கல்வி நடவடிக்கைகள், அன்றாடம செயற்பாடுகள் என்பனவற்றை முன்னெடுக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. எனவே இப்பிரதேச மக்களின் மின்சார தேவையைக் கருத்திற் கொண்டு மின்விநியோகத்தை விரைந்து வழங்க உரியவர்கள் நடவடிக்கை எடுக்கவேண்டும் என மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (175)

# தொங்கும் மின் வயரால் அபாயத்தில் மக்கள்

(நயினாதீவு)

நயினாதீவு 8 ஆம் வட்டாரப் பகுதியில் மரத்திலான மின்சாரத்தூண்களே உள்ள நிலையில், மின்விநியோக வயர்கள் கீழே தொங்குவதால் மின்தாக்கம் ஏற்படும் அபாயம் காணப்படுவதாக அப்பகுதி மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.


நயினாதீவு பிரதேசத்தில் மின விநியோகத்திற்காக கொங்கிறீற் தூண்கள் தற்போது போடப்பட்டு வரும் நிலையில் இப்பிரதேசத்தில் முன்னர் போடப்பட்ட மரத்தூண்களில் மின் வயர்கள் பொருத்தப்பட்டு மின்விநியோகம் வழங்கப்பட்டது.

எனினும் தற்போது மரத்தூண்களில் பொருத்தப்பட்டுள்ள வயர்கள் கீழே தொங்கிய நிலையில் காணப்படுவதால் வீதியால் செல்பவர்கள் மின்தாக்கம் ஏற்பட்டும் அபாயத்துடன் செல்வதாக தெரிவிக்கப்படுகிறது. (175)

# மகளிர்தின நிகழ்வு

(வேலணை)

யாழ்ப்பாணத்தில் எதிர்வரும் 8 ஆம் திகதி வெள்ளிக்கிழமை சர்வதேச மகளிர்தின விழாவை மிகச்சிறப்பான முறையில் கொண்டாடுவதற்கு ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன. யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள 15 பிரதேச செயலகங்கள், உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் உள்ள மாதர் அபிவிருத்திச் சங்கங்களினது சமாசமானது இந்த விழாவினை மிகப் பிரபல்யமாகக் கொண்டாடுவதற்கான முன்னேற்ற நடவடிக்கைகளை எடுத்து வருவதாக, சமா சத்தினது தலைவர் நா.தனேந்திரன் தெரிவித்துள்ளார். (05)



யாழ் ஒஸ்மானியாக் கல்லூரியில் நடைபெற்ற மாணவர்கள் நிகழ்வில் கலந்துகொண்ட கல்லூரி அதிபர், ஆசிரியர், உலமா, யாழ். மாநகரசபை உதவிமேயர், உறுப்பினர்கள், நலன்விரும்பிகளுடன் மாணவர்கள் நிற்பதைக் காணலாம். (105)

# வடக்கில் ஆசிரிய ஆளணிப் பரம்பல் சமச்சீராக அமைந்துள்ளதா?

## இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கம் சுட்டிக்காட்டு

(யாழ்ப்பாணம்)

வடமாகாணத்தில் சகல கல்வி வலயங்களிலும் ஆசிரியர் பற்றாக்குறை காணப்படுகின்றமையால் வடமாகாண மாணவர்களின் கல்வி நடவடிக்கைகள் பின்தங்கிய நிலையில் செல்வது கவலைக்குரிய விடயமாகும் என இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது. வடமாகாணப் பாடசாலைகளில் போதிய ஆசிரியர்கள் இல்லை. வடமாகாண அத்தனை கல்வி வலயங்களிலும் ஆசிரிய பற்றாக்குறை நிலவுகின்றது. இதற்கான வெற்றிடங்களை நிரப்புவதற்கு பலதடவைகள் நாம் தகவல்களை வழங்கினோம். இந்த நியமனங்கள் எவையும் நடைபெறவில்லை. முல்லைத்தீவு மாவட்டத்தில் இருநூறுக்கு மேற்பட்ட ஆசிரியர்கள் பற்றாக்குறையாக உள்ளனர். அந்தப் பிரதேசத்தைப்பற்றியும், அங்குள்ள மாணவர்கள் பற்றியும் எவரும் சிந்திப்பதாக இல்லை. 539 வன்னிப்பிரதேச தொண்டராசிரியர்களின் நியமனத்தைத் துரிதப்படுத்துங்கள் என்று பல தடவைகள் கூறிவிட்டோம். மாறாக வயது முதிர்ந்த, நோய்வாய்ப்பட்ட பெரும்பாலான பெண் ஆசிரியர்களை வலிகாமம், வடமராட்சி, தென்மராட்சி, யாழ்ப்பாணம் ஆகிய கல்வி வலயங்களில் இருந்து வன்னிப்பிரதேச பாடசாலைகளுக்கு அனுப்புமாறு அழுத்தங்கள் வழங்கப்படுகின்றன. கீழுள்ள அட்டவணைப்படி

| வலயம் | அங்கீகரிக்கப்பட்ட ஆசிரிய ஆளணி | தற்போது உள்ள ஆசிரியர்கள் | பற்றாக்குறை ஆசிரியர்கள் |
|---|---|---|---|
| தீவகம் | 662 | 570 | 92 |
| யாழ்ப்பாணம் | 2018 | 1910 | 108 |
| தென்மராட்சி | 798 | 788 | 10 |
| வடமராட்சி | 1368 | 1211 | 157 |
| வலிகாமம் | 2006 | 1852 | 154 |
| கிளிநொச்சி | 1763 | 1581 | 182 |
| மடு | 475 | 393 | 82 |
| மன்னார் | 1065 | 1055 | 10 |
| முல்லைத்தீவு | 1122 | 903 | 219 |
| துணுக்காய் | 604 | 516 | 88 |
| வவுனியா வடக்கு | 699 | 561 | 138 |
| வவுனியா தெற்கு | 1404 | 1252 | 152 |
| மாகாண மொத்தம் | 13984 | 12592 | 1392 |

பற்றாக்குறையான இடங்களில் இருந்து ஆசிரியர்களை அனுப்புவது என்பது அதிகாரிகளுக்கு முடியாத காரியம் என்பதனை எவரும் புரிந்துகொள்வதாக இல்லை. உதாரணமாக வலிகாமம் கல்வி வலயத்தில் இருந்து இம்முறை நூற்றைம்பதுக்கு மேற்பட்ட ஆசிரியர்கள் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

இன்னும் நூற்றுக்கு மேற்பட்டவர்கள் தெரிவுசெய்யப்பட்ட நிலையில் உள்ளனர். ஏற்கனவே நூற்றைம்பது ஆசிரியர்கள் பற்றாக்குறையாக உள்ள நிலையில் இங்கிருந்து ஆசிரியர்களை அனுப்புவது எப்படிச் சாத்தியமாகும். உதாரணமாக பத்துக்கு மேற்பட்ட ஆங்கில ஆசிரியர்கள் எடுக்கப்பட்டு இருவரே கொடுக்கப்பட்டுள்ளனர்.

யுத்தத்தின் பின்னர் மீளமைப்பு என்பது கல்விக்கு இல்லையா? கல்விப்புலம் சார்ந்தவர்களுக்கு இல்லையா? பெறுகின்ற வேதனத்தில் சீவியமே நடாத்தமுடியாத நிலையில் உள்ள எமக்கு வடமாகாணத்திற்கு என்று பிரத்தியேகமான நடைமுறைகளைக் கொண்டுவர முடியாதா? ஆசிரியரின் அடிப்படைச் சம்பளம் ஆகக்குறைந்தது முப்பதாயிரமாவது வழங்க வேண்டுமென்று எத்தனை தடவைகள் கோரிக்கை விடுத்தோம்.

எதனையும் செய்து தராமல் கட்டாயப்படுத்தி கல்வியை வழங்கு என்று சொல்லுவதற்கு கல்வி ஒன்றும் திண்ம, திரவப் பொருளல்ல என்பதனை அனைவரும் புரிந்துகொள்ள வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மாதிரி சிறுவர் நாடாளுமன்றம் வடக்கில் 25 மாணவர்கள் தெரிவு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டச் செயலகம், தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை, லீட்ஸ் நிறுவனம் ஆகியன இணைந்து நடத்தவுள்ள வடமாகாணத்திற்குட்பட்ட பாடசாலைப் பிள்ளைகளுக்கான மாதிரி நாடாளுமன்ற நிகழ்விற்கு 25 மாணவர்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

மாணவர்களின் விபரம்வருமாறு,

சு.கோபிநாத், ச.டிசாந்தன் (யாழ். மத்திய கல்லூரி), க.பரமேஸ்வரன் (யாழ். வேம்படி மகளிர் கல்லூரி), தி.செந்தூரன் (யாழ்ரன் கல்லூரி), அ.சாம்பவி (பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப் பாடசாலை), ந.டெனிஸ் (மானிப்பாய் இந்துக் கல்லூரி).

ஆ.ஆனந்த பைரவி (மானிப்பாய் இந்து மகளிர் கல்லூரி), க.பிரசன்னா (கொக்குவில் இந்துக கல்லூரி), ஸ்ரீ.லக்சனா (வசாவிளான் மத்திய மகா வித்தியாலயம்), இ.நிசாந்தி (இந்து மகளிர் கல்லூரி), பு.தனுசன் (புனித பத்திரிசியார் கல்லூரி), கே.கொன்சிற்றா (இராமநாதன் மகளிர் கல்லூரி), ரி.அனோஜன் (நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம்), சி.அனோஜிதா (சுழிபுரம் விக்டோறியாக் கல்லூரி).

அ.டன்ஸ்ரன் (புனித அந்தோனியார் கல்லூரி ஊர்காவற்துறை), ர.தமிழரசி, எம்.ஏ. பாத்திமா ஹஸ்னா (மன். சித்திவிநாயகர் இந்துக் கல்லூரி), பி.திபிசா (புனித சேவியர் பெண்கள் கல்லூரி), கு.விதுர்ஜா, மோ.டிலோஜினி (கிளி.புனித திரேசா பெண்கள் கல்லூரி) ம.கேசனா (கிளிநொச்சி மகா வித்தியாலயம்), க.கேதா (கிளி. முருகானந்தாக் கல்லூரி), நஜீம் முகமட் நஜாத் (மு.வித்தி யானந்தாக் கல்லூரி), சி.பவதாரணி (வவு.இறம்பைக்குளம் மகளிர் மகா வித்தியாலயம்), ப.தயானி (வவு.சைவப் பிரகாச மகளிர் கல்லூரி).

வெற்றியின் போது கை தட்டும் அந்த பத்து விரல்களை விட, தோல்வியின் போது கண்ணீர் துடைக்கும் ஒரு விரலுக்கே மதிப்பு அதிகம். பொன்மொழி

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.thinamurasu.net

## 'மகாசமுத்திரத்தில் நானும் ஒரு துளி'!

இலங்கையிலிருந்தும் இந்தியாவிலிருந்தும் புலம்பெயர்ந்து சென்று வெளிநாடுகளில் உள்ள தமிழர்களின் எண்ணிக்கை இன்று பத்து லட்சத்தைத் தாண்டிவிட்டதாகச் சொல்கிறார்கள். அமெரிக்க, ஐரோப்பிய நாடுகளில் மனிதவளம் பற்றாக்குறை என்பதால் வந்தாரை வரவேற்கும் பண்பை அந்நாடுகளில் சட்டமாகவும் இயற்றி வைத்திருக்கிறார்கள்.

இதுதவிர, பல்லின மக்களின் கூட்டுவாழ்க்கை சார்ந்த மானுட இலட்சியமும் இந்த வரவேற்புக்குக் காரணம். வெவ்வேறு மக்கள் குழுக்களின் கலாசாரத்தை, மனிதப் பழக்கங்களை, வாழ்க்கை முறைகளை ஒருங்கிணைத்த வானவில் அழகை உருவாக்குவது மனித மேன்மையாகப் பார்க்கப்படுகிறது.

வேறு வேறு மொழிகளைப் பேசுபவர்கள், வித்தியாசமான கலாசாரங்களைக் கொண்டவர்கள், மாறுபட்ட வாழ்வுக் கோலங்களைக் கொண்டவர்கள் ஒரே நாட்டுக்குள் சேர்ந்தொன்றாய் வாழமுடிந்தால் அதுவே மனித நாகரிகத்தின் உன்னதங்களை உணர்த்துவதாகும் என்பது இன்றைய பூவுலகின் நம்பிக்கை.

எனவே புலம்பெயர்ந்து செல்பவர்கள் வரவேற்கப்பட்டார்கள். சொந்த நாட்டில் நன்கு வாழ முடியாது என நினைத்தவர்களுக்கு இந்த மேற்கு நாடுகள் சொர்க்கமாக தோன்றியது. இங்கிலாந்தில் இருந்து வந்தவர்கள் உருவாக்கிய நாடு அமெரிக்கா. எனவே அந்த நாடு வேற்று நாட்டினர் வருகையைத் தடுக்கவில்லை. வருடா வருடம் 'கிறீன் கார்ட்'களை வழங்கியது.

பிரச்சினைக்குப் பின்னர் நம்மில் பெரும்பான்மையோரைத் தாங்கிக் கொண்டது கனடா. அதற்கு முன்பே சீனர்கள் சென்றுவிட்டார்கள். வருடத்திற்கு இத்தனை பேர் என்று கட்டாய வரவேற்பளிக்கிறது அந்த நாடும்.

அடுத்த சொர்க்கம் ஐரோப்பா. வந்தேறிகள் என்று ஒதுக்காமல் உரிமைகளும் சலுகைகளும் வழங்கும் தாராளமான சட்டங்கள் அங்கு அமுலில் உள்ளன. மொத்த மக்கள் 73 கோடியில் பத்து சதவீதம் புலம்பெயர்ந்து சென்று குடியேறியோர்தான். நான்கு கோடி மக்கள் வசிக்கும் ஸ்பெயினில் 14 சதவீதத்துக்கு மேல் வெளிநாட்டினர்.

மற்றவர்களைச் சகித்து, மற்றவர்களின் இருப்பை அங்கீகரித்து, அந்த பன்மைத்துவ வாழ்வில் மகிழ்ச்சியடைதலே இன்று நாம் கற்றுக்கொள்ள வேண்டிய கலை. மாறாக, நம் வீட்டு வாசற்படிக்குப் புறத்தே உள்ள பகுதியை அந்நிய உலகமாகவே பார்க்கும் பழக்கத்திற்கு இங்கு நாம் ஆட்பட்டிருக்கிறோம். 'நான்', 'என் வாழ்க்கை' என்பதற்கு அப்பால் சிந்திக்காதவர்களாக நாமிருப்பது பற்றியும், எனக்காக, என் குடும்பத்திற்காக என்ற அளவிற்குமேல் யோசிக்காமல் விடுவது பற்றியும் வெட்கப்பட வேண்டும்.

சமூகமனிதர்கள் என்ற வகையில் நமது கடமை எதுவாக இருக்க வேண்டும் என்று தேர்ந்து கொள்வதும், அந்தக் கடமைகளைச் செய்வதில் காணும் திருப்தியும் நம் சந்தோஷங்களாதல் வேண்டும். பல்லுயிர்களதும் கூட்டு வாழ்வில் அழகுபெறும் ஒரு பூங்கா மாதிரியான வாழ்க்கையே மனிதர்களாகிய நம் வாழ்வுச் சூழலையும் அழகுபடுத்தும்.

மனித உரிமை, மானுட நேயம் என்பதையெல்லாம் பேச்சளவில் வைத்துக் கொண்டிருக்கிறோமே தவிர, இங்கு நமக்குள் 'மானுடம்' உருப்பெறவில்லை. தனித்தனி மனிதர்களாக சுயநலப் பித்துப் பிடித்தவர்களாகவே அலைந்து கொண்டிருக்கிறோம். வெளி உலகம் ஒன்று இருப்பதையே மறந்து வருகிறோம்; இருந்தாலும் அது நமக்காகவே இருக்க வேண்டும் என்று நினைக்கிறோம்.

தன்னளவிலேயே சுருங்கிக் கொள்ளாமல், பிறரும் சேர்ந்ததாக இந்த வாழ்க்கையை – உலகைப் பார்ப்பதிலேயே நமக்கான பெரிய மகிழ்ச்சியை ஏற்படுத்திக்கொள்ள முடியும். 'மகா சமுத்திரத்தில் நானும் ஒரு துளி' என்ற அளவில் வாழ்க்கையைப் புரிந்துகொள்ள வேண்டும்.

- ஆசிரியர்

# வடக்கில் தேர்தல் நடந்தால் சர்வதேச கண்காணிப்பு தேவை

## முந்திக்கொள்கிறது பிரித்தானியா

வடக்கில் மாகாணசபைத் தேர்தல் நடைபெற்றால் அங்கு நிச்சயம் சர்வதேச கண்காணிப்பு அவசியம் தேவைப்படும் என்றும் வடமாகாண சபைத் தேர்தலின் போது வெளிநாட்டு கண்காணிப்பாளர்கள் கடமையில் ஈடுபடுத்தப்பட வேண்டுமென பிரித்தானியா கோரியுள்ளது. இந்த ஆண்டு செப்ரெம்பர் மாதமளவில் வடமாகாணத்தில் தேர்தல்கள் நடைபெறவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வடக்கில் சுயாதீனமானதும், நீதியானதுமான முறையில் தேர்தல் நடத்தப்பட வேண்டியது அவசியமானது என பிரித்தானிய அமைச்சர் சயிடா வாராசீ தெரிவித்துள்ளார். அண்மையில் பிரித்தானியாவில் நடைபெற்ற க்ளோபல் தமிழ் போரம் மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றிய போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

எதிர்வரும் நவம்பர் மாதம் இலங்கையில் நடைபெறவுள்ள பொதுநலவாய நாடுகள் தலைவர்கள் மாநாட்டில் கலந்து கொள்வதா இல்லையா என்பதனை இன்னமும் பிரித்தானியா தீர்மானிக்கவில்லை என அவர் தெரிவித்துள்ளார்.

உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழு பரிந்துரைகள் முழுமையாக அமுல்படுத்துவதன் மூலம் நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்த முடியும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

# இரண்டு தெரிவுகளே உள்ளதால் எதை செய்யப்போகிறது அரசு

## கேட்கிறது ஐ.தே.க.

(கொழும்பு)

அரசுக்கு இப்போது இரண்டு தெரிவுகள் மட்டுமே உள்ளன. உலகின் புதிய நீரோட்டத்தில் இணைவது அல்லது சர்வதேசத்திற்கு அடிபணிவது. இதில் அரசு எதைச் செய்யப்போகிறது என்று ஐக்கிய தேசியக் கட்சி கேள்வி எழுப்பியுள்ளது.

சர்வதேச அழுத்தத்தைத் தவிர்ப்பதற்கு அரசாங்கம் ஜனநாயகத்தை நோக்கிப் பயணத்தை ஆரம்பிக்க வேண்டுமென ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்தின் வெளியுறவுக கொள்கைகள் குறித்து திருப்தி அடைய முடியாது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தூதுவரை சுட்டுக் கொலை செய்யும் கொள்கைக்கு நிகரான நிலைப்பாட்டையே அரசாங்கம் கொண்டிருப்பதாகக் குறிப்பிட்டுள்ளார். அரசாங்கத்தின் பிழையான வெளியுறவுக் கொள்கையே சர்வதேச ரீதியான அழுத்தங்களுக்கு பிரதான ஏதுநிலை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழு பரிந்துரைகளை அமுல்படுத்தல், பொருத்தமான அரசியல் தீர்வுத் திட்டமொன்றை அமுல்படுத்தல் போன்றவை குறித்து அரசாங்கம் கூடுதல் கவனம் செலுத்த வேண்டுமென அவர் வலிறுயுத்தியுள்ளார். 18 ஆம் திருத்தச் சட்டத்தை இரத்து செய்து, சுயாதீன ஆணைக் குழுக்களை அமுல்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென அவர் குறிப்பிட்டுள்ளார்.

தற்போதைய சூழ்நிலைக்கு அரசாங்கம் எவரையும் குற்றம் சுமத்த முடியாது எனவும், சகல பிரச்சினைகளுக்கும் அரசாங்கமே பொறுப்பு எனவும் அவர் தெரிவித்துள்ளார். குற்றச் செயல்களுக்கு தண்டனை விதிக்கப்படாத நிலைமை நீடித்து வருவதாகவும், இதனை ஆரோக்கியமான சூழ்நிலையாகக் கருத முடியாது எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

நாட்டின் ஜனநாயகம் குழிதோண்டி புதைக்கப்பட்டுள்ளதாகவும், முழுமையாக எதேச்சாதிகாரம் நிலவி வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார். சர்வதேச நாடுகளுடன் ஒத்துப் போக முடியாத நிலைமையே இன்று சர்வதேச நாடுகளின் அழுத்தங்கள் ஏற்படக் காரணம் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அரசாங்கம் சர்வதேச சமூகத்திற்கு அளித்த வாக்குறுதிகளை உரிய முறையில் நிறைவேற்றத் தவறியுள்ளதாகவும், இதன் காரணமாகவே பல்வேறு நெருக்கடி நிலைமைகள் ஏற்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## சிகரெட்டுக்கள் சிக்கின

சட்டவிரோதமான முறையில் நாட்டிற்குள் எடுத்துவந்த சுமார் 500 இலட்சம் பெறுமதியான சிகரெட்டுக்கள் சுங்க அதிகாரிகளினால் கைப்பற்றப்பட்டுள்ளன.

இந்த சிகரெட்டுக்கள் டுபாயிலிருந்து இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்டுள்ளன.

எட்டுப் பெட்டிகளில் அடைக்கப்பட்டுள்ள 20 இலட்சம் சிகரெட்டுக்கள் இவ்வாறு இறக்குமதி செய்யப்பட்டுள்ளன.

இந்த சட்டவிரோத வியாபாரத்தில் துறைமுக அதிகாரி ஒருவரும் சம்பந்தப்பட்டுள்ளதாக சுங்க அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

## மனித உரிமைப் பேரவையால் அரசுக்கு ஆபத்து நேராது

ஐ.நா.மனித உரிமைப் பேரவை மாநாட்டினால் இலங்கை அரசாங்கத்திற்கு எவ்வித பாதிப்பும் கிடையாது என ஜே.வி.பி தெரிவித்துள்ளது.

காலனித்துவ ஆட்சியாளர்களின் நோக்கங்களை நிறைவேற்றிக் கொண்டிருக்கும் இந்த அரசாங்கத்திற்கு, எவ்வித பாதிப்பும் கிடையாது என ஜே.வி.பி நாடாளுமன்ற உறுப்பினர் அனுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் அமைப்பு என்பது சுயாதீனமான அமைப்பாக கருத முடியாது. கடந்த காலங்களில் ஆட்சி செய்த அரசாங்கங்களைப் போன்றே இந்த அரசாங்கமும் காலனித்துவ ஆட்சியாளர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்கின்றது.

இராஜதந்திர உறவுகளில் குறைபாடுகள் காணப்பட்டாலும், ஏகாதிபத்திய ஆட்சியொன்றை இந்த அரசாங்கம் முன்னெடுக்கின்றது என அனுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

# கச்சதீவு யாருக்குச் சொந்தம்? இராமேஸ்வரத்தில் சமுத்திரப்போர்

## நூறு பேர் மடக்கிப்பிடிப்பு

(இராமேஸ்வரம்)

தமிழர்களின் உரிமையை நிலைநாட்டக் கோரியும், கச்சதீவை மீட்கக் கோரியும் இராமேஸ்வரத்தில் கடலில் இறங்கிப் போராட்டம் நடத்திய மக்கள் விடுதலைக் கட்சியினர் 100 பேர் கைது செய்யப்பட்டனர்.


மக்கள் விடுதலைக் கட்சியைச் சேர்ந்த 100 பேர் நேற்று முன்தினம் காலை இராமேஸ்வரம் சென்றனர். அவர்களை பொலிஸார் தடுத்து நிறுத்தினர். இந்தயும் மீறி அவர்கள் அனைவரும் அக்னி தீர்த்தக் கடலில் இறங்கி போராட்டத்தில் ஈடுபட்டனர்.


அவர்களை கைது செய்த பொலிஸார் வாகனங்களில் ஏற்ற முயன்றனர். அப்போது சிலர், ஜனாதிபதி ராஜபக்ஷவின் உருவப்பொம்மையை எரித்து எதிர்ப்புத் தெரிவித்தனர். அவர்களையும் பொலிஸார் கைது செய்தனர்.

கச்சதீவை மீட்டால் மட்டுமே மீனவர் தாக்குதலை நிறுத்த முடியும் என முழக்கமிட்டனர். கச்சதீவை மீட்கக் கோரி திடீரென மக்கள் விடுதலைக் கட்சியினரின் போராட்டத்தால் இராமேஸ்வரத்தில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

**இந்தியா - சீனா இடையேயான இரு தரப்பு வர்த்தக உறவானது 2015ஆம் ஆண்டில் 100 பில்லியன் டொலராக உயரக் கூடும் என்றும் மதிப்பிடப்பட்டிருக்கிறது. அதேவேளை, இலங்கை - சீனா இடையேயான இருதரப்பு வர்த்தக உறவு என்பது இதில் 10இல் ஒரு பங்கு அளவுக்குத்தான் இருக்கும்.**









# சர்வதேச நாடுகள் என்ன செய்யும்?

தற்ஸ்தமிழ் தளத்திலிருந்து

இலங்கையில் சீனா கால் பதித்துவிட்டது என்று சொல்லிக்கொண்டு இலங்கை அரசுக்கு ஆதரவாக இந்திய மத்திய அரசும், எதிராக தமிழ்த் தேசியவாதிகளும் பேசி வருகின்றனர். உண்மையில் இலங்கை வழியே சீனாவால் இந்தியாவுக்கு பேராபத்து காத்திருக்கிறதா? நிச்சயமாக ஒருபோதும் ஆபத்து வரவே வராது என்பதை உறுதியாகச் சொல்கின்றனர் அரசியல் பார்வையாளர்கள்.

முதலில் இந்தியாவுக்கும் சீனாவுக்கும் இடையே போர் வருமா? நிச்சயமாக இரு நாடுகளிடையேயும் போர் வராது என்றே கூறப்படுகிறது. இரு நாடுகளிடையே ஜம்மு காஷ்மீர் எல்லையிலும் அருணாச்சல பிரதேச பகுதியிலும் பதற்றங்களும் முட்டல்களும் இருந்தாலும் இதற்கு அப்பால் இருநாடுகளுமே பொருளாதார நலன்களின் சீரான ஒத்துழைப்பை முதன்மையானதாகத்தான் கொண்டு வருகின்றன.

இதற்கு உதாரணமாகஒரு விஷயம் சுட்டிக்காட்டப்படுகிறது. தென்சீனக் கடலில் வியட்நாமுடன் இணைந்து எண்ணெய் அகழாய்வுப் பணிகளை இந்தியா எடுத்துக் கொண்டிருந்ததால் இந்தியா - சீனா இடையேயான உறவில் சிக்கல் உருவான அதே நேரத்தில் இன்னொரு நிகழ்வும் நடந்தது. இந்திய நிறுவனங்கள் சீன வங்கியிடமிருந்து 1 பில்லியன் டொலர் வரை கடன் வாங்கிக் கொள்ள இந்திய நிதி அமைச்சகம் அனுமதி கொடுத்தது.

நாட்டின் வெளியுறவுத்துறை அமைச்சகம் மோதிக் கொண்டிருக்க நிதி அமைச்சகமோ நட்பு பாராட்டிக் கொண்டிருந்தது. இந்தியா - சீனா இடையேயான இருதரப்பு வர்த்தக உறவானது 2015ஆம் ஆண்டில் 100 பில்லியன் டொலராக உயரக் கூடும் என்றும் மதிப்பிடப்பட்டிருக்கிறது. அதேவேளை, இலங்கை - சீனா இடையேயான இருதரப்பு வர்த்தக உறவு என்பது இதில் 10இல் ஒரு பங்கு அளவுக்குத் தான் இருக்கும்.

இந்தியாவும் சீனாவும் ஒரேஒரு விஷயத்தில் தெளிவாக இருக்கின்றன. இவ்வளவு அரும்பாடுபட்டு உருவாக்கி வரும் பொருளாதார வளத்தை ஒரு போரின் மூலமாக ஒட்டுமொத்தமாக நிர்மூலமாக்கிவிடக் கூடாது என்பது தான்! இதில் மிகக் கவனமாக இருப்பதும் சீனாதான்! இதனால்தான் இன்னும் எத்தனை ஆண்டுகளுக்கும் பேச்சுவார்த்தையை நடத்துவார்களே தவிர இருநாடுகளிடையே போர் வந்துவிடாது. சரி, எதற்காக இலங்கையை முட்டுக்கொடுத்துக் கொண்டிருக்கிறது சீனா? இந்தியாவை மிரட்டத்தானே. தாக்குதல் நடத்தத்தானே, என்கிறீர்களா, இல்லை.

சீனாவுக்கு முதன்மையான இப்போதைய ஒரே தேவை, மத்திய கிழக்கு நாடுகளில் இருந்து எரிபொருட்களை தமது நாட்டுக்கு எளிதில் எடுத்துச் செல்வது என்பது தான். "எளிதில்" எடுத்துச் செல்வது என்பது "தரைவழியே எடுத்துச் செல்வது" என்பதாகும். ஆனால் தற்போது வரை கடல் மார்க்கமாக மட்டுமே எடுத்துச்செல்ல வேண்டிய ஒரு நிலை சீனாவுக்கு இருக்கிறது.

இப்படி தமது நாட்டுக்கு எரிபொருள் எடுத்துச் செல்லும் பாதையில் இடையூறு கூடாது என்பதற்காக இந்தப் பாதைகளில் உள்ள நாடுகள் அனைத்திலுமே தளங்களை அமைத்திருக்கிறது சீனா. அதாவது இந்தியாவை சுற்றிய அனைத்து நாடுகளிலும் தமது தளத்தை நிறுவியிருக்கிறது. இதுதான் முத்துமாலைத் திட்டம். இதில் சீனா அதிகம் கண்டுகொள்ளாத முக்கியத்துவம் கொடுக்காத நாடுகளில் முதலிடமானது இலங்கைதான்.

மியான்மர், மாலைதீவு, பங்களாதேஷ் போன்ற நாடுகளில் அனைத்திலும் கால்பதித்துவிட்டு கட்டக் கடைசியாகத் தான் அது இலங்கையையும் தேர்ந்தெடுத்திருக்கிறது, அவ்வளவே! இப்பொழுது இமயமலையின் காரோகாம் கணவாய் வழியாக பலுசிஸ்தானின் கவ்தார் துறைமுகத்தை தரைவழியாக இணைக்கிற பாதையை போட்டுக் கொண்டிருக்கிறது சீனா. இது வெற்றிகரமாக முடிந்துவிட்டால் "சீனா" நிம்மதி பெருமூச்சு விட்டுவிடும்.

இலங்கையை பற்றியெல்லாம் அக்கறை கொள்ளாது என்றே கூறப்படுகிறது. அதுமட்டும் இல்லை... சீனாவை பொறுத்தவரையில் உலக நாடுகள் எதனோடும் அது ஒரு "நிலையான கொள்கையை" "நிலையான நட்பை" கொண்டதே இல்லை என்பதே சரித்திரம்.

1971ஆம் ஆண்டு ஐ.நா. சபையில் சீனாவுக்கு நிரந்த உறுப்பு நாடு அந்தஸ்துக்காக குரல் கொடுத்தது ஈராக். ஆனால் அதே ஈராக், 1991ஆம் ஆண்டு குவைத்தை ஆக்கிரமித்த போது மிகக் கடுமையாக வரிந்து கட்டிக்கொண்டு எதிர்த்தது. அடுத்த 12 ஆண்டுகளில் மீண்டும் தமது நிலையை மாற்றி, 2003ஆம் ஆண்டு ஈராக் மீதான அமெரிக்காவின் யுத்தத்தை எதிர்க்கிறது சீனா.

பிரான்ஸ், ஜேர்மனி, ரஷ்யாவுடன் இணைந்து பன்னாட்டுப் படைகள் வெளியேற வேண்டும் என்று குரல் கொடுத்தது சீனா. ஆனால் எல்லாம் முடிந்து அமெரிக்க ஆதரவுடன் புதிய ஈராக் அரசு அமைகிறது. அந்த அரசிடமிருந்தும் எண்ணெய் ஒப்பந்தங்களை சீனாவால் பெற முடிகிறது. பல பில்லியன் டொலரை ஈராக்கில் முதலீடு செய்ய முடிகிறது. இதே கதைதான் போரில் சிதைந்த லிபியா. லிபியாவின் சர்வாதிகாரியாக இருந்த கடாபிக்கு ஆயுதங்களை அதிகளவில் விற்பனை செய்தது சீனா. கடாபி அரசாங்கம் மூலம் பல முதலீடு செய்திருந்தது சீனா.

லிபியாவில் உள்நாட்டுப் போர் வெடித்த போது அங்கு இருந்த பல்லாயிரக்கணக்கான சீனர்களைப் பாதுகாப்பாக வெளியேற்ற வரலாறு காணாத வகையில் பெரும் பிரயத்தனத்தில் ஈடுபட்டது சீனா. லிபியாவில் கதை முடிந்தது.. கடாபி கொல்லப்பட்டார்... அமெரிக்காவின் ஆதரவுடனான புதிய அரசு அமைந்தது. இப்போது என்ன நடந்திருக்கும்? ஈராக்கின் கதையைப் போலத்தான். சுமார் 50 பில்லியன் டொலருக்கான ஒப்பந்தங்களை புதிய அரசிடமிருந்து பெற்றிருக்கிறது சீனா. சீனாவைப் பொறுத்தவரை தத்துவார்த்த நிலையா? தேச நலனா? எனில் தேச நலன் மட்டும்தான் அதற்கு முதன்மையானது.

இலங்கையில் இறுதிப் போர் முடிவடைந்து ஆண்டுகள் உருண்டோடிவிட்டன. இலங்கையின் களநிலைமையானது எதிர்கால

**எங்கெல்லாம் உள்நாட்டு யுத்தம் நடக்கிறதோ அங்கெல்லாம் இதைத்தான் நோர்வே செய்து கொண்டிருக்கிறது. இதைத்தான் சீனாவும் கையாள்கிறது. இந்தியாவும் கையாள்கிறது. எதிர்காலத்திலும் கையாளும்.**

இலங்கையில் என்ன நடக்கப் போகிறது என்பதை ஊகிக்கக் கூடியதாக இருக்கிறது.

இலங்கையில் தமிழ் - சிங்கள சமூகத்தினரால் இணைந்து மேற்கொள்ளப்படக்கூடிய அரசியல் நிகழ்ச்சியின் விளைவாக, இலங்கை அரசுக்கு எதிராக தமிழ் - சிங்கள இனங்கள் இணைந்து குரல் கொடுப்பதான சம்பவங்கள் தோன்றலாம். ஒருவேளை இன்னும் சில ஆண்டுகளில் இலங்கையானது இன்னொரு லிபியாவாக, ஈராக்காக, எகிப்தாக மாறுவதும் நடக்கலாம்.

ஆனால் அப்போது இலங்கை அரசை நிச்சயமாக சீனா காப்பாற்றாது.

மாறாக ஈராக்கிலும் லிபியாவிலும் செய்ததைப் போல இலங்கையில் புதியதாக உருவாகக் கூடிய அரசுடனும் இணக்கமான போக்கைக் கையாளும். அநேகமாக மன்னாரில் எண்ணெய் அகழாய்வுக்கான ஒப்பந்தங்களைப் பெற்று அமைதியாக தமது தேசத்துக்கான வர்த்தக நலன்களைத் தொடரலாம்.

இதற்கான தெள்ளத் தெளிவான ஒரு உதாரணமாக அரசியல் பார்வையாளர்களால் சுட்டிக்காட்டப்படுவது நோர்வேதான். நோர்வேயைப் பொறுத்தவரையில் அமெரிக்காவின் மென்மை முகமாக அரசியலில் சொல்லப்படுவது வழக்கம். இந்த நோர்வே குறித்து தமிழ் மக்களின் மனங்களில் ஒரு நம்பிக்கை பாத்திரம் விதைக்கப்பட்டிருக்கிறது. இவர்கள்தான் சமாதானப் பேச்சுக்களை முன்னெடுத்தவர்கள். தமிழர் பிரச்சினையை புரிந்து கொண்டவர்கள். கடைசிவரை துணை நின்றவர்கள் என்றெல்லாம் சொல்லப்படுகிறது. உண்மையில் அப்படியொன்றும் நோர்வே செய்துவிடவில்லை.

இலங்கை அரசுக்கும் புலிகளுக்கும் சமாதான ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டது 2002ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம்தான். ஆனால் 2001ஆம் ஆண்டே நோர்வே, இலங்கையில் மன்னார் வளைகுடா பகுதியில் எண்ணெய் வளம் குறித்த அகழாய்வுப் பணிகளுக்காக ஒப்பந்தத்தைப் பெற்று ஆய்வும் மேற்கொண்டது. ஒரு பக்கம் சமாதானப் பேச்சுக்கான நடுநிலைப் பாத்திரம். இன்னொரு பக்கம் இயற்கை வளத்தை அள்ளிச் செல்ல ஒரு பாத்திரம் என்ற வகையில்தான் நோர்வே செயற்பட்டது.

இங்குமட்டுமல்ல. எங்கெல்லாம் உள்நாட்டு யுத்தம் நடக்கிறதோ அங்கெல்லாம் இதைத்தான் நோர்வே செய்து கொண்டிருக்கிறது என்கின்றனர் அரசியல் பார்வையாளர்கள். இதைத்தான் சீனாவும் கையாள்கிறது. இந்தியாவும் கையாள்கிறது. எதிர்காலத்திலும் கையாளும்.

வேறு வழியில்லாமல் ஆயுதப் பயிற்சி கொடுக்கிறோம், அந்த உதவி செய்தோம், அப்படி தாங்குகிறோம் என்று சொல்லுகிற இந்திய "காங்கிரஸ்"வாதிகளுக்கும் தமிழர்களைக் கைவிட்டுவிட்டால் சீனாவால் இந்தியாவுக்கு ஆபத்து என்று சொல்லுகிற தமிழ்த் தேசியவாதிகளுக்கும் ஒரு உண்மை மட்டும் நன்றாக தெரியும்..... அது "ஆதிக்க" நாடுகள் காலம் காலமாக இன்னபிற தேசங்களைப் போலவே இலங்கை எனும் தேசத்தில் இப்போது தங்களது நலன்களுக்கான வலைவிரித்துக் காத்துக் கிடக்கின்றன என்பதுதான்!

# மக்களுக்கான கடப்பாடுகளை காலம் கடத்தாமல் நிறைவேற்றவேண்டும்

## இதுவே அமெரிக்கத் தீர்மானம்



(ஜெனீவா)

இலங்கை அரசு தனது நாட்டு மக்களுக்கான கடப்பாடுகளை தாமதமின்றி நிறைவேற்றுவதை ஊக்குவிப்பதே அமெரிக்கத் தீர்மானத்தின் முக்கிய நோக்கம் என்று அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் அறிவித்துள்ளது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையில் 2012 ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட தீர்மானத்தை முன் நகர்த்தும் வகையிலேயே புதிய தீர்மானம் கொண்டுவரப்பட்டு இருக்கின்றது என்றும் அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் அறிவித்துள்ளது.

வோஷிங்டனில் நடந்திய செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்ட ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்கு பதிலளிக்குமபோதே அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் பதில் பிரதிப் பேச்சாளர் பற்றிக் வென்ட்ரெல் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

2012 இல் கொண்டு வரப்பட்ட தீர்மானத்தில் இருந்து எவ்வாறு வேறுபட்டது என்று ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்கு பதிலளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் தற்போதைய அமர்வில், இலங்கைக்கு எதிரான தீர்மானம் ஒன்று கொண்டு வரப்படவுள்ளதாக குறிப்பிட்டிருந் தேன்.

நல்லிணக்கம் மற்றும் பொறுப்புக் கூறலுக்கு இலங்கை இன்னும் இன்னும் அதிகமாக செய்ய வேண்டும் அதனை ஊக்குவிக்கும் வகையிலேயே 2012 ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்ட தீர்மானத்தின் மீதே இந்த தீர்மானம் கொண்டு வரப்படும்.

இந்தத் தீர்மானமானது நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவது உள்ளிட்ட, தனது மக்களுக்கான கடப்பாடுகளை பின்பற்றுமாறு இலங்கை அரசாங்கத்தை கேட்டுக் கொள்ளும். இது தான் தீர்மானத்தின் உள்ளடக்கமாகும் இதற்கு நாம் அனுசரணை வழங்கி, ஆதரவு அளிப்போம் என்றார்.

# கேரளாக் கஞ்சாவுடன் மூன்று பேர் கைது

(கொழும்பு)



கேரளாக் கஞ்சா வைத்திருந்த மூவர் கற்பிட்டி பொலிஸாரால் கைது செயயப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்படும் போது இவர் களிடமிருந்து இரண்டு கிலோக் கிராம் கஞ்சா பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

இந்தக் கஞ்சாவை முச்சக்கர வண்டி ஒனறில் ஏற்றிச சென்றவேளை இவர்கள் மூவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களிடம் பொலிஸார் மேற்கொண்ட மேலதிக விசாரணைகளின் போது மேலும் 46 கிலோக் கிராம் கேரளாக் கஞ்சா கைப்பற்றப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் கற்பிட்டி மற்றும் புத்தளம் பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் என பொலிஸார் தெரிவித்தனர். சந்தேகநபர்கள் நேற்று முன்தினம் புத்தளம் நீதவான் நீதிமன்றில் ஆஜர் படுத்தப்பட்டனர்.

# முடிவுக்கு வந்தது பணிப் பகிஷ்கரிப்பு

(கொழும்பு)

கொழும்பு தேசிய வைத்தியசாலையின் வைத்தியர்கள் மேற்கொண்டிருந்த பணிப் பகிஷ்கரிப்பு நடவடிக்கை முடிவுக்கு கொண்டுவரப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் காலை 8 மணிக்கு பகிஷ்கரிப்பு நடவடிக்கை முடிவுக்கு கொண்டுவரப்பட்டுள்ளதாக அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் தேசிய வைத்தியசாலைகள் சபையின் உப தலைவர் என். எஸ். அபேகுணசேகர தெரிவித்தார்.

நேற்றுக் காலை ஒன்று கூடிய அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் தேசிய வைத்தியசாலைகள் சபையின் அதிகாரிகள் இந்த தீர்மானத்தை எடுத்துள்ளனர்.

எவ்வாறாயினும் தமது கோரிக்கைகள் நிறைவேற்றப்படவில்லையாயின் பகிஷ்கரிப்பு நடவடிக்கை தொடரும் என அவர்கள் தெரிவித்துள்ளனர்.

# புதிய பாணியில் போதைப்பொருள் வியாபாரம்; போலி மருத்துவர் மாட்டிக்கொண்டார்

## நீர்கொழும்பில் பரபரப்பு



(கொழும்பு)

போதைப் பொருளுக்கு மாற்றீடாகப் பயன்படுத்தப்படும் மாத்திரைகள் விற்பனை செய்தமை உட்பட மேலும் பல குற்றச்சாட்டுகள் தொடர்பில் நீதிமன்றில் ஆஜர்செய்யப்பட்ட போலி வைத்தியர் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

நீர்கொழும்பு - கிம்புலாபிட்டிய வீதி அக்கரபனக பிரதேசத்தில், தான் நடத்தி வந்த மருந்தகத்தில் இவ்வாறு போதைப் பொருட்களுக்கு மாற்றீடாக பயன்படுத்தப்படும் மாத்திரைகளை விற்பனை செய்யும் போது அவர் கைது செய்யப்பட்டார்.

இவர் நீர்கொழும்பு பிரதான நீதவானின் உத்தியோகபூர்வ வாசஸ்தலத்தில் நேற்றுமுன்தினம் ஆஜர்படுத்தியபோதே அவரை ஒன்றரை இலட்சம் ரூபா ரொக்கப் பிணையிலும் 60 இலட்சம் ரூபா சரீரப் பிணையிலும் விடுதலை செய்யுமாறு உத்தர விட்டார்.

நீர்கொழும்பு - அக்கரபனக பிரதேசத்தில் மருந்தகம் ஒன்றை நடத்தி வந்த ரத்னாயக்க முதியான்சலாகே அஜித் விபுல பணடார என்பவருக்கே இவ்வாறு பிணை வழங்கப்பட்டுள்ளது.

சந்தேக நபருக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ள "பி" அறிக்கையில் மூன்று குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளன.

தனியார் மருந்து விற்பனை நிலையங்களில் விற்பனை செய்ய தடைசெய்யப்பட்டுள்ள மாத்திரைகளை சட்டவிரோதமான முறையில் விற்பனை செய்ததாக கம்பஹா மாவட்ட சுகாதார பணிப்பாளர் காரியாலயத்தின் உணவு 'மற்றும் ஔடதங்கள் பரிசோதனை செய்யும் பிரிவினர் சந்தேக நபருக்கு எதிராக குற்றம் சாட்டி வழக்குத் தாக்கல் செய்துள்ளனர்.

இதே வேளை நீர்கொழும்பு பொலிஸ் குற்றத் தடுப்புப் பிரிவினர் சந்தேக நபருக்கு எதிராக இரண்டு குற்றச்சாட்டுக்களை சுமத்தியுள்ளனர். சந்தேக நபரை கைது செய்த இடத்தில் கைப்பற்றப்பட்ட தேசிய அடையாள அட்டைகள் தொடர்பாகவும் மற்றும் எந்தவித வைத்திய தகைமையும் இன்றி மருந்தகம் ஒன்றை நடத்தி வந்தமை தொடர்பாகவும் இரண்டு குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளன.

மூன்று குற்றச்சாட்டுக்கள் தொடர்பாகவும் தலா 50 ஆயிரம் ரூபா வீதம் ஒன்றரை இலட்சம் ரூபா ரொக்கப்பிணையிலும், தலா 20 இலட்சம் ரூபா வீதம் 60 இலட்சம் ரூபா சரீரப்பிணையிலும் விடுதலை செய்யுமாறு நீர்கொழும்பு நீதவான் உத்தர விட்டார்.

கம்பஹா மாவட்ட சுகாதாரப் பணிப்பாளர் காரியாலயத்தின் உணவு மற்றும் ஔடதங்கள் பரிசோதனைப் பிரிவினரின் குற்றச்சாட்டு தொடர்பான வழக்கு எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

நர்கொழும்பு பொலிஸ் குற்றத்தடுப்புப் பிரிவினரின் குற்றச்சாட்டுக்கள் தொடர்பான வழக்கு எதிர்வரும் ஜூன் மாதம் 6 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

சந்தேக நபரான போலி வைத்தியர் கடந்த ஜனவரி மாதம் 19 ஆம் திகதி கைது செய்யப்பட்டார்.

அனறைய தினத்திலிருந்து விடுக்கப்பட்ட பிணைக் கோரிக்கை மறுக்கப்பட்டு விளக்க மறியலில் வைக்கபட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# தவறான இலக்கு நோக்கி பயணிக்கிறது ஐ.நா.



(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் அமைப்பிற்கான, ஜெனிவா நிரந்தரப் பிரதிநிதி எச்.சுமார்க்கர் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் 22 ஆம் அமர்வுகளில் கலந்துகொண்டு உரையாற்றியபோது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

நியாயமற்ற முறையில் இலங்கையை இலக்கு வைத்து நவநீதம்பிள்ளை குற்றச்சாட்டுக்களை முன்வைத்துள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

# போதை மயக்கம் தந்த வினை நண்பனைக் கொலை செய்தவர் தலைமறைவு

(கொழும்பு)

அக்கரைப்பற்று பிரதேசத்தில் மதுபோதையில் நண்பர்கள் இருவருக்கிடையே ஏற்பட்ட மோதலில் ஒருவர் மற்றவரை கத்தியால் வெட்டிக்கொலை செய்துவிட்டு தப்பி ஓடியுள்ளதாக அக்கரைப்பற்று பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்ற இச்சம்பவத்தில் அக்கரைப்பற்று 6 ஆம் பிரிவு வெள்ளப்பாதுகாப்பு வீதியைச் சேர்ந்த 24 வயதுடைய இளைஞரான முகமட் முஸ்தப்பா பகாத் என்பவரே இவவாறு உயிரிழந்துள்ளார்.

நண்பர்களான இருவரும் சம்பவதினமான நேற்றுமுன்தினம் மாலையில் மதுபானத்துடன் அட்டாளைச்சேனை முல்லைத்தீவு பிரதேசத்திற்குச் சென்று மது அருந்திவிட்டு தமது வீடுகளிற்குச் செல்லும் வழியில் இருவருக்குமிடையே வாய்த்தர்க்கம் ஏற்பட்டுள்ளது.

இதன் பின்னதாக நணபரை மற்றவர் கத்தியால், கழுத்திலும் மார்பிலும் வெட்டியதையடுத்து அவர் சம்பவ இடத்தில் உயிரிழந்துள்ளார். இதனையடுத்து கத்தியால் வெட்டிய நபர் தப்பியோடி தலைமறைவாகியுள்ளார்.


இச் சம்பவத்தில் உயிரிழந்தவரின் சடலம் அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் கத்தியால் வெட்டிக்கொலை செய்துவிட்டு தலைமறைவாகியுள்ளவர் அதே வீதியைச் சேர்ந்த 22 வயதுடைய பசீர் என்று அழைக்கப்படும் ஆப்தீன் தஸ்லீன் என தெரிவிக்கப்படுகிறது.

# அடையாள அட்டை புதுப்பித்தல் புதிய நடைமுறை விரைவில்

(கொழும்பு)

தேசிய அடையாள அட்டையை 10 வருடங்களுக்கு ஒரு முறை புதுப்பிப்பதற்கான நடைமுறையொன்றை தயாரிப்பது தொடர்பில் ஆட்பதிவுத் திணைக்களம் ஆராய்ந்து வருகிறது.

இந்த விடயம் தொடர்பில் தற்போது கலந்துரையாடல்கள் இடம்பெற்று வருவதாக ஆட்பதிவுத் திணைக்களத்தின் ஆணையாளர் நாயகம் ஆர்.எம்.சரத்குமார் தெரிவித்துள்ளார்.




இலத்திரனியல் அடையாள அட்டையை அறிமுகப்படுத்தும் திட்டத்திற்கு ஒத்ததாக 10 வருடங்களுக்கு ஒரு முறை அடையாள அட்டையை புதுப்பிக்கும் நடவடிக்கை குறித்து கவனம் செலுத்தப்படுவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதனூடாக தமது புதிய தகவல்களை 10 வருடங்களுக்கு ஒரு முறை அடையாள அட்டையில் உள்ளடக்குவதற்கான வாய்ப்பு மக்களுக்கு ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளதாக ஆட்பதிவுத் திணைக்களத்தின் ஆணையாளர் நாயகம் மேலும் தெரிவித்துள்ளார்.

# சட்டத்தரணி மீது காலி மாவட்ட எம்.பி. தாக்குதல்

(கொழும்பு)

காலி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மொஹான் பீ.டி சில்வா மற்றுமொரு சட்டத்தரணி மற்றும் அமைச்சின் பாதுகாப்பு பிரிவினர் தன்மீது தாக்குதல் நடத்தியுள்ளதாக சட்டத்தரணியொருவர் முறைப்பாடு செய்துள்ளார்.

சட்டத்தரணி துஷார என்பவரே இவ்வாறு முறைப்பாடு செய்துள்ளதாக தெரிவித்த பொலிஸார், அவர் தற்போது கராப்பிட்டி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தனர்.

காலி ஸ்ரீலங்கா சுதந்திர சட்டத்தரணிகள் சங்கத்தின் தேர்தல் நேற்று முன்தினம் நடைபெற்றது.

அதில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே தன்மீது தாக்குதல் நடத்தப்பட்டதாக அவர் முறைப்பாடு செய்துள்ளார்.

இது தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினரிடம் கேட்டபோது, தனக்கும் இந்த சம்பவத்திற்கும் தொடர்பில்லை என்றும் குறித்த சட்டத்தரணியை சுற்றி பலர் இருந்ததாக நாடாளுமன்ற உறுப்பினர் தெரிவித்தார்.

# கல்விக்காக உதவிகளை வழங்குவதில் அமைச்சரின் பங்கு அளப்பரியது

## பாடசாலை அதிபர் புகழாரம்



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மாதகல் சென். ஜோசப் மகாவித்தியாலய புதிய விளையாட்டு மைதானத்தை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு திறந்து வைத்தார். தொடர்ந்து இல்ல மெய் வல்லுநர் போட்டியிலும் கலந்து கொண்டார்.

மகா வித்தியாலய அதிபர் வீ.நடராசா தலைமையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற மேற்படி நிகழ்வில் தலைமையுரையாற்றிய அதிபர், பாடசாலை அபிவிருத்திக்காக நாம் விடுத்த அனைத்து கோரிக்கைகளையும் அமைச்சர் ஏற்றுக்கொண்டுள்ளார்.

தற்சமயம் எமது பாடசாலையின் இப்புதிய மைதானத்திற்கு சுற்றுவேலி அமைக்க நாம் விடுத்த கோரிக்கைக்கும இணக்கம் தெரிவித்துள்ளார் என்றார்.

இங்கு உரையாற்றிய அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, இப்புதியமைதானம் வீதிக்கு அருகில் அமைந்துள்ள நிலையில் சுற்றுவேலிக்கு மேலதிகமாக மாணவர்கள் விளையாடும் பந்துகள் வீதிக்கு செல்லாமல் இருப்பதற்கு ஈ.பி.டி.பியின் செலவிலேயே வலை பொருத்தித் தரப்படும் எனத் தெரிவித்ததுடன், கிடைத்துள்ள இப்புதிய மைதானத்தினை பயன்படுத்தி விளையாட்டுத்துறையிலும் மாணவர்கள் தமது ஆற்றலை வளர்த்துக் கொள்ள வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார்.

நடைபெற்ற இல்ல மெய்வலலுனர் போட்டியில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கு பரிசில்கள் வழங்கப்பட்டமைக்கு மேலதிகமாக தேசிய கரப்பந்தாட்டப் போட்டியில் பங்குகொண்ட மாணவிகளின் அணியினருக்கும் அமைச்சர் பதக்கங்களை வழங்கியதுடன், தேசிய மட்டத்தில் வர்ணம் பெற்ற மாணவியையும் கௌரவித்தார்.

இந்நிகழ்வில் மாதகல் பங்குத்தந்தை எவ்.கனிஸ்ரியஸ்ராஜ், வலிகாமம வலயக் கல்விப் பணிப்பாளர் செ.சந்திரராஜா, வலி.தென்மேற்கு பிரதேச சபை எதிர்க்கட்சித் தலைவர் ஜீவா, அயல்பாடசாலை அதிபர்கள், பெற்றோர்கள், நலன்விரும்பிகள பழைய மாணவர்கள் எனப் பலரும் பங்கு கொண்டனர்.

# கலாசாரப்பேரவையினால் ஆவணக்காப்பகம் திறப்பு



(வடமராட்சி)

வடமராட்சி தெற்கு, மேற்கு கரவெட்டி பிரதேச செயலக கலாசாரப் பேரவையினால் எதிர்காலச் சந்ததியினருக்கு பயன்படும் விதத்தில் ஆவணக் காப்பகம் ஒன்று இயங்கி வருவதாக கரவெட்டி பிரதேச செயலர் எஸ்.சிவசிறி தெரிவித்துள்ளார். எழுத்தாளர்களின் ஆக்கங்கள் தாங்கிய புத்தகங்களும், கரவெட்டி பிரதேச செயலகத்திற்குட்பட்ட உள்ளூர் பொருளாதார வளம், கல்விச்செயற்பாடுகள் அதன் முன்னேற்றமும் பிரபல கல்வி மான்களின் வரலாற்று காவிய பின்னணித் தொகுப்புக்கள் அடங்கிய திருவுடையாள் மலர்களும், அகில இலங்கை ரீதியில் பிரபல்யம் வாய்ந்த இந்து ஆலயங்கள் மற்றும் உள்ளூர் பூர்வீக ஆலயங்களின் வரலாற்றுச் சுவடுகள் தாங்கிய சிவநெறி இறுவட்டும் புத்தகமும் அடங்கிய பல்வேறு அம்சப் புத்தகளுடன் ஓர் ஆவணக்காப்பகமாக இயங்கி வருகின்றது.

இதில் கரவெட்டி பிரதேச செயலக கலாசாரப் பேரவையினால் 'திருவுடையாள்' எனும் மலர் 2008ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு இதுவரையில் 4 புத்தகங்கள் பகுதி பகுதியாக வெளியிடப்பட்டு வருகின்றது. மேலும் : கரவெட்டி பிரதேசத்தினால் பண்டைக்கால தொல் பொருள்கள் மற்றும் அரும் பொருள் காட்சிப்படுத்தலுக்கான ஆவணத்தொகுப்பும் திரையில் வெளியிடப்படவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (116)

# காங்கேசன்துறை பொலிஸ் பிரிவில் குற்றச்செயல் புரிந்த 153பேர் கைது

(யாழ்ப்பாணம்)


யாழ். மற்றும் காங்கேசன்துறை பொலிஸ் பிரிவுகளில் கடந்தவாரம் பல்வேறு குற்றச்செயல்களின் பொருட்டும், பிடியாணை பிறப்பிக்கப்பட்டும் 153 பேர் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டிருந்ததாக காங்கேசன்துறை சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஈ.எம்.எம்.ஏக்கநாயக்க தெரிவித்துள்ளார்.

கடந்த வெள்ளிக்கிழமை யாழ்.பொலிஸ் நிலையத்தில் நடைபெற்ற வாராந்த செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டே அவர் இத்தகவலைத் தெரிவித்துள்ளார்.

இதேவேளை குற்றச் செயல்களைக்கட்டுப்படுத்தும் முகமாக பொலிஸார் இரவு நேர வீதி ரோந்து நடவடிக்கைகளை மேற்கொண்டுவருவதாகவும் தெரிவித்த அவர் இந்த நடவடிக்கைக்குப் பின்னர் பகல் வேளைகளில் இரண்டு வீடுகளில் விட்டை உடைத்து திருட்டு நடைபெற்றிருப்பதாகவும் தெரிவித்ததுடன் பகல் வேளையில் யாரிடமும் சொல்லாமல் வீட்டைப் பூட்டி விட்டுச் செல்பவர் களின் விடுகள் இவ்வாறு உடைக்கப்பட்டு திருட்டு நடைபெற்றதாகவும் தெரிவித்தார்.

அவ்வாறு வீட்டைப் பூட்டி விட்டுச் செல்பவர்கள் அயல் வீட்டுக்காரரிடம் சொல்லிவிட்டுச் செல்வதனால் இது போன்ற சம்பவங்களைத் தடுக்கலாம் என்றும் தெரிவித்தார். மேலும் ஆட்டுப்பட்டியில் சிலர் நவீன முறைகளைக் கையாண்டு ஆடுகளைத் திருடிவருவதாகவும் தெரிவித்தார். அவர்கள் ஆடுகளுக்கு உப்பைத்தின்னக் கொடுத்து அதனைக் சாதகமாய் பயன்படுத்தியே இவ்வாறு திருடிவருவதாகவும் தெரிவித்தார். அத்துடன் வீதி விபத்துக்களைக் குறைக்கும் முகமாக கொழும்பில் இருந்து வரும் நிபுணத்துவம் பெற்ற அதிகாரி, மாணவர்களுக்கும், பொது மக்களுக்கும் வீதி ஒழுங்கு குறித்து விழிப்புணர்வு வகுப்புக்களை நடாத்தவுள்ளதாகவும் தெரிவித்தார்.

இரவு நேரங்களில் வெளிச்சமின்றி துவிச்சக்கர வண்டிகளில் மக்கள் பயணிப்பதாகவும் கறுப்பு நிற உடையைத் தவிர்த்து வெள்ளை நிற உடைகளை அணிந்து செல்வதன் மூலமும், எதிரேவரும் சந்திகளைக் கவனிக்காது பயணிப்பதைத் தவிர்க்குமாறும் கேட்டுக் கொண்டார். (பா)



முழங்காவில் வைத்தியசாலையில் தங்கி சிகிச்சை பெறும் நோயாளர்களுக்கு முழங்காவில் அ.கிருஷ்ண ஆலய அறங்காவலர் சபையினர் சத்துணவுப் பொதிகளை வழங்குவதைக் காணலாம். (03)

# ஆசிய சிறுவர் மாநாட்டில் யாழ்.மாணவன் தெரிவு

(யாழ்ப்பாணம்)

ஜப்பானில் நடைபெறவுள்ள ஆசிய பசுபிக் பிராந்தியங்களின் 25ஆவது சிறுவர் மாநாட்டில் கலந்துகொள்வதற்கு யாழ் இந்து ஆரம்பபாடாசலை மாணவன் பாலேந்திரன் அபிராம் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இந்த மாநாட்டுக்கு செல்வதற்காக கல்வி அமைச்சினால் நடாத்தப்பட்ட நேர்முகத்தேர்வில் இவர் தெரிவு செய்யப்பட்டுள்ளார். இந்த மாணவன் கடந்த வருடம் நடைபெற்ற தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் இலங்கையில் தமிழ் மொழி மூலம் பரீட்சைக்கு தோற்றி 193 புள்ளிகளைப் பெற்று முதன்மை மாணவனாக தெரிவுசெய்யப்பட்டார்.

யூலைமாதம் 25 ஆம் திகதி ஜப்பானில் நடைபெறவுள்ள இந்த மாநாட்டில் கலந்துகொள்வதற்கு இலங்கையில் இருந்து 6 மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (02)


# முரசின் இன்றைய பலன்

(04.03.2013 - திங்கட்கிழமை)

நந்தன வருஷம் மாசி மாதம் 20 ஆம் திகதி. நட்சத்திரம் அனுசம். முன்னிரவு 9.15 வரை. திதி ஸப்தமி மரணம் பிற்பகல் 4.48 வரை. இராகுகாலம் 07.56 - 09.26 வரை. சுபநேரம் 12.26 - 01.56 வரை.

சோதிடஞானி அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் | கடந்தகால நினைவுகளில் மகிழ்வு. வசீகர பேச்சால், புதியவர்களின் நட்பு. தொழில், செழிப்பு. உபரி பணவரவு. உறவினர் வீட்டு சுபநிகழ்ச்சி. பிள்ளைகளால் பெருமிதம். வெற்றி. |
| ரிஷபம் | சிலரின் விமர்சனத்தால், மனவருத்தம். தொழில் மந்தம். உணவில் கட்டுப்பாடு நல்லது. மதிப்புமிகு பொருள் கவனம். அதிகாரிகளால் அலைக்கழிவு. விட்டுக் கொடுக்க வேண்டிய நாள். |
| மிதுனம் | செயலில் நிதானம். தொழில், இடையூறு சரிசெய்வீர்கள். வரவை விட செலவு கூடும். நண்பர் உதவுவர். பெற்றோரை மகிழ்ச்சிப்படுத்துவீர்கள். ஆலய கருமங்களில் அதிக ஈடுபாடு. |
| கடகம் | எதிர்கால நலனில் அக்கறை. தொழில், சில மாற்றம் செய்வீர்கள். பணவரவு கூடும். உறவினர்கள் அன்பு, பாசமுடன் நடப்பர். பரிசு வரும். இல்லறத்துணை விரும்பியது தருவீர்கள். |
| சிம்மம் | நன்மை பெற, புதிய அனுகூலம். வாய்ப்பை பயன்படுத்தி, முன்னேற்றம். தொழில், இலக்கு நிறைவேறும். உபரி பணவரவு. குடும்பத்தில் சுபநிகழ்ச்சி திட்டம், வெளியூர் நற்செய்தி. |
| கன்னி | எண்ணத்திலும், செயலிலும் உறுதி. புதிய நடைமுறைகளில் விருப்பம். தொழில், திருப்திகரம். ஆதாய பணவரவு. பழைய விவகாரத்தில், சாதகமான தீர்வு. வெற்றி பெறும் நாள். |
| துலாம் | எதிர்பாரா பணியினால் அதிருப்தி. தொழில், நண்பரின் உதவியோடு வளர்ச்சி. புதிய செலவுகள் வரும். பிரியமானவர்களின் சந்திப்பு. போக்குவரத்தில், கவனம். மாணவருக்கு நன்மை. |
| விருச்சிகம் | பேச்சு, செயலில் நிதானம் அவசியம். தொழில், வேலைச்சுமை. பணவரவு தாமதம். புத்திரரின் நற்செயல், மகிழ்விக்கும். உடன்பிறந்தவர்கள் உறுதுணை. அரசால் ஆதாயம். |
| தனுசு | சிலரது வீண்பேச்சால் மனதில் சங்கடம். தொழில், சுமார். முக்கிய செலவுக்கு, கடன் பெறுவீர்கள். மருத்துவ சிகிச்சை. குடும்ப அனுசரணை. வீண்கவலை மறக்க ஓய்வு அவசியம். |
| மகரம் | சான்றோரின் ஆசி கிடைக்கும். மனஉளைச்சல் நீங்கி தெளிவு. தொழிலில், அதிக அக்கறையுடன் பணி. அதிக ஆதாயம். குடும்பத்தின் முக்கிய தேவை நிறைவேறும். |
| கும்பம் | திறமையை வளர்த்துக்கொள்வீர்கள். கடின செயல்களும் எளிதாக நிறைவேறும். தொழில், புதிய வளர்ச்சி. வரவு திருப்தி. வீட்டுப்பொருள் வாங்குவீர்கள். சாதிக்கும் நாள். |
| மீனம் | சிலர் உங்களை, அவமரியாதை செய்வர். பெருந்தன்மை உங்களை உயர்த்தும். தொழில் வளமாகும். சேமிப்பு முக்கிய செலவுக்காகும். நடக்காது என்றிருந்த ஒன்று நடக்கும். |



# தீவுகளுக்கு வெற்றி

(நோர்த் சவுண்ட்)

சிம்பாப்வே அணிக்கு எதிரான முதலாவது ருவென்ரி-20 போட்டியில் மேற்கிந்தியத்தீவுகள் அணி எட்டு விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றது. மேற்கிந்தியத்தீவுகள், சிம்பாப்வே அணிகளுக்கிடையிலான இரண்டு போட்டிகளைக்கொண்ட ருவென்ரி-20 தொடரின் முதலாவது போட்டி நேற்று முன்தினம் மேற்கிந்தியத்தீவின் நோர்த்சவுண்டில் நடைபெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் ஆடிய சிம்பாப்வே அணி 20 ஓவர்கள் நிறைவில் எட்டு விக்கெட்டுக்களை இழந்து 130 ஓட்டங்களைப் பெற்றது. இதில் எர்வின் 34, வாலர் 49, சிபாண்டா 13 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் பெஸ்ட் மூன்று விக்கெட்டுக்களை கைப்பற்றினார். பதிலுக்கு 131 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய மேற்கிந்தியத்தீவுகள் அணி 16.1 ஓவர்கள் நிறைவில் இரண்டு விக்கெட்டுக்களை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. இதில் சிமன்ஸ் ஆறு சிக்ஸர்கள் அடங்கலாக 63, டுவைன் பிராவோ 38 ஓட்டங்களை ஆட்டமிழக்காது பெற்றனர். மற்றும் சார்லஸ் 26 ஓட்டங்களைப் பெற்றனர். போட்டியின் ஆட்ட நாயகனாக சிமன்ஸ் தெரிவானார். இரண்டு போட்டிகளைக் கொண்ட ருவென்ரி-20 தொடரில் மேற்கிந்தியத்தீவுகள் அணி 1-0 என்ற கணக்கில் முன்னிலை வகிக்கின்றது.

# நான்காவது தடவையும் ஜோகோவிச் வசம் கிண்ணம்



(டுபாய்)

டுபாய் ஓப்பன் ரென்னிஸ் ஒற்றையர் பிரிவில் உலகின் முதல்நிலை வீரர் சேர்பியாவின் நோவக் ஜோகோவிச் சம்பியன் பட்டம் வென்றார்.

ஏ.டி.பி. அந்தஸ்து பெற்ற ஆண்களுக்கான ரென்னிஸ் தொடர் டுபாயில் நடைபெற்றது. நேற்று முன்தினம் நடந்த ஆண்கள் ஒற்றையர் பிரிவு இறுதிப் போட்டியில் சேர்பியாவின் நோவக் ஜோகோவிச், செக்குடியரசின் தோமஸ் பெர்டிக்கை சந்தித்தார்.

சுமார் ஒரு மணி நேரம் 34 நிமிடம் வரை நீடித்த இப்போட்டியில் ஜோகோவிச் 7-5, 6-3 என்ற நேர் செட் கணக்கில் வெற்றி பெற்று சம்பியன் பட்டம் வென்றார். இதன்மூலம் ஜோகோவிச், இத்தொடரின் ஒற்றையரில் 4ஆவது முறையாக சம்பியன் பட்டத்தை கைப்பற்றினார். முன்னதாக 2009, 2010, 2011இல் ஹட்ரிக் பட்டம் வென்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

# வட்மோரை நீக்கவேண்டும்



(லாகூர்)

பயிற்றுவிப்பாளர் டேவ் வட்மோர் பதவியிலிருந்து விலக வேண்டுமென பாகிஸ்தான் அணியின் முன்னாள் தலைவர் மொய்ன் கான் கோரிக்கை விடுத்துள்ளார்.

தென்னாபிரிக்க டெஸ்ட் தொடர் தோல்விக்குப் பின்னரே இக்கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இது குறித்து மொய்ன்கான் மேலும் தெரிவிக்கையில், பாகிஸ்தான் அணியின் பயிற்றுவிப்பாளராக பாகிஸ்தானியரொருவரை கிரிக்கெட் சபை நியமிக்க வேண்டும்.

வெளிநாட்டுப் பயிற்றுவிப்பாளர்கள் பாகிஸ்தானின் கிரிக்கெட் கலாசாரத்தைப் புரிந்து நடந்து கொள்வதில்லை. வீரர்களுடன் சரியான முறையில் அவர் தொடர்பு கொள்ள முடிவதில்லை.

டேவ் வட்மோருக்கு முன்பு இடைக்காலப் பயிற்றுவிப்பாளராகக் காணப்பட்ட மொய்சீன் கான் வெற்றிகரமான பயிற்றுவிப்பாளராகச் செயற்பட்டுக் கொண்டிருந்த நிலையில் அவரை அப்பதவியிலிருந்து நீக்கி, வட்மோரை பயிற்றுவிப்பாளராக நியமித்தமை சரியான முடிவு அல்ல எனவும் மொய்ன் கான் தெரிவித்துள்ளார்.

# பார்சிலோனா மீண்டும் தோல்வி



பார்சிலோனா அணிக்கெதிரான லா லிகா கால்பந்து லீக் போட்டியில் ரியல் மட்ரிட் அணி வெற்றி பெற்றது.

ஸ்பெயினில் லா லிகா கால்பந்து தொடர் நடைபெற்று வருகிறது. மட்ரிட் நகரில் நடந்த லீக் போட்டியில் பார்சிலோனா, ரியல் மட்ரிட் அணிகள் மோதின. ஆட்டத்தின் 6ஆவது நிமிடத்தில் ரியல் மட்ரிட் அணியின் கரிம் பென்ஜிமா முதல் கோல் அடித்தார்.

இதற்கு பார்சிலோனா அணியின் நட்சத்திர வீரர் மெஸ்சி 18ஆவது நிமிடத்தில் கோல் அடித்து பதிலடி கொடுத்தார். முதல் பாதி முடிவு 1-1 என சமநிலை வகித்தது.


இரண்டாவது பாதியில் அசத்திய ரியல் மட்ரிட் அணிக்கு 82ஆவது நிமிடத்தில் செர்ஜியோ ரமோஸ் தலையால் முட்டி ஒரு கோல் அடித்தார். கடைசி நிமிடம் வரை போராடிய பார்சிலோனா அணியினரால் கூடுதலாக கோல் அடிக்க முடியவில்லை. ஆட்டநேர முடிவில் ரியல் மட்ரிட் அணி 2-1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

இந்த வெற்றியின் மூலம் கடந்த ஐந்து நாட்களில் இரண்டாவது முறையாக ரியல் மட்ரிட் அணி, பார்சிலோனாவை வீழ்த்தியது. சமீபத்தில், கோபா டெல் ரே கால்பந்து தொடரின் அரையிறுதிக்கான 2ஆவது போட்டியில் ரியல் மட்ரிட் அணி 3-1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. இப்போட்டியில் பார்சிலோனா அணியின் மெஸ்சி ஒரு கோல் கூட அடிக்கவில்லை.

இதுவரை விளையாடிய 26 போட்டியில் 22 வெற்றி, 2 சமநிலை, 2 தோல்வி உட்பட 68 புள்ளிகள் பெற்றுள்ள பார்சிலோனா அணி முதலிடத்தில் நீடிக்கிறது. அத்லெடிகோடி மட்ரிட் (56 புள்ளி, 25 போட்டி) 2ஆவது இடத்தில் உள்ளது.

ரியல் மட்ரிட் அணி 55 புள்ளிகளுடன் (26 போட்டி, 17 வெற்றி, 4 சமநிலை, 5 தோல்வி) 3ஆவது இடத்தில் உள்ளது.

# வீரர்கள் மறுப்பு



(கொழும்பு)


இலங்கை கிரிக்கெட் வீரர்கள் அடுத்த ஆண்டுக் கான புதிய ஒப்பந்தத்தில் கைச்சாத்திட மறுப்புத் தெரி வித்துள்ளனர். இலங்கை கிரிக்கெட் நிறுவனத்திற்கும், வீரர்களுக்கும் இடையிலான ஒப்பந்தம் கடந்த மாதம் 28 ஆம் திகதியுடன் முடிவுக்கு வந்துள்ளதுடன், அடுத்த ஓராண்டு காலத்திற்காக ஒப்பந்தம் கைச்சாத்திட வழங்ப்பட்ட கால அவகாசமும் நேற்று முன்தினத்துடன் நிறைவுபெற்றுள்ளது.

இதேவேளை, ஒபந்தத்தில் கைச்சாத்திடாத வீரர்கள் எதிர்காலத்தில் சிக்கலை எதிர்நோக்க நேரி டும் என இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி அஜித் ஜயசேகர கூறியுள்ளார்.

# மீள் வருகையின் எழுச்சி



மெக்சிக்கோ ஓப்பன் ரென்னிஸ் தொடரில் நட்சத்திர வீரர் நடால் சம்பியன் பட்டத்தை வென்றுள்ளார். மெக்சிக்கோவில் நடைபெற்ற மெக்சிகன் ஓப்பன் ரென்னிஸ் இறுதிப் போட்டியில் ரபேல் நடால் மற்றும் டேவிட் பெர்ரர் மோதினர். சுமார் ஒரு மணிநேரம் மற்றும் 5 நிமிடங்கள் நடந்த இந்த போட்டியில் 6-0, 6-2 என்ற நேர் செட் கணக்கில் எளிதாக வெற்றி பெற்று நடால் கிண்ணத்தைக் கைப்பற்றினார். கடந்த ஏழு மாதங்களாக காயத்தால் அவதிப்பட்டு, அதிருந்து மீண்டுள்ள நடால், பிரேசில் ஓப்பன், மெக்சிக்கோ ஓப்பன் என தொடர்ந்து அசத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.



# முரளி விஜய், புஜாரா சதம் இந்திய அணி பலம்

(ஹைதராபாத்)

முரளி விஜய், புஜாரா ஆகியோரின் சிறப்பான சதத்தின் மூலம் இந்திய அணி பலமான ஆரம்பத்தைப் பெற்றுள்ளது. இந்திய, அவுஸ்ரேலிய அணிகளுக்கிடையிலான நான்கு போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரின் இரண்டாவது போட்டி ஹைதராபாத்தில் நடைபெற்று வருகின்றது. இதில் விக்கெட் இழப்பின்றி ஐந்து ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் இரண்டாம் நாள் ஆட்டத்தை இந்திய அணி தொடர்ந்தது. தொடர்ந்து சொதப்பிவரும் சேவாக்கின் ஆட்டம் தொடர்ந்தது. ஆறு ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் அவர் ஆட்டமிழந்தார். இந்நிலையில் முரளி விஜய்யுடன் இணைந்த புஜாரா மிகவும் சிறப்பாக ஆடினார். புஜாரா, முரளி விஜய் இணை அவுஸ்ரேலிய அணியின் பந்து வீச்சை மிகவும் நிதானமாக எதிர்கொணடு ஓட்டங்களைக் குவித்தது. இறுதியில் நேற்றைய இரண்டாம் நாள் ஆட்டம் நிறைவுக்கு வந்தவேளை, இந்திய அணி ஒரு விக்கெட்டை இழந்து 311 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. இதில் 250 பந்துகளை எதிர்கொண்டுள்ள புஜாரா ஒரு சிக்ஸர், 25 பவுண்டரிகள் அடங்கலாக 162, முரளி விஜய் 288 பந்துகளை எதிர்கொண்டு இரண்டு சிக்ஸர், 17 பவுண்டரிகள் அடங்கலாக 129 ஓட்டங்களை ஆட்டமிழக்காது பெற்றுள்ளனர். இரண்டாவது விக்கெட்டுக்காக இந்த ஜோடி 294 ஓட்டங்களை இணைப்பாட்டமாகப் பெற்றுள்ளது. ஒன்பது விக்கெட்டுக்கள் கைவசமுள்ள நிலையில் இந்திய அணி 74ஓட்டங்களால் முன்னிலை வகிக்கின்றது. இதில் அவுஸ்ரேலிய முதல் இனிங்ஸில் ஒன்பது விக்கெட்டுக்களை இழந்து 237 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் ஆட்டத்தை நிறுத்திக் கொண்டது. இன்று போட்டியின் மூன்றாம் நாளாகும்.



விளையாட்டுச் செய்திகள்

# வலய மட்ட கால்பந்து இறுதியில் மானிப்பாய் இந்து, மகாஜனா





(வட்டுக்கோட்டை)

வலிகாமம் கல்வி வலய கால்பந்துத் தொடரின் இறுதிப் போட்டியில் தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரி மற்றும் மானிப்பாய் இந்துக் கல்லூரி அணிகள் மோதவுள்ளன.

வலிகாமம் கல்வி வலயத்துக்குட்பட்ட பாடசாலைகளின் 19 வயதுப்பிரிவு அணிகளுக்கிடையிலான கால்பந்தாட்டப் போட்டிகள் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி பிக்னெல் மைதானத்தில் நடைபெற்று வருகின்றது.

இதில் கோட்ட மட்டத்தில் முதலிடங்களைப் பிடித்த அணிகள் பங்குபற்றின. இதன் முதலாவது அரையிறுதிப்போட்டியில் வசாவிளான் மத்திய மகா வித்தியாலய அணியினை எதிர்த்து தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரி அணி மோதியது. சிறப்பாக செயற்பட்ட தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரி அணி 4:3 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று இறுதிப் போட்டிக்குத் தகுதிபெற்றது.

தொடர்ந்து நடைபெற்ற இரண்டாவது அரையிறுதிப் போட்டியில் மானிப்பாய் இந்துக் கல்லூரி அணியினை எதிர்த்து இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி அணி மோதியது. இதில் மானிப்பாய் இந்துக் கல்லூரி அணி 5:4 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று இறுதிப் போட்டிக்குத் தகுதிபெற்றது.

நாளைய தினம் பிற்பகல் 1.30 மணிக்கு இடம் பெறும் இறுதிப் போட்டியில் மானிப்பாய் இந்துக் கல்லூரி அணியும், தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரி அணியும் மோதவுள்ளன. (93)

## தொடரை வெல்வோம்

(கொழும்பு)

பங்களாதேஷ் அணியுடனானதொடரை முழுமையாக வெல்லவேண்டும் என்பதே எமது இலக்கு என இலங்கை அணியின் ருவெண்ரி-20 கப்டன் சண்டிமல் தெரிவித்துள்ளார்.

பங்களாதேஷ் அணியில் சிறந்த பந்து வீச்சாளர்கள் இருப்பது எங்களுக்கு அச்சுறுத்தலாக அமையும். இருப்பினும் அதனை சிறப்பாக எதிர்கொள்ள நாம் வியூகம் வகுத்துள்ளோம். அணியில் இளம் வீரர்கள் அதிகம் அங்கம் வகிப்பதால் எங்களுக்கு இத்தொடர் சவால் நிறைந்ததொன்றாகவே இருக்கும்.

ஒவ்வொருவருக்கும் தங்கள் திறமையை வெளிப்படுத்தி நிலையான இடத்தைப் பிடிக்கக்கூடிய சந்தர்ப்பமாகவும் இத்தொடர் அமையும் என எதிர்பார்க்கின்றேன் என அவர் மேலும் தெரிவித்தார்.

## ஆரோக்கிய வாழ்வுக்கு அட்டகாசமான திட்டம்

(கொழும்பு)

பாடசாலை மாணவர்கள் ஏதேனும் விளையாட்டுக்களில் பங்கேற்பது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

பாடசாலைகளில் ஒவ்வொரு மாணவர்களுக்கும் உடல்நிலையில் ஏற்படுகின்ற முன்னேற்றம் தொடர்பான அறிக்கை தயாரிக்கப்பட்டு ஒவ்வொரு வருடமும் உடல் நிலையில் எற்படுகின்ற முன்னேற்றம் குறித்து ஆராயவுள்ளதாக அரசாங்க தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

நோயற்ற மாணவர் சமுதாயமொன்றை ஏற்படுத்துவதே இந்த நடவடிக்கையின் நோக்கம் எனவும் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை மாணவர்களுக்கு தொற்றா நோய்கள் ஏற்படுவதனை குறைத்துக் கொள்ளும் நோக்கில் விளையாட்டுப் பாடத்தினை பாடத்திட்டத்தில் இணைத்துக்கொள்ள அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

கல்வி பொதுத்தராதர சாதாரணதரப் பரீட்சையில் விளையாட்டுப் பாடத்தினை இணைத்துக் கொள்வதுடன் விளையாட்டுப் பாடத்திற்கும் புள்ளிகளை வழங்க அர்சாங்கம் தீர்மானித்துள்ளது. இந்த நடைமுறை நடப்பாண்டுக்கு அமுலாகும் வகையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பிரதேச மட்ட வலைப்பந்து வதிரி பொம்மர்ஸ் சம்பியன்



(கரவெட்டி)

கரவெட்டிப் பிரதேச வலைப்பந்தாட்டப் போட்டியில் வதிரி பொம்மர்ஸ் அணி சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றிக்கொண்டது.

கரவெட்டிப் பிரதேச செயலகங்களில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையில் பெண்களுக்கான வலைப்பந்தாட்டப் போட்டிகள் மாலுசந்தி மைக்கல் விளையாட்டுக்கழகத்தில் நடைபெற்றது.


இறுதிப் போட்டியில் வதிரி பொம்மர்ஸ் அணியினை எதிர்த்து அல்வாய் மனோகரா அணி மோதியது. முதல் பாதியாட்டத்தில் இரு அணிகளின் சமமான பலத்தின் வெளிப்பாட்டினால் 12:12 என்ற புள்ளிகள் அடிப்படையில் முடிவுற்றது.

இரண்டாவது பாதியாட்டத்தில் தனித்திறமை வெளிக்காட்டி பொம்மர்ஸ் அணி இரண்டாவது பாதியினை 13:06 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றிகொண்டது. இறுதியாக 25:18 என்ற மொத்தப் புள்ளிகள் அடிப்படையில் வெற்றிபெற்று பிரதேச மட்ட சம்பியனாகியது.

## கலைச்செல்வன், கம்சிகாந் அசத்தல் வென்றது ஸ்ரான்லி



கலைச்செல்வன்



கம்சிகாந்

(யாழ்ப்பாணம்)

கலைச்செல்வன், கம்சிகாந் ஆகியோரின் சிறப்பான செயற்பாட்டின் மூலம் மானிப்பாய் இந்துக் கல்லூரி அணிக்கெதிரான இனிங்ஸ் கிரிக்கெட் போட்டியில் ஸ்ரான்லிக் கல்லூரி அணி ஏழு விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றது.

இலங்கை பாடசாலை கிரிக்கெட் சங்கத்தினால் நடத்தப்பட்டு வரும் பிரிவு மூன்றின் 19 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான இரண்டு நாள் இனிங்ஸ் கிரிக்கெட் தொடரின் முதல் சுற்று ஆட்டமொன்று கடந்த 1,2ஆம் திகதிகளில் ஸ்ரான்லிக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதல் இனிங்ஸிற்காக ஆடிய மானிப்பாய் இந்துக் கல்லூரி அணி கலைச்செல்வனின் பந்து வீச்சுக்கு ஈடுகொடுக்க முடியாமல் திணறியதுடன், மளமளவென விக்கெட்டுக்களைப் பறிகொடுத்தது. இருப்பினும் ஒரு முனையில் சபேசன் பொறுப்பாக ஆடி அணியின் ஓட்ட எண்ணிக்கையை கௌரவமான நிலைக்கு இட்டுச் சென்றார். இறுதியில் மானிப்பாய் இந்துக் கல்லூரி அணி முதல் இனிங்ஸிற்காக சகல விக்கெட்டுக்களையும் இழந்து 173 ஓட்டங்களைப் பெற்றது. இதில் சபேசன் 56, நிக்ஸன் 43 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் சிறப்பான முறையில் செயற்பட்ட கலைச்செல்வன் ஆறு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

பதிலுக்கு முதல் இனிங்ஸிற்காக ஆடிய ஸ்ரான்லிக் கல்லூரி அணி, நிக்ஸன், சேந்தன் ஆகியோரின் பந்து வீச்சை எதிர்கொள்ள முடியாமல் விரைவாக விக்கெட்டுக்களைப் பறிகொடுத்தது.ஒரு முனையில் கம்சிகாந் அணியின்நிலையை உணர்ந்து ஆடினார். இறுதியில் ஸ்ரான்லிக் கல்லூரி அணி முதல் இனிங்ஸிற்காக சகல விக்கெட்டுக்களையும் இழந்து 174 ஓட்டங்களைப் பெற்றது. இதில் கம்சிகாந் 51, பிரசாத் 20, ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் சேந்தன், நிக்ஸன் தலா மூன்று விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

ஒரு ஓட்டம் பின்னிலையில் இரண்டாவது இனிங்ஸிற்காக ஆடிய மானிப்பாய் இந்துக் கல்லூரி அணி விதுர்சன், மாதவன், கலைச்செல்வன் ஆகியோரின் பந்து வீச்சை எதிர்கொள்ள முடியாமல் குறைந்த ஓட்ட எண்ணிக்கைக்குள் ஆட்டமிழந்தது. இறுதியில் மானிப்பாய் இந்துக் கல்லூரி அணி இரண்டாவது இனிங்ஸிற்காக சகல விக்கெட்டுக்களையும் இழந்து 89 ஓட்டங்களைப் பெற்றது. இதில் ஜோகப்பிரசாத் 19 ஓட்டங்களைப் பெற்றார். ஏனைய வீரர்கள் சொற்ப ஓட்டங்களுக்குள் ஆட்டமிழந்து ஏமாற்றமளித்தனர். பந்து வீச்சில் விதுர்சன் நான்கு, கலைச்செல்வன், மாதவன் தலா மூன்று விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

பதிலுக்கு 89 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய ஸ்ரான்லிக் கல்லூரி அணி மூன்று விக்கெட்டுக்களை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. இதில் கம்சிகாந் ஆட்டமிழக்காது 52, கலைச்செல்வன் 15 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் பிரதீபன் இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

## இல்ல மெய்வல்லுநர் போட்டி

புத்தூர் வாதரவத்தை ஸ்ரீ விக்னேஸ்வரா வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளைய தினம் பிற்பகல் 1.30 மணிக்கு வித்தியாலய மைதானத்தில் நடைபெறவுள்ளது. வித்தியாலய அதிபர் எஸ். தவநாயகம் தலைமையில் நடைபெறவுள்ள இப்போட்டி நிகழ்வின் பிரதம விருந்தினர்களாக வலிகாமம் கிழக்கு கோப்பாய் பிரதேச செயலர் ம. பிரதீபன், சிறப்பு விருந்தினராக வலி.கிழக்கு பிரதேச சபை எதிர்க்கட்சித் தலைவரும் ஈ.பி.டி.பி.யின் கோப்பாய் பிரதேச அமைப்பாளருமான இ.ஐங்கரன் மற்றும் யாழ். கல்வி வலய ஆசிரிய ஆலோசகர் வி. செந்தூரன், கௌரவ விருந்தினராக இலங்கை செஞ்சிலுவைச் சங்க வலி.கிழக்கு கோப்பாய் பிரிவின் தலைவர் இ. மயில்வாகனம் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (21)

கதம்பம்

முதலில் அரசாங்கம் சிங்களவர்கள், தமிழர்கள் மற்றும் முஸ்லிம்கள் இடையே

# இலங்கை செய்யவேண்டியிருப்பது!

இசைவிணக்கமான ஒரு உறவினை தொடர்ந்து கட்டியெழுப்ப முயலவேண்டும், அத்தோடு இரண்டாவதாக மேற்கினோடு மீண்டும் உறவுகளை ஏற்படுத்திக் கொள்ளவேண்டும். மற்றவர்களுடைய மனங்கள் நச்சூட்டப்பட்டிருக்கும்போது அதை நீக்குவதற்கு இலங்கையர்கள் முயற்சிக்க வேண்டும். வெளிநாட்டு அரசாங்கங்கள் மீது தவறான தகவல்கள் மற்றும் அவநம்பிக்கை யான தகவல்கள் செல்வாக்கு செலுத்தும்போது கொழும்பின் போக்கு வெளிநாட்டு அரசாங்கங் களுடன் தொடர்பற்றதாக காணப்படுகிறது.

அதற்கான மூலோபாயம் அவர்களுடன் தொடர்புகளை ஏற்படுத்தி பிரச்சினைகளை தீர்க்கக் கூடிய முயற்சிகளை மேற்கொள்வதே. இலங்கை சீனாவின் ஒரு கூட்டணி நாடாக தவறாக கருதப்பட்டு வருகிறது. மேற்கிற்கும் மற்றும் இந்தியாவுக்கும் சீனாவுடனான எங்கள் உறவு பொருளாதாரத்தை சார்ந்தது இராணுவத்தை சார்ந்தது அல்ல என்று கொழும்பு விளக்க வேண்டும், இல்லையெனில் இலங்கை ஒரு புதிய பனிப்போருக்குள் சிக்கிக்கொள்ள நேரிடும். மாறி வரும் பூகோள மூலோபாயம் மற்றும் பூகோள அரசியல் யதார்த்தங்களை கருத்தில் கொண்டு அவதானமாக நடக்கவேண்டும், இந்தியாவை விரோதமூட்டக்கூடாது.



- றொகான் குணரட்ன -

# தெரியுமா?



- யூகலிப்டஸ் மரம் அழிந்து போனால் கோலா கரடி என்ற உயிரினமும் அழிந்து விடும். ஏனெனில் அது யூகலிப்டஸ் இலையைத் தவிர வேறு எதையும் உண்பதில்லை.
- இமய மலையில் வசிக்கும் யாக் எருமை யின் பால் பழுப்பு நிறத்தில் இருக்கும்.
- ஒரு சிலந்தி வலையிலுள்ள நூல் முழுவதையும் இழுத்துப் பார்த்தால் 2000 மைல்கள் நீளம் கூட இருக்கும்.
- யானைத் தந்தங்கள் சிறு மஞ்சள் கலந்த வெள்ளை நிறமாக இருக்கும். ஆனால் ஆபிரிக்க யானைகளில் ஒருசிலவற்றிற்கு கறுப்பு நிறத் தந்தங்கள் உள்ளன.
- கஸ்தூரிமானின் கொம்புகள், பூமியில் புதைந்திருக்கும் கிழங்குகளைத் தோண்டி உண்ணவும் சண்டையிடவும் உதவுகின்றன.
- ஒரு மரத்தை தனது பற்களால் முறிக்கக்கூடிய விலங்கு - பீவர்
- உராங் உட்டான் என்ற குரங்கின் பெயருக்கு அர்த்தம் - காடுகளின் மனிதன்
- உணவைக் கழுவிச் சாப்பிடும் விலங்கு - ராக்கூன்
- ஒரு குண்டூசியின் தலைப் பரப்பில் பத்தாயிரம் பக்டீரியாக்களை அடுக்க முடியும்.
- நீர்யானை மனிதனைவிட வேகமாக ஓடும்.
- அதிகாலை நேரத்தில் மட்டுமே வாத்துகள் முட்டையிடும்.
- டிப்பர் என்ற பறவை நீரின் அடி ஆழத்திற்குச் சென்று, இரையைப் பிடிக்கும்.
- ஆமை நிலத்தில்தான் மெதுவாகச் செல்லுமே தவிர நீரில் வேகமாக நீந்தும்.

# இனரீதியாகப் பிளவுபட்டுள்ள ஊடகங்கள்!

- எம்.எஸ்.எம்.ஐயூப் கட்டுரையிலிருந்து.



தற்போது ஜெனிவா நகரில் நடைபெற்றுவரும் ஐ.நா மனித உரிமை பேரவையின் 22ஆவது அமர்வு - தமிழ் ஊடகங்களுக்கு செய்தி ஊற்றாகியுள்ளது. ஆனால் சிங்கள ஊடகங்கள் அதனை அவ்வளவாக பொருட்படுத்தியதாக தெரியவில்லை.

சில தமிழ் பத்திரிகைகளில் இந்தக் கூட்டத் தொடரைப் பற்றி ஒரே நாளில் பத்துக்கு மேற்பட்ட செய்திகளும் முழுப்பக்க கட்டுரைகள் உட்பட பல கட்டுரைகளும் பிரசுரிக்கப்படுகின்றன. குறிப்பாக சகல தமிழ் பத்திரிகைகளிலும் முன் பக்கத்தில் அநேகமாக அரைவாசி அல்லது அதற்கு மேல் மனித உரிமை பேரவையின் கூட்டத் தொடரைப் பற்றிய செய்திகளாகத் தான் காணப்படுகின்றன.

ஆனால், சிங்கள பத்திரிகைகளில் நாளொன்றுக்கு இந்தக் கூட்டத் தொடரைப் பற்றி ஒரு செய்தி அல்லது இரண்டு தான் பிரசுரிக்கப்படுகின்றன. கட்டுரைகளைப் பொறுத்தவரை சிங்கள பத்திரிகைகளில் இந்த விடயத்தைப் பற்றி வாரத்திற்கு இரண்டு மூன்று கட்டுரைகள் மட்டுமே வெளியாகின்றன.

சிங்கள பத்திரிகைகளில் வெளியாகும் செய்திகளும் கட்டுரைகளும் பெரும்பாலும் போரின் இறுதிக் கட்டத்தில் இடம்பெற்றதாகக் கூறப்படும் அத்துமீறல்களைப் பற்றிய அரசாங்கத்தின் நிலைப்பாட்டை நியாயப்படுத்துபவனவாகவே இருக்கின்றன. அதேவேளை அவை மனித உரிமை பேரவையில் இலங்கை தொடர்பாக பிரேரணையொன்றை கொண்டு வரவிருக்கும் அமெரிக்காவை சாடுகின்றன. பிரேரணையை ஆதரிப்பதாகக் கூறும் நாடு- களையும் சாடுகின்றன.


தமிழ் ஊடகங்கள் அதற்கு நேர்மாறாக நடந்துகொள்கின்றன. அவை முழுமையாகவே அரச எதிர்ப்பு நிலைப்பாட்டை கொண்டதாகவே காணப்படுகின்றன.

இலங்கையில் அரச படைகளுக்கும் விடுதலைப் புலிகள் அமைப்புக்கும் இடை யில் இடம்பெற்ற போரின் இறுதிக் கட்டத்தின்போது அரச படைகளும் புலிகளும் பாரியளவில் மனித உரி மைகளை மீறியுள்ளதாகவே சர்வதேச மனித உரிமை நிறுவனங்கள் கூறிவருகின்றன. ஆனால் புலிகள் - மனித உரிமைகளை மீறியதாக அந்நிறுவனங்கள் பொதுவாக கூறிய போதிலும் அவை அச்சம்பவங்களை துல்லியமாக குறிப்பிடுவதோ அவற்றைப் பற்றி விசாரணை செய்ய வேண்டும் என்று கூறுவதோ இல்லை.

அரசாங்கத்திற்கு எதிராக ஒரு யுத்தத்தையே தொடர்த்துள்ள சனல் 4 தொலைக்காட்சியும் கூட புலிகளும் மனித உரிமைகளை மீறியதாக தமது ஆவணப் படங்களில் பொதுவாக கூறுகின்றது. புலிகள் - சிறுவர்களை படையில் சேர்த்ததாகவும் மேலோட்டமாக கூறுகின்றது. ஆனால் புலிகளுக்கு எதிரான எவ்வித காட்சியும் அவற்றில் சேர்த்துக்கொள்ளப்படவில்லை. இது அரசாங்கத்தின் சீற்றத்திற்கு காரணமாகி யுள்ளது. அதேவேளை புலிகளைச் சார்ந்த தேசிய மற்றும் சர்வதேச அமைப்புக்கள், சர்வதேச நிறுவனங்களின் இந்த நிலைப்பாட்டின் காரணமாக இலங்கையில் மனித உரிமை மீறல்கள் தொடர்பாக விசாரணை செய்ய வேண்டும் என்பதை எதிர்க்கவில்லை. மாறாக அவ்வமைப்புக்களும் விசாரணைகளை கோருகின்றன. புலிகளின் செயற்பாடு களும் தனித்தனியாக குறிப்பிடப்பட்டு அவற்றைப் பற்றியும் விசாரணை செய்ய வேண்டும் என்று சர்வதேச நிறுவனங்கள் கூறும் நிலை இருந்தால் அவ்வமைப்புக்களும் விசாரணை வேண்டாம் என்றே கூறும்.

இது தான் மனித உரிமை களைப் பற்றிய அக்கறை. சகல தரப்பினரும் மனித உரிமைகளுக்காக அரசியலை பாவிப்பதில்லை. மாறாக அவர்கள் அரசியலுக்காக மனித உரிமை மீறல்களை பாவிக்கிறார்கள்.

## கைக்குட்டை



கொளுத்தும் வெயிலில் கொட்டும் வியர்வையோ மழையில் முக்கில் சுசிவோ ஏற்படும்போது கை கொடுப்பது kerchief எனப்படுகிற கைக்குட்டைகள். kerchief "தலை மூடப் பயன்படு" எனப் பொருள்படும். இது கிரேக்கச் சொல்லிலிருந்து உருவானதாகும். இடைக்காலத்தில் kerchief தலை யில் கட்டிக் கொள்ளப் பயன்பட்டது. 16 ஆம் நூற்றாண்டில் ஐரோப்பியர்கள் தலை- யையும் மூக்கையும் துடைக்க இருவேறு kerchief-கள் பயன்படுத்திவந்தனர். ஆகவே நாம் தற்போது பயன்படுத்துகின்ற கைக்குட்டை hand kerchief என வழங்கப்படுகிறது.

ஒரு நாளைக்கு 30 மைல்கள் வரை யானையை நடத்திச் செல்ல முடியும்.

யானை தினமும் 2 முறை குளிப்பதை விரும்பும்.


மனிதனைப் போன்றே யானை குறட்டை விட்டுத் தூங்கும்.

பாகனுடன் நட்பாக பழக ஒரு யானைக்கு குறைந்தது ஒரு வருடம் பிடிக்கும்.

யானை கருணைக்கிழங்கை சாப்பிடாது.

மனிதனைப் போல பசி, வேதனை, மகிழ்ச்சி போன்றவற்றை யானையின் பிளிறல் மூலம் அறியலாம்.

நாக்கு கறுத்து காணப்பட்டால் அது தோஷமுள்ள யானை.



## குறட்டை மிருகம்!

# மிகவும் கனமான சங்கிலி!



"ரஷ்ய கம்யூனிசம்" என்பது கார்ல் மார்க்சுக்கு பிறந்த illegetimate child என்று அந்நாளில் முன்னாள் இங்கிலாந்து பிரதமர் கிளெமென்ட் ஆட்லீ தாக்கினார்.

தேவ குரு என்ற பிரகஸ்பதி தன் சகோதரன் மனைவியுடன் கள்ள உறவு கொண்டதன் மூலம் பிறந்தவர் தான் பரத்வாஜ முனிவர். துரோணரின் மூதாதை பரத்வாஜ முனிவர்.

தஸ்தாயேவ்ஸ்கியின் கரமசோவ் சகோதரர்கள் நாவலில் இந்த சகோதரர்களின் அப்பா பியோதருக்கு ஒரு illegetimate son உண்டு. பியோதரிடம் சமையல் வேலை செய்கிற வேலைக்காரனாக இருப்பான் அந்த முறை தவறிப் பிறந்த மகன் பாவல் ஸ்மார்டியாகோவ்.

சமீபத்தில் ஆந்திர playboy கவர்னர் "என்.டி.திவாரியின் illegetimate child நான்" என 29வயது டில்லி வழக்கறிஞர் ஒருவர் தன்னைப் பற்றி கூறினார். அவர் பெயர் ரோஹித். நீதிமன்றத்தில் வழக்கும் தொடர்ந்தார்.

இருபத்தைந்து வருடங்களுக்கு முன் சிங்கப்பூரில் இருந்து சென்னை வந்த ஒரு இளைஞன் "ஒரு மாணவி என் காதலி" என்ற படத்தில் கதாநாயகனாக நடித்தான். அந்த இளைஞனின் பெயர் கூட ரோஹித் தான்! அந்தப் படம் வெளி வரவே இல்லை. ஆனால் அவன் வேறு ஒரு விதமாக பிரபலமானான். "ஜெமினி கணேசன் என் தந்தை. என் தாயார் லண்டனில் ஒரு டாக்டர். அவருடன் ஜெமினி கணேசனுக்கு ஏற்பட்ட காதலில் நான் பிறந்தவன். ஜெமினி கைவிட்டதால் என் தாயார் மனநிலை பாதிக்கப்பட்ட நிலைக்கு ஆளானார்" என வலம்புரி ஜான் ஆசிரியராய் இருந்த "தாய்" பத்திரிகையில் பேட்டி கொடுத்தான். ஜெமினி இதை "அப்பட்டமான பொய். நான் அவனில்லை" என வன்மையாக மறுத்தார்.

உடனே அந்த இளைஞன் "சிங்கப்பூரில் எனக்கு நிறைய சொத்து இருக்கிறது. நான் சொத்துக்காக ஜெமினியின் மகன் என பொய் சொல்லவில்லை. என் நண்பர்களிடம் என்னைப் பற்றி கேட்டுப் பாருங்கள். Rohit is a gem என்று சொல்வார்கள். நான் ஜெமினிக்கு பிறந்தவன் என்பது உண்மை" என்று வலியுறுத்தி மீண்டும் சொன்னான். ஏனோ அதன் பிறகு அந்த விஷயம் பற்றி வேறு எந்த செய்தியும் வெளிவரவே இல்லை.

திருமண பந்த சங்கிலி கனமானது என்பதால் தான் அதனை இழுக்க ஆணும் பெண்ணுமாக இருவர் தேவைப் படுகிறது. ஆனால் மிகவும் கனமானது என்பதால் சில சமயம் மூன்றாவது பெண்ணும் வந்து விடுகிறாள் போலும்.

ஜெமினியுடன் திருமண பந்த சங்கிலியை இழுத்தவர்கள் ஐந்து பெண்கள்! பாப்ஜி, புஷ்பவல்லி, சாவித்திரி, ராஜஸ்ரீ, ஜூலியானா.... ரோஹித் அம்மா விஷயம் உண்மையென்றால் ஆறு பெண்கள்.

நாற்பது வருடங்களுக்கு முன் "சாவன் பாதன்" ஹிந்திப் படத்தில் நடித்த ரேகா பேட்டி கொடுத்தார். "என் தந்தை பிரபல தமிழ் நடிகர்."

இதில் பெரிய ரகசியம் ஏதும் இல்லை. சினிமாப் பத்திரிகை நிருபர் ஒருவரிடம் உடனே ஜெமினி கணேசன் நாற்காலியை திருப்பிப்போட்டு உட்கார்ந்து "ஆமாம் பிரதர்! புஷ்பவல்லியும் நானும் காதலித்து ஒன்றாக வாழ்ந்த போது பிறந்தவள் தான் ரேகா! நாங்கள் விவாகரத்து செய்துகொள்ளத் தேவையில்லாமல் போய்விட்டது. ஏனென்றால் நானும் புஷ்பவல்லியும் கணவன் மனைவியாக வாழ்ந்தாலும் திருமணம் செய்துகொள்ளவே இல்லை." என்று கூலாக சொன்னார்!

எழுத்தாளர் லா.ச.ரா வின் மனைவியும் ஜெமினியின் முதல் மனைவி பாப்ஜியும் கசின்ஸ். பாப்ஜியின் துயர தாம்பத்தியத்தின் மீது லா.ச.ரா அனுதாபம் கொள்வது இயல்பான விஷயம் தான். ஆழ்வார்குறிச்சி கல்லூரியின் முன்னாள் முதல்வர் மறைந்த லக்ஷ்மி நாராயணனிடம் லா.ச.ரா அவர்கள் ஜெமினி பற்றி சொன்னாராம் : "நான் கேரக்டர் இல்லாத மனிதனை மதிப்பதே இல்லை."

ஆனால் லா.ச.ரா "அபிதா" நாவல் (ELECTRA COMPLEX) எழுதியவர் தானே! காதலியின் மகள் மீது கொள்ளும் Eroticism!

**- R.P. ராஜநாயஹம் -**

# புதுப்புது அர்த்தங்கள்

**- ஜிரா -**

"கவி பாடலாம்" என்று ஒரு மிக அருமையான நூலை கி.வா.ஜ அவர்கள் எழுதியிருக்கிறார். பாட்டெழுதுவதற்குத் தமிழில் இலக்கணங்களையும் வகைகளையும் எளிய தமிழில் விளக்கங்களோடும் எடுத்துக்காட்டுகளோடும் சொல்லியிருக்கிறார். தமிழ் ஆர்வலர்களுக்கு அந்த நூல் ஒரு வரம்.

இலக்கணங்கள் ஆண்டாண்டு காலமாக இருக்க புதுமைகள் புகுந்த வண்ணம் இருக்கிறது. இலக்கணம் என்பதையே விட்டு விட்டு புதுக்கவிதை பழக்கத்துக்கு வந்தது. மரபுக்கவிதையையே மறக்க வைத்து விட்டு புதுக்கவிதை பிரபலமாயிருக்கிறது என்றால் அதன் எளிமையைப் புரிந்து கொள்ள முடிகிறது.

பிறகு ஹைக்கூ என்றொரு வகை. இப்படியாக வகை வகையாக வந்த வகைகளில் ஒன்றுதான் Counter வகை. இது பெரும்பாலும் புதுக்கவிதை முறையிலேயே எழுதப்படுகிறது.

மரபில் தெளிவான இலக்கணங்களோடு கவுண்டர் வகை பாடல்கள் விளக்கப்பட்டிருக்காவிட்டாலும் மரபுக்கவிதையிலும் இந்த வகைப் பாடல்களை எழுத முடியும்.

சரி. பாடலின் இலக்கணத்தைப் பார்ப்போம்.

கவுண்டர் முறையில் ஒரு பாடலை எழுதினாலும் அதை இரண்டு பாடல்களாகப் பிரித்து விடலாம். ஒவ்வொரு பாடலும் தனித்தனியாகவும் பொருள் கொடுக்கும். சேர்ந்தும் பொருள் கொடுக்கும். ஒரு திரைப்படப் பாடலை எடுத்துக்காட்டாக விளக்கினால் இது புரிந்துவிடும்.

இதுவரையில் தமிழ்த் திரையிசையில் Counter முறையில் ஒரேயொரு பாடல்தான் வந்திருக்கிறது. அந்தப் புதுமையைப் புகுத்திய பெருமை இளையராஜாவையே சேரும். அவரது புதுமைக்குச் சொற்களைப் புகுத்தி கவி. சமைத்த பெருமை கவிஞர் வாலியையே சேரும்.

கவுண்டர் முறைப் பாடல்களில் வரிகளைச் சீர்களாகப் பிரித்துக் கொள்ள வேண்டும். ஒற்றைப்படைச் சீர்களையும் இரட்டைப்படைச் சீர்களையும் தனித்தனியாக பிரித்தால் இரண்டு பாடல்கள் கிடைத்துவிடும். இதுதான் Counter.

இந்தத் திரைப்படப்பாடலில் பல்லவி முழுக்க முழுக்க கவுண்டர் முறையில் அமைக்கப்பட்டிருக்கிறது. இந்த முறையில் பாடல்களைப் படம் பிடிப்பதிலும் சிரமம்.. அதற்கான தக்க சூழ்நிலை வேண்டும். ஆகையால் எளிமையாக ஒரு காதல் பாடலில் பயன்படுத்தப்பட்டுள்ளது. இது பாடலின் முதற்பகுதி. அதாவது ஆணும் பெண்ணுமாகப் பாடும் பல்லவி.

**ஆண் :**
என் கண்மணி உன் காதலி
இள மாங்கனி உனைப் பார்த்ததும்
சிரிக்கின்றதேன் சிரிக்கின்றதேன்
**பெண் :**
என் மன்னவன் உன் காதலன்
எனைப் பார்த்ததும் ஓராயிரம்
கதை சொல்கிறான் கதை சொல்கிறான்




இந்த வரிகள் முழுதாகச் சேர்ந்து பொருள் தருகின்றன. சரி. இப்போது நாம் ஒற்றைப்படைச் சீர்களையும் இரட்டைப்படைச் சீர்களையும் பிரித்து இரண்டு பாடல்களாக்குவோம்.

**பாடல்-1**

**ஆண்:** என் கண்மணி இளமாங்கனி சிரிக்கின்றதேன்

**பெண்:** என் மன்னவன் எனைப் பார்த்ததும் கதை சொல்கிறான்

**பாடல்-2**

**ஆண்:** உன் காதலி உனைப் பார்த்ததும் சிரிக்கின்றதேன்

**பெண்:** உன் காதலன் ஓராயிரம் கதை சொல்கிறான்

இந்த இரண்டு பாடல்களையும் அப்படியே எடுத்துக் கொண்டாலும் பொருள் கிடைக்கும். இதுதான் Counter முறையில் எழுதப்படும் முறை.

*பாடியவர்கள் - பி.சுசீலா, எஸ்.பி.பாலசுப்ரமணியம்*

*படம் - சிட்டுக்குருவி*

# போலி டாக்டர்!




ஜேர்மனியானால் என்ன, பிரிட்டன் ஆனாலென்ன, ஐரோப்பியர்களும் உலக மக்கள் நடுவே நிலவும் அனைத்து ஊழல்களையும் புரிகிறவர்கள்தான். தென்னிந்தியா பாண்டிச்சேரியில் ஒரு அமைச்சர் தனக்குப் பதிலாக இன்னொருவரைப் பரீட்சை எழுதச் செய்து அகப்பட்டுக் கொண்ட செய்தி சமீபத்தில் வந்திருந்தது. அதுபோல ஜேர்மனியின் மத்திய அரசில் ஒரு ஆட்சிக் குழு உறுப்பினர் (அமைச்சர் போன்ற ஒரு பதவி) தனது முனைவர் பட்டத்துக்கான ஆய்வுக் கட்டுரையில் பகுதிகளை வேறு ஆய்வுகளிலிருந்து "கொப்பி" அடித்தார் என்று உறுதியாகி அந்த முனைவர் பட்டத்தை முன்பு வழங்கிய பல்கலைக்கழகம் இப்போது ரத்து செய்து விட்டது. இப்படிக் காலாவதி ஆன பட்டத்தால் அவருக்கு தனிப்பட்ட முறையில் நஷ்டம் இருந்திராது. ஆனால் ஒரு ஆட்சிக் குழு உறுப்பினர் இப்படிப் பித்தலாட்டம் செய்ததால், அவருடைய பதவி பறிக்கப்படும் என்று ஜேர்மனியப் பத்திரிகைகள் கூறுகின்றன.

சீனாவிலும் ஏராளமான முனைவர் பட்டங்களும், பிரசுரமாகும் ஆய்வுக் கட்டுரைகளும் உலகின் வேறு இடங்களில் எழுதப்படும் ஆய்வுகளை அப்படியே பிரதி எடுத்தவை என்று சீனப் பத்திரிகைகள் சொல்கின்றன. ஆனால் அப்படிப் பிரசுரித்த சீன பல்கலையாளர்களை அரசு ஏதும் செய்வதில்லை என்றும் அங்குள்ள பத்திரிகைகள் விசனம் வெளியிடுகின்றன. அதுபோலவே இந்தியாவிலும் இவ்வாறு எத்தனையோ டாக்டர் பட்டங்கள் வழங்கப்படுவதாக செய்திகள் இருக்கிறது. ஆனால் அதையெல்லாம் யாரும் துப்புத் துலக்கி மினெக்கெட்டுக் கொண்டிருப்பதாகத் தெரியவில்லை.

# எஸ்.ஜானகி – பத்மபூஷண் இழந்த கௌரவம்

**- விக்கி**

**1962** ஆம் ஆண்டு எஸ்.எம்.எஸ் எனப்படும் எஸ்.எம்.சுப்பையா நாயுடுவிற்கு ஒரு சிக்கல். 'கொஞ்சும் சலங்கை' படத்துக்கு சிங்கார வேலன் சந்நிதியில் ஒரு நாதஸ்வர வித்வானும், ஒரு தேர்ந்த பாடகியும், பக்தியும் காதலும் பொறாமையற்ற போட்டியுமாய் இணைந்து இசைக்கும் ஒரு பாடல். கீர்த்தனைகளையெல்லாம் மிஞ்சும் அளவுக்கு ஆபேரியில்



அசத்தலாக ஒரு மெட்டும் ரெடி செய்துவிட்டார் எஸ்.எம்.எஸ். நாதஸ்வர சக்கரவர்த்தியாகிய ராஜரத்தினம் பிள்ளையின் சிஷ்யர் காருக்குறிச்சி அருணாசலமும் சிரத்தையுடன் ரிகர்சல் முடித்து தன் பங்கிற்கு ரெடி. தமிழ்த் திரையுலகின் கலைவாணியாகிய பி.சுசீலா பாட அழைக்கப்படுகிறார். எப்பேர்ப்பட்ட மலையையும் சாதாரணமாகத் தாண்டும் அவருக்கு அன்றையதினம் 'ராசி இல்லாதது. எஸ்.எம். எஸ் எதிர்பார்த்த அளவிற்கு நாதஸ்வர பிருகாக்களை அவரால் பாட முடியவில்லை. பின் பி.லீலா வருகிறார். தன் பங்கிற்கு முயற்சி செய்கிறார். முடிய வில்லை. மெட்டின் தரத்திற்கு தலைவணங்கி விலகிக் கொள்கிறார். இருந்த எல்லா துருப்புச் சீட்டும் கை நழுவி இப்பொழுது யாரைப்பாட வைக்கலாம் என்பதே அந்த சிக்கல்.

கடந்த சில ஆண்டுகளாக அங்கொன்றும் இங்கொன்றுமாய் சில பாடல்களை மட்டுமே பாடி தனக்கென இன்னும் தனி இடம் தேடிக் கொண்டிருக்கும் எஸ்.ஜானகியின் பெயரை பி.லீலா அவர்களே பரிந்துரைக்கிறார். ஜானகி வரவழைக்கப் படுகிறார். மெட்டு போட்டுக் காட்டப் படுகிறது. 'இந்த நாதஸ்வர சங்கதிகள் எல்லாம் 'ப த நி ச.. க ம த நி..' என கால் அளவும் அரையளவுமாக இருக்கிறதே. முழுவதுமே சரளியாக பாடினால் சரியாயிராது. நான் இதை ராகமாக ஆகாகாரத்தில் பாடிவிடுகிறேன்' என்கிறார். 'இதை ஸ்வரமாகப் பாடுவதே பலருக்கு சிம்ம சொப்பனம். வெறும் ராகமாகப் பாடுவது இன்னும் கஷ்டமே அம்மா' என்கிறார் எஸ்.எம்.எஸ். 'இல்லை சார். இந்த பாட்டுக்கு இதுதான் சரியாக வரும். நான் பாடுகிறேன்' என ஜானகி உறுதியாகக் கூறுகிறார். நாதஸ்வரமா குரலா எனத் தெரியாத அளவுக்கு அப்பாடலில் ஜானகி சோபிக்கிறார்.

காருகுறிச்சி அருணாசலம் அவர்களின் ஆசி பெற்ற ஜானகிக்கு அவருடைய 75ஆம் வயதில் இந்திய அரசு பத்மபூஷண் கொடுத்து கௌரவிக்க நினைத்ததையும், அந்த விருதைப் பெற்றுக்கொள்ள ஜானகி மறுத்துவிட்டதையும் கேள்விப்பட்ட போது ஒரு திரைப்படக் காட்சி நினைவுக்கு வந்தது. 'ஷோஷங்க் ரிடெம்ப்ஷன்' என்கிற ஆங்கிலப் படத்தில் மோர்கன் ஃப்ரீமன் அறியாப் பருவத்தில் செய்த தவறுக்காக ஆயுள் தண்டனைக் கைதியாக இருப்பார். நாற்பது வருடங்களுக்கு மேலாக சிறையில் தண்டனையை அனுபவிக்கும் அவர் திருந்தி விட்டாரா, அவரை சிறையில் இருந்து முன்கூட்டியே விடுதலை செய்யலாமா எனப் பரிசீலிக்க வருடாவருடம் ஒரு ஆய்வுக குழு வருகிறது. ஒப்புக்குக் கேள்விகளைக் கேட்டு விட்டு அவரையும் பிற சக கைதிகளையும் நிராகரித்து விடுகிறது. அடுத்த வருடமும் வந்து 'நீ திருந்தி விட்டாய் என நினைக்கிறாயா?' என வழக்கம்போல அவர்கள் அதே கேள்வியைக் கேட்க, 'போடாங்க..' என மோர்கன் கடுப்பாகி 'நீங்கள் எதிர்பார்க்கும் பதிலைத் தரட்டுமா, இல்லை உண்மையிலேயே திருந்தி விட்டேனா இல்லையா எனத் தெரிய வேண்டுமா' என அவர்களுக்கே உபதேசித்துவிட்டு வெளியேறுகிறார்.

வரிவரியாகப் பாடி அதை வெட்டி ஒட்டி ஸ்ருதி விலகி இருந்தாலும் மெலோடைன் போன்ற மென் பொருள் மூலம் சரி செய்து ஒரு பாட்டை முடிக்க ஒரு மாதம் எடுத்துக்கொள்ளும் இன்றைய தலைமுறை, தன் எழுபத்தைந்தாவது வயதில் இருபதாயிரம் பாடல்களுக்கு மேல் பாடி (அதாவது நாள் ஒன்றுக்கு ஒரு பாடல் வீதம் வைத்தாலும் அதுவே தன் வாழ்நாளில் தொடர்ந்து ஐம்பத்தைந்து ஆண்டுகள் காலஅளவிற்கு வருகிறது) கணக்கற்ற ரசிகர்களின் ஆதர்ச ஜானகிக்கு இப்போது கொடுத்திருக்கும் பத்மபூஷணை, கொடுக்காமலேயே இருந்திருக்கலாம் என நாசூக்காய் மறுத்திருப்பது முற்றிலும் புரிந்துகொள்ளக்கூடிய முடிவாகவே எனக்குப் படுகிறது.

ஜானகியின் சாதனைகளை நாம் பலவாறாக எடை போடலாம். ஆனால் அதில் முதலும் கடைசியுமாய் நான் கூறுவது அவரின் வெர்சடாலிட்டி (versatality) மட்டுமே. 'சகலகலா வல்லி' என்றெல்லாம் இந்த வார்த்தையை நாடகத்தனமாய் தமிழில் மொழி பெயர்க்காமல் நான் சொல்ல வருவது இதுதான்: எந்த ஒரு இசை சார்ந்த, உணர்வு சார்ந்த, வெவ்வேறு விதமான குரல் சார்ந்த பாடலையும் அவரால் அட்சர சுத்தமாகப் பாட முடிந்திருக்கிறது. அவருடைய சம காலத்திய ஜாம்பவான்களாக விளங்கிய கலைஞர்களோடு அவரை ஒப்பிட்டுப் பார்த்தால் கூட இது தெளிவாகி விடுகிறது.

இந்திய அளவில் பின்னணிப் பாடகிகள் என யோசித்துப் பார்த்தால் முதலில் நினைவில் வருவது லதா மங்கேஷ்கர், ஆஷா போன்ஸ்லே சகோதரிகளே. ஜானகியும் முறையாக சங்கீதம் பயின்றவர் என்றாலும், தான் பாட ஆரம்பித்த காலத்தில் இவர்கள் பாடிய ஹிந்திப் பாடல்களை தான், வாய்ப்புகள் பெற ஒத்திகைகளில் பாடியிருக்கிறார். அப்பேர்ப்பட்ட இந்த சகோதரிகள் இருவருமே சாஸ்த்ரீய அடிப்படையில் அமைக்கப்பட்ட எவ்வளவு கடினமான பாடல்களையும் அசகாயமாக பாடக் கூடியவர்கள்.

சங்கர்-ஜெய்கிஷனின் 'ரசிக் பல்மா'வையோ, மதன் மோகனின் 'ஆப் கீ நசரோன் மே'வையோ, சி.ராமச் சந்திராவின் 'ஏ ஜிந்தகி உஸி கி ஹை'யையோ லதா ஜியின் குரலின் இடத்தில் வேறொருவரை நினைப்பதே பாவம். ஆனால் ஜீனத் அமன், பர்வீன் பாபி போன்ற நவீன நாயகிகள் நளினத்துடன் பாடும் பாடல்களையோ அல்லது காபரேவகை கிளப் பாடல்களையோ அல்லது இன்றைக்கு நாம் குத்துப் பாடல் என வகைப்படுத்தும் பாடல்களை பாடும்போது தனக் கென ஒரு வரம்பை ஏற்படுத்திக்கொண்டு அதற்குள்ளேயே லதாஜி தங்கி விடுவார்.

ஆனால் பொப் மற்றும் ஹிப்பி கலாசாரத்தில் தன்னை அடையாளம் கண்ட நகர்ப்புற எழுபதுகளின் இந்தியா பாடிய அனைத்து பாடல்களுமே ஆஷாஜிக்கு சொந்தமானவை. 'சுராலியா'வாக இருந்தாலும், 'தம் மாரோ தம்' மாக புகைத்தாலும், பியா தூ அப் தோ ஆஜா-வில் மோனிக்கா-வாக ஆர்ப்பரித்தாலும், ஜானே ஜான் என தேடினாலும் அதைத் தகுந்த உணர்வுடன் ஆஷா-ஜியால் மட்டுமே வழங்க முடிந்தது.

அதேபோல் இங்கே தமிழ்நாட்டில் ஜானகியின் சம காலத்தை பார்த்தால் - பட்டத்து ராணி, இலந் தப்பழம் போன்ற எல்.ஆர்.ஈஸ்வரி பாடிய பாடல்கள் சுசீலா அம்மாவிற்கு பொருந்தாது என்பதிலும் மாற்றுக்கருத்தில்லை.

அதனால் இந்தியப் பெண் பின்னணி பாடகிகளில் இந்தவகைப் பாடல்கள் மட்டுமே பாடக் கூடியவர் என்றோ, இந்த வகை பாடல்களை பாட இயலாதவர் என்றோ கைசுட்டி காட்டும்படி இடைவெளி இல்லா திறமை உள்ளவர் ஜானகி மட்டுமே என்பது என் கருத்து.

ஜானகி தன்னுடைய குரலில் சாகசம் செய்த பாடல்கள் என அனேகப் பாடல்களை மேற்கோள் காட்டலாம்.



ஆனால் குரலை, தான் நினைத்த அச்சில் அப்படியே வார்ப்பது மட்டுமல்லாது இசை நுட்பத்திலும் ஒரேநேரத்தில் மேதமையை வெளிப்படுத்தும் வகையில் இவர் பாடிய பாடல்களே இவரை ஒரு தன்னிகரில்லாத மேதை என நான் இவரைப் பற்றி சொல்லக் காரணம். அவரே தன்னுடைய ஒரு நேர்காணலில் தான் இதுவரை பாடிய பாடல்களிலேயே கடினமானதென 'சிவ சிவ என்னத' என்ற கன்னடப் பாடலை குறிப்பிடுகிறார். காரணம், அந்தப் பாட்டில் அடுத்தடுத்த வரிகள் ஆபோகியிலும் தோடியிலும் மாற்றி மாற்றி அமைக்கப்பட்டிருக்கிறது. இது ஒரு ஸ்பூனில் குலோப் ஜாமுனும் மறு ஸ்பூ னில் சுக்கு மிளகு திப்பிலி அளவுக்கதிகமாய் போட்ட தீபாவளி லேகியமும் சாப்பிடுவது போல. போதாக் குறைக்கு வயலினுக்கு ஈடாக இந்தப் பாட்டில் இவர் பாடியிருக்கும் ஸ்வரங்கள் 'சி[illegible]கார வேலனே தேவா'வையே ஒன்றும் இ[illegible]மல் செய்கிறது. இதை இன்று கேட்கு[illegible]நு ஒரே டேக்கில் இதைப் பதிவு செ[illegible]வது எக்காலத்திலும் சாத்தியம் இல்லை என்றே தோன்றுகிறது. ஆனால் இவரால் முடிந்திருக்கிறது. இவை போன்ற தருணங்கள், நாதியா கோமனேசி 1976ஆம் ஆண்டு ஒலிம்பிக் போட்டியில் வாங்கிய ஹபெர்ஃபெக்ட் 10? போன்றவை. ஆண்டாண்டு காலத்திற்கும் இன்னொருவரால் தாண்டிச் செல்ல முடியாதவை.

'உதிரிப் பூக்கள்' படத்தில் போடா போடா பொக்கு என்கிற பாடலை வயதான கிழவியைப் போல் பாடியிருப்பார். அப்படிப் பாடுவதற்கு தேவையான குரல் மாற்றம் செய்திருக்கிறார் என்கிற விஷயத்தை விடுங்கள். இது நாட்டுப்புறத்திலேயே பிறந்து வளர்ந்த பெண்மணிதான் என்கிற உணர்வை ஏற்படுத்திவிட்டு, அதேபடத்தில்தான் இவர் 'நான் பாட வருவாய்' என கல்யாணியில் ஜிம்னாஸ்டிக் செய்திருக்கிறார். திரும்ப அதே படத்தின் 'அழகிய கண்ணே' என்கிற உயிரை உருக்கும் பாட்டைப் பாடியவரும் அவரே.

நான் சொல்ல வருவது - ஒரே படத்தில் சாஸ்த் ரீய பாணியில் 'தூங்காத விழிகள் ரெண்டை' அமிர்தவர்ஷினியாய் பொழியும் அதே ஜானகிதான் 'ஒரு பூங்காவனம், புதுவனம்' என இளமை ததும்பி 'ரோஜாப்பூ ஆடிவந்தது' என ஏரோபிக்ஸும் செய்கிறார். பாட்டி குரலில் பாடிய அதே ஜானகி 'கொக்கா மண்டி' என்கிற மலையாள படத்தில் ஒரு முழு நீளப் பாடலை சிறு குழந்தையின் குரலில் பாடியிருப்பார். நெஞ்சத்தை கிள்ளாதே கஸட்டில் 'மம்மி பேரு மாரி' என்ற பாடலுக்கு நேர் இருக்கும் எஸ்.ஜானகி என்கிற பெயர், இன்றளவும் நான் அச்சுப்பிழை என்று தான் எண்ணிக் கொண்டிருக்கிறேன்.

(சிவசங்கரி சிவானந்த லகரிபுகழ்) பெந்த்யால நாகேஸ்வர ராவ், எஸ்.எம்.சுப்பையா நாயுடு தொடங்கி, மெல்லிசை மன்னர்கள், எம்.பி. ஸ்ரீநிவாசன், சலீல் சௌத்ரி, ஜி.கே. வெங்கடேஷ் வழியாக இளையராஜாவிற்குப் பாடவரும்போது ஜானகி ஏற்கனவே ஒரு பெரிய நட்சத்திர பாடகி. தன் இசையில் அவரைப் பாடவைக்க வேண்டும் என்பது இளையராஜாவுக்குக் கனவாக இருந்திருக்கிறது. அது அவர் ஜானகிக்கு கொடுத்த ஒவ்வொரு பாடலிலும் எப்போதும் தெரிகிறது. அன்னக்கிளியில் ஆரம்பித்த இவர்கள் இருவரின் பயணம் படிப்படியாக அடைந்த பரிணாம வளர்ச்சியை ஜானகியின் பாடல்கள் மூலமாக மட்டுமே எடுத்துக்காட்ட முடிகிறது. இளையராஜாவின் ஆரம்பப் பாடல்கள் மொத்தமும் பாடிய ஜானகி, அதுவரை சுசீலா தக்க வைத்துக் கொண்டிருந்த தமிழ் சினிமாவின் முதன்மைப் பாடகி என்ற பெயரைத் தட்டிச் செல்கிறார். 16 வயதினிலேவின் 'செந்தூரப் பூவே' இளையராஜாவை மறுபேச்சின்றி மொத்தமாக அனைவரும் இசை மேதையாக ஒப்புக்கொள்ளும் இடத்தில் வைத்தது என்றால், அது ஜானகிக்கும் முதல் தேசிய விருதை வாங்கிக் கொடுத்தது. 'நல்ல நேரம் நேரம்' (கன்னடத்தில் 'யாரி காகா') என்ற பாடல் ஒலிப்பதிவை நேரில் பார்த்த ஆர்.டி.பர்மன் குட்டி போட்ட பூனை போல் இருப்பு கொள்ளாமல், அங்கும் இங்குமாய் நடனம் ஆடி இளையராஜாவை 'என்னய்யா நீ இருபது வருஷம் கழிச்சு கொடுக்க வேண்டிய இசையை இப்பவே கொடுத திட்டிருக்கே' என கட்டிப்பிடித்து கொண்



டாடுகிறார். இவ்வளவு நீண்ட பயணத்தில் இவ்விருவருக்கும் தொழில் ரீதியாக பிரச்சினை இல்லாமல் இல்லை. தன்னை விட்டுச் சென்ற யாரையும் தேடிப்போகாத இளையராஜா, ஜானகியுடன் மட்டும் பிளவு வந்த போதெல்லாம்

(17ஆம் பக்கம் பார்க்க)

# புளியம்பொக்கணை பிரதேசத்திற்கு இம்மாத நடுப்பகுதியில் மின்சாரம்


(கிளிநொச்சி)

புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலய பங்குனி உத்தர பொங்கல் விழாவினை முன்னிட்டு ஆலயத்திற்கும் புளியம்பொக்கணை பிரதேசத்திற்கும் ஈ.பி.டி.பி நாடாளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமாரின் ஏற்பாட்டில் வடக்கின் வசந்தம் மின் வழங்கல் திட்டத்தின் கீழ் மின்சாரம் வழங்கப்படவுள்ளது.

எதிர்வரும் 26 ஆம் திகதி பொங்கல் விழா நடைபெறவுள்ள நிலையில், வரும் எதிர்வரும் 19 ஆம் திகதி ஆலயத்திற்கான மின் விநியோகத்தினை நாடாளுமன்ற உறுப்பினர் உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைக்கவுள்ளார்.

புளியம்பொக்கனை நாகதம்பிரான் ஆலய பங்குனி உத்தர பொங்கல் விழாவினை சிறப்பாக மேற்கொள்வதற்கான முன் ஆயத்த நடவடிக்கைகளை மீளாய்வு செயவதற்கான கலந்துரையாடல் நேற்று முன்தினம் ஆலய வளாகத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் தலைமையில் நடைபெற்றது.

பொங்கல் விழாவிற்கான வேலைத்திட்டங்கள் குறித்து முன்னர் கலந்துரையாடப்பட்ட நிலையில், குறித்த வேலைத் திட்டங்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட முன்னேற்ற ஆய்விற்கமைய நாடாளுமன்ற உறுப்பினரின் ஏற்பாட்டில் வடக்கின் வசந்தம் மின் விநியோகத் திட்டத்தின் மூலம் சுமார் 145 இலட்சம் ரூபா செலவில் ஆலயத்திற்கும் புளியம்பொக்கணை



பிரதேசத்திற்குமான மின்சார இணைப்புக்களை வழங்குவதற்கான செயற்பாடுகள் துரிதமாக்கப்பட்டுள்ள நிலையில் எதிர்வரும் 19 ஆம் திகதி உத்தியோக பூர்வமாக மின்சாரத்தினை வழங்குவதற்கும் தீர்மானிக்கப்பட்டது.

அத்தோடு ஏனைய வேலைத் திட்டங்களான. வீதிகள் புனரமைப்பு, குடிநீர்விநியோகம், பாதுகாப்பு, போக்குவரத்து வாகனத்தரிப்பிடங்களை அமைத்தல், மருத்துவசேவையினை வழங்குதல், ஆலய வளாக சுகாதாரம் உள்ளிட்ட வேலைத் திட்டங்களை பொறுப்பேற்றவர்களால் குறித்த திட்டங்களை மேற்கொள்வதற்கான நடவடிக்கைகளின் முன்னேற்றம் குறித்தும் நாடாளுமன்ற உறுப்பினரால் விரிவாக ஆராயப்பட்டதுடன், வர்த்தக நடவடிக்கைகளை மேற்கொள்பவர்களுக்கான அனுமதிகளை வழங்குவது தொடர்பாகவும் விரிவாக ஆராயப்பட்டது.

இக்கலந்துரையாடலில் கிளிநொச்சி மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் ஸ்ரீனிவாசன், கண்டாவளை பிரதேச செயலர் முகுந்தன், நீர்ப்பாசனத் திணைக்கள கிளிநொச்சி மாவட்ட பிரதித்திட்டப்பணிப்பாளர் சுதாகரன், நீர்ப்பாசனத் திணைக்கள பொறியியலாளர் விகிர்தன், ஈ.பி.டி.பி.யின் கிளிநொச்சி மாவட்ட அமைப்பாளர் தவநாதன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# விண்ணப்பம் கோரல்


(யாழ்ப்பாணம்)

இலங்கை கணக்காளர் சேவையின் தரம் III ஐச் சேர்ந்த உத்தியோகத்தர்களுக்கான முதலாவது மற்றும் இரண்டாவது வினைத்திறன் காண் தடைப்பரீட்சைக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

பரீட்சை மும்மொழிகளிலும் கொழும்பு மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் நடாத்தப்படவுள்ளது.

விண்ணப்பதாரிகள் விண்ணப்பங்களை எதிர்வரும் 27 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக பரீட்சை ஆணையாளர் ஏற்பாடுகள் மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைகள் பிரிவு, இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் பெலவத்தை, பத்திரமுல்லை என்ற முகவரிக்கு அனுப்பிவைக்க வேண்டும்.

மேலதிக விபரங்களை 01.03.2013 வர்த்தமானியிலோ அல்லது தினமுரசு காரியாலயத்திலோ பார்வையிட முடியும்.



அச்சுவேலி - வரணன் அருள்மிகு பத்திரகாளி சமேத வீரபத்திரர் ஆலய மாசிமகத் திருவிழாவில் விசேட பூஜைகள் இடம்பெறுவதைக் காணலாம். (01)

# கொள்ளையில் ஈடுபட்டவர் மீது தொடர்கிறது வழக்கு

(திருநெல்வேலி)

கொள்ளை வழக்கு ஒன்றில் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த இளைஞர் ஒருவர் ஊர்காவற்றுறை நீதவான் நீதிமன்றத்தினால் பிணையில் செல்வதற்கு அனுமதிக்கப்பட்டார்.

இவ்வழக்கில் வேலணை கிழக்கைச் சேர்ந்த சீவரத்தினம் திலக்ஷன் (வயது - 21) என்பவர் கடந்த மாதம் 14 ஆம் திகதி இரவு 9.00 மணியளவில் மண்கும்பானைச் சேர்ந்த குமாரசாமி ஜெயலஷ்மி (வயது - 67) என்பவரிடமிருந்து எட்டு இலட்சத்து எண்பதினாயிரம் ரூபா பெறுமதியான நகைகளையும், பத்தாயிரத்து தொளாயிரம் ரூபா பணத்தையும், கடவுச்சீட்டையும் கொள்ளையடித்ததாக குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

இதுபற்றி ஊர்காவற்றுறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டதை யடுத்து மறுநாள் சந்தேகநபரைக் கைதுசெய்த பொலிஸார் இவரை ஊர்காவற்றுறை நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்தியபோது இருவார காலம் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டிருந்தது.

கடந்த வெள்ளிக்கிழமை இவ்வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது சந்தேக நபரைப் பிணையில் விடுவிக்குமாறு கோரி குறித்த சந்தேகநபர் சார்பில் ஆஜரான சட்டத்தரணி ஷர்மினி விக்னேஸ்வரன் வாதாடினார். இதனை முறையீட்டாளர் தரப்பில் ஆஜரான சட்டத்தரணி நிலுஷா கேதீஸ்வரனும் ஊர்காவற்றுறைப் பொலிஸாரும் ஆட்சேபனை தெரிவித்தனர்.

இருதரப்பு வாதங்களையுமடுத்து சந்தேக நபரை ஒரு இலட்சம் ரூபா பெறுமதியான இரண்டு ஆட்பிணையிலும், முப்பதாயிரம் ரூபா காசுப் பிணையிலும் விடுவித்த நீதவான் ஆர்.எஸ். மகேந்திரராஜா வழக்கை எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார். (137)



# வேலை வாய்ப்புச் செய்திகள்

ஓய்வு பெற்ற விவசாய போதனாசிரியர் அல்லது விவசாயத் துறையில் அனுபவம் வாய்ந்த ஓய்வு பெற்ற உயர் உத்தியோகத்தர்களுக்கான விவசாய முகாமையாளர் பதவிக்கான வெற்றிடம் உள்ளது. தகைமையுடையோர் எதிர்வரும் 10.03.2013 இற்கு முன்பாக தங்கள் விண்ணப்பங்களை அனுப்பி வைக்கலாம். விண்ணப்பங்களை அனுப்ப வேண்டிய முகவரி: தி.இராசநாயகம் (தலைவர்), மகாதேவா ஆச்சிரம சிறுவர் இல்லம், ஜெந்திநகர், கிளிநொச்சி.

---

உரும்பிராய் கிட்ஸ் பார்க் முன்பள்ளியில் க.பொ.த.உயர்தரத்தில் நடனம், சங்கீதம், நாடகமும் அரங்கியலும் ஆகியவற்றில் திறமைச் சித்தி பெற்றவர்களுக்கும், இதே பாடங்களில் உயர் தரத்தில் திறமைச்சிந்தி அடைந்து கற்பித்தலில் அனுபவம் உள்ளவர்களுக்கும் ஆசிரியர் பதவிக்கான வெற்றிடம் உண்டு. தகைமையுடையோர் இன்று திங்கட்கிழமை நடைபெறும் நேர்முகப்பரீட்சைக்கு உரிய ஆவணங்களுடன் பிற்பகல் 3 மணிக்கு நேரில் சமுகம் தரவும். நீங்கள் வரவேண்டிய முகவரி: உரும்பிராய் கிட்ஸ் பார்க், ஞானவைரவர் கோவில் வீதி, உரும்பிராய்.

---

யாழ். - பாசையூர், புங்கன்குளம் வீதியில் அமைந்துள்ள முருகானந்தா வைத்தியசாலை நிலையத்திற்கு பெண் தாதிமார் மற்றும் பயிலுநர்களுக்கான வெற்றிடங்கள் உண்டு. ஆர்வமுடையோர் தொடர்பு கொள்ளவும். தொ.பே.இல: 077 628 4687.

---

கொழும்பு - வெள்ளவத்தையில் உள்ள சிகை அலங்கரிப்பு நிலையத்திற்கு வேலையாட்கள் தேவை. நல்ல சம்பளத்துடன் தங்குமிட வசதி உண்டு. ஆர்வமுடையோர் தொடர்பு கொள்ளலாம். தொடர்பு கொள்ள வேண்டிய தொ.பே.இல: 077 902 9350, 011 259 1310.

---

புடைவைக்கடை ஒன்றுக்கு அனுபவம் உள்ள வேலையாட்கள் தேவை. ஆண் - பெண் இருபாலாருக்கும் வெற்றிடம் உண்டு. தொடர்புகளுக்கு: 077 254 6353, 077 703 3573.

---

பெண்களுக்கான அழகு சாதனப் பொருட்கள் விற்பனை செய்வதற்கு ஆட்கள் தேவை. தொடர்புகளுக்கு: 077 644 7462.

---

கொழும்பில் உள்ள We Care Home Nursing நிறுவனத்திற்கு வீட்டுத் தாதியர்கள் தேவை. பயிற்சி பெற்ற, பெறாத தாதியர்களும், கல்விப்பொதுத் தராதர சாதாரண தரத்திற்கு மேல் படித்தவர்களும் விரும்பத்தக்கது. உணவு, தங்குமிட வசதியுடன் சம்பளம் 10,000 ரூபாவிலிருந்து 18,000 ரூபா வரை வழங்கப்படும். தொடர்புகளுக்கு: 077 756 8349.

---

சுன்னாகத்தில் இயங்கும் சட்டத்தரணியின் அலுவலகம் ஒன்றிற்கு ஆங்கிலம், தமிழ் ஆகிய இரு மொழிகளிலும் நன்கு புலமைடைய கணனித் தட்டெழுத்தாளர், தட்டச்சு இயந்திரத் தட்டெழுத்தாளர் தேவை. தொடர்புகளுக்கு: 021 321 5081, 077 544 0293.

---

தனியார் துறைமுகமொன்றில் கப்பல் வேலைக்கு 18 - 55 வயது வரையான ஆண்கள் தேவை. வேதனம் 25,000 ரூபா, 35,000 ரூபா, 40,000 ரூபா வரை. உணவு, தங்குமிட வசதி உண்டு. தொடர்புகளுக்கு: 077 303 3803.

---

வவுனியாவில் உள்ள ஹோட்டல் மற்றும் ரெஸ் ரோறண்ட் இற்கு சேவையாளர்கள் தேவை. Cook, Kitchen Helper, Room Boy, Stewards, Gardener உடனடியாகத் தேவை. தொழில் அடிப்படையில் ஊதியம் 15,000 ரூபாவிலிருந்து 45,000 ரூபா வரை. அகவை 20 தொடக்கம் 55 வயதுக்குட்பட்ட இருபாலாரும். அனுபவமுள்ளவர்கள் விரும்பத்தக்கது. தொடர்புகளுக்கு: 077 556 1883.

---

கொழும்பு - வெள்ளவத்தையில் இயங்கும் பிரபல சைவ உணவகத்திற்கு வெயிட்டர்கள், சமையலாளர்கள், உதவியாளர்கள், டீ மேக்கர் மற்றும் ரொட்டி வேலைகளுக்கு ஆட்கள் தேவை. தொடர்புகளுக்கு: 071 456 7808, 071 331 7857.

# வடக்கில் நிரந்தர படைத்துறைக் கட்டமைப்பு உருவாக்குவதில் அரசுக்கு அதீக அக்கறை

## சித்தாரா ஷரின் சாடல்

(லண்டன்)

வடக்கில் நிரந்தரமான படைத்துறைக்கட்டமைப்பை உருவாக்குவதில் அரசு தீவிர அக்கறை காட்டிவருவதாக பெண்கள் நடவடிக்கை வலையமைப்பைச் சேர்ந்த சித்தாரா ஷரீன் பி.பி.சி.தமிழோசைக்கு வழங்கிய செவ்வியில் தெரிவித்துள்ளார்.

பி.பி.சி.தமிழோசை இலங்கை குறித்த செய்தி ஆய்வுரையில் இவரது செவ்வியும் ஒலிபரப்பாகியது. இச்செய்தி ஆய்வுரையில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது;

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 22ஆவது அமர்வில் இலங்கை ஜனாதிபதியின் சிறப்புத்தூதுவரான அமைச்சர் மகிந்த சமரசிங்க கூறியுள்ள கருத்துக்கள் உண்மைக்கு மாறானவை என்று சிவில் சமூக அமைப்புக்கள் கூறுகின்றன.

இலங்கைக்கு எதிராக கொண்டுவரப்பட்டுள்ள தீர்மானம் தேவையில்லாத ஒன்று என்றும், அது கொண்டுவரப்பட்டிருக்கும் நேரம் கூட தவறானது என்றும், அது ஐ.நா மனித உரிமை கவுன்சிலின் அடிப்படைக் கொள்கைகளுக்கு முரணானது என்றும் ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் இலங்கை தெரிவித்தது.

கடந்த புதன்கிழமை ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் இலங்கையின் தரப்புவாதங்களை முன்வைத்துப் பேசிய அமைச்சர் மகிந்த சமரசிங்க, மனித உரிமைகள் நிலமைகள் தொடர்பில் இலங்கை ஏற்கனவே உரிய நடவடிக்கைகளை எடுக்கத் தொடங்கிவிட்ட நிலையில் இந்தத் தீர்மானம் தமது அபிப்பிராயப்படி தேவையற்ற ஒன்று என்று கூறியிருந்தார்.

ஆனால் இலங்கையில் மனித உரிமைகள் சூழலில் முன்னேற்றமில்லை என்று உள்ளூர் சிவில் சமூக அமைப்புக்கள் கூறுகின்றன.

படையினரால் கைது செய்து தடுத்து வைக்கப்பட்டுள்ளோரின் விவரங்கள் வெளியிடப்பட்டுள்ளதாக மகிந்த சமரசிங்க தெரிவித்தது முழு பூசணியை மறைக்கும் நடவடிக்கை என்று பெண்கள் நடவடிக்கை வலையமைப்பைச் சேர்ந்த சித்தாரா ஷரீன் பி.பி.சி.தமிழோசையிடம் தெரிவித்தார்.

படையினரிடம் தமது உறவினர்களை கையளித்த பலருக்கு அவர்களின் நிலை என்னஆனது என்பது தெரியவில்லை என்றும் அவர் கூறினார்.

இலங்கை அரச நிர்வாகத்தில் இராணுவ குறுக்கீடு இல்லை என்று அரசு கூறுகிறது. ஆனால் வடக்கே இரண்டு லட்சம் இராணுவத்தினர் இருக்கின்றனர். நிரந்தர கட்டமைப்புகளையும் இராணுவம் உருவாக்கி வருகிறது.

பாலர் பள்ளி ஆசிரியர்கள் நியமனத்தைக்கூட இராணுவம் தான் வழங்குகிறது என்றார் அவர்.

அரசு சாரா நிறுவனங்கள் தொடர்ந்து கண்காணிக்கப்படுவதாகவும், கல்வி உள்ளிட்ட பல துறைகளில் அவர்களால் சுதந் திரமாக செயல்பட முடியாமல் இருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

கருத்துப் பகிர்தல்

# தமிழாராட்சி மாநாடு கூடியபோது அந்த 9 உயிர்கள் பிரிந்தது எப்படி

## அனுபவம் பகிர்கிறார் வாசகர்

1976ஆம் ஆண்டு ஜனவரி 10ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற தமிழாராட்சி மாநாட்டில் ஜனார்த்தனம் உரையாற்றிக் கொண்டிருந்த போதுதான், பொலிஸார் பொது மக்களுடன் தகராற்றில் ஈடுபட்டு 9 தமிழர்கள் கொல்லப்பட்ட சம்பவம் நேர்ந்தது என பத்திரிகையில் தெரிவிக்கப்பட்ட செய்தியானது. உண்மையில் முற்றிலும் தவறான உண்மைக்கு புறம்பானதாகும்.


குறிப்பிட்ட தமிழாராட்சி மாநாட்டின் இறுதி நாள் நிகழ்வானது யாழ்.வீரசிங்கம் மண்டபத்திற்கு முன்னால் அமைக்கப்பட்ட மேடையில் நடைபெற்றது. அங்கே வரலாறு காணாதவாறு இலட்சக்கணக்கான மக்கள் மேடையின் முன்னே திரண்டிருந்தனர். முன்பக்கமாக இருந்த வீதியும், மக்களால் மறிக்கப்பட்டது. அப்போது அவ்வீதியால் வந்த பொலிஸ் வாகனத்தை நேரே செல்ல விடாது மக்கள் தடுத்தனர். அதன் பின் ஆத்திரம் கொண்ட பொலிஸார் திரும்பிச் சென்று கலகம் அடக்கும் பொலிஸ் வாகனத்தில் வந்தார்கள். அப்போதுதான் தலைவர் உரையை தொடர்ந்து முதல் முதலாக தஞ்சாவூர் பல்கலைக் கழகத்தின் பேராசிரியர் ரஜினா முகமது அவர்கள் பேச ஆரம்பித்தார். தமிழின் பெருமையைப்பற்றி ஒரு மூன்று நிமிடங்கள்தான் பேசியிருப்பார். அவரின் பேச்சின் இனிமையைக் கேட்ட பொலிஸார் இவர்தான் ஜனார்த்தனன் என்று எண்ணி கண்ணீர்ப்புகைக் குண்டை அடித்து கலகத்தை ஆரம்பித்து விட்டார்கள். குறிப்பிட்ட மேடையிலேயே, பேராளர்களுடனும், வெளிநாட்டுப் பிரதிநிதிகள், திரு.அமிர்தலிங்கம், திருமதி.மங்கையர்கரசி ஆகியோர் சகிதம் பல அறிஞர்கள் மத்தியில் திரு.ஜெனார்த்தனன் அவர்களும் மேடையில் இருந்தார். அவர் குறிப்பிட்ட மாநாட்டில் எப்போதாவது பேசவில்லை. இத்தவறான செய்திக்காக மனம் வருந்துகின்றேன்.

திரு.ஜனார்த்தனன் அவர்கள் தமிழர்களுக்காகவும், ஈழத்தமிழர்களுக்காவும் செய்த சேவைகள் அனைத்தும் மறக்க முடியாதவை. ஆனால் அவரின் மறைவுச் செய்தியை எமது பத்திரிகைகள் பிரபல்யப்படுத்தவில்லையே என்று கவலைப்படுகின்றேன்.

குறிப்பிட்ட மாநாட்டில் நேரடியாக பங்குகொண்டவன் என்ற வகையில் இவ்விபரங்களை தரக்கூடியதாக இருந்தது. அதனால் சம்பந்தப்பட்டவர்கள் மன்னிக்கவேண்டும்.

கண்ணீர்ப்புகைக்குண்டால்,
மக்கள் மூச்சுத்திணறியும்,
மின்சாரம் தாக்கியுமே உயிர்நீர்த்தார்கள்.

-வே.ம.இந்திரநாதன்.



# பரமர் சங்கமம்

'குட்டக் குட்டக் குனியிறவனும் மடையன, குனியக் குனியக் குட்டுறவனும் மடையன்' எண்ட பழமொழி தான் ஞாபகத்துக்கு வருகிறது.

மக்களைக் காலம் காலமாகக் கட்டியாண்ட மன்னர்களின் ஆட்சி முடிந்து; மக்களால் தெரிவு செய்யப்படும் மக்களில் ஒருவன், மக்களை ஆளத் தொடங்கிய காலத்தில் மக்கள் அனைவரும் குதூகலித்தனர்.

மக்களின் கஷ்ட, நஷ்டங்களைத் தெரிந்து கொண்ட ஒருவனால் ஆளப்படும் போது, சாதாரண மக்களின் வீக்க, தூக்கங்களை அறியாத ஒருவரால் ஆளப்படுவதைப் பார்க்கிலும், விமோசனம் கிடைக்குமென்றே எதிர்பார்க்கப்பட்டது.

மக்கள் ஆட்சி மலர்ந்த பின்னால் மாறி, மாறி ஆட்சிப் பீடம் ஏறியவர்களால் வருடா வருடம் விதிக்கப்படுகின்ற சோலை வரி, வியாபார விரி அதிகரிக்கப்பட்டபோது குடிமக்கள் காலத்துக்குக் காலம் தம் உணவு, உடை, உறைவிடம் போன்ற அத்தியாவசியத் தேவைகளில் ஒறுத்தல்களையே கடைப்பிடிக்க நேர்ந்தது.

நாடாளுமன்றத்திற்கும், உள்ளூராட்சி சபைகளுக்கும் நடத்தப்படும் தேர்தல் நாட்களில் மக்களுக்கு சொல்லிப் போகும் வாக்குறுதிகள், நிறைவேற்றப் படாமல் பதவியில் இருக்கும் காலத்தில் தேர்தலுக்குச் செலவு செய்த கோடிகள், லட்சங்களைக் கைப்பற்றுவதிலே கண்ணாக இருப்பர்.

அதற்கான வழிகளைப் புதியவேலைத் திட்டங்களால் பெற்றுக் கொள்ள வரிவிதிப்பு சகல உறுப்பினர்களின் ஏகோபித்த ஆதரவுடன் நிறைவேற்றப்படும்.

ஐந்து பேர்களைக் கொண்ட குடும்பத்தில் ஒருவருடைய உழைப்பிலே உணவு, உடை, உறைவிடங்களைத் தேடி வாழ்வதே பெரும் பாடு. அதனிடையே வருடாவருடம் சோலைவரி, வருமானவரி என்பவற்றையும் ஈடுசெய்வதென்றால் எப்படி இருக்கும்?

நாளாந்தம் வாழ்க்கைச் செலவில் கொள்முதலாகும் பொருட்களால் சுரண்டப்படும் வரிகளைக் கணக்கில் எடுப்பதில்லை. இத்தனைக்கும் ஒரு உழைப்பாளியின் வருவாயை நம்பியே தொண்ணூறு வீதமான குடும்பங்கள் சீவிக்கின்றன.

இந்நிலையில் இவ்வருடம் யாழ்.மாநகர சபையின் சோலை மற்றும் வர்த்தக வரி வீதங்கள் பல மடங்கு அதிகரிக்கப்பட்டிருப்பதாக மக்கள் தெரிவித்து வருகின்றனர்.

'தனக்குத் தானே மண் அள்ளிப்போட்டுக் கொண்டது போல' மக்களால் தெரிவு செய்யப்பட்ட நிர்வாகத்தால் மக்களைத் திக்குமுக்காடச் செய்வதென்பது மக்கள் ஆட்சியாக இருக்குமா? என்னும் கேள்வி தான் எழுகிறது.

ஒரு கடைக்காரர் தெரிவித்தது இது. போன வருசம் ஆயிரத்து இருநூறு ரூபா அறவிடப்பட்ட வியாபார அனுமதிப் பத்திரத்துக்கு இம்முறை ஐந்தாயிரம் கூட்டி ஆறாயிரத்து இருநூறு ரூபா கட்டச் சொன்னா என்னண்டு கட்டுறே...?

'அது மட்டுமே ஆதன சோலை வரிக்கு வருசம் நானூறு ரூபா வந்தே. அதுவும் இம்முறை ஆயிரத்தைத் தாண்டி விட்டது. உப்புடியெண்டா நாங்க வாழுறேல்லையோ...' எண்டு தலையில் கைவைக்கிறார்.

இதுகளைக் கேட்டோடனம் பரமருக்கு 'குட்டக் குட்டக் குனியிறவன' எண்ட பழமொழி ஞாபகத்துக்கு வந்ததில் புழையில்லத்தானை. உரலுக்கு ஒரு பக்கம் இடி மத்தளத்துக்கு இருபக்கமும் அடி, இல்லையே பின்னை சொல்லுங்க பாப்பம்...

# மூன்று கடைகளில் கொள்ளை ஒரே இரவில் திருடர் கைவரிசை

(கொழும்பு)

நாவலப்பிட்டி நகரில் உள்ள மூன்று கடைகளை ஒரே இரவில் உடைத்து கொள்ளையிடப்பட்ட சம்பவம் ஒன்று நேற்று முன்தினம் அதிகாலை இடம் பெற்றுள்ளது. நாவலப்பிட்டி நகரில் கொத்மலை வீதியிலுள்ள 3 கடைகளும் ஹோகன்ஸ்பார்க் வீதியிலுள்ள இரண்டு கடைகளிலுமே இந்தக் கொள்ளைச் சம்வம் இடம் பெற்றுள்ளது. கடைகளின் கதவுகள் திறக்கப்பட்டிப்பதைக் கண்ட உரிமையாளர்கள் உடனடியாக சம்பவம் தொடர்பில் நாவலப்பிட்டி பொலிஸாரின் கவனத்துக்குக் கொண்டு வந்தனர்.

கொத்மலை வீதியில் புடவைக்கடை, பலசரக்குக் கடை, வீட்டுத்தளபாடங்கள் மற்றும் சிறுவர் பொருட்கள் விற்பனை செய்கின்ற கடைகளின் கதவுகள் உடைக்கப்பட்டு கடைகளில் இருந்த ரொக்கப்பணம் கொள்ளையிடப்பட்டுள்ளது.

இந்தக்கடைகளில் எந்தவிதமான பொருட்களும் கொள்ளையிடப்படவில்லை. அதே போல ஹோகன்ஸ்பார்க் வீதியிலுள்ள மதுபானசாலை ஒன்றிலும் பழக்கடை ஒன்றிலும் கொள்ளைச்சம்வம் இடம் பெற்றுள்ளது.

இந்தக் கடைகளிலும் ரொக்கப்பணம் களவாடப்பட்டுள்ளதாக உரிமையாளர்கள் பொலிஸாரிடம் தெரிவித்துள்ளனர்.

கொள்ளைச் சம்பவம் இடம் பெற்ற வர்த்தக நிலையங்களில் நாவலப்பிட்டி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டதோடு பொலிஸ் மோப்ப நாய்களைக் கொண்டு தேடுதல் நடவடிக்கைகளிலும் ஈடுபட்டனர்.

# இந்திய மீனவர்களின் அத்துமீறல் இன்னும் விடாது தொடர்கிறது

(கொழும்பு)

இலங்கை கடற்பரப்பிற்குள் பிரவேசித்த இந்திய மீனவர்கள் 16 பேர் கற்பிட்டி கடலில் வைத்து கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர். மூன்று ரோலர் படகுகளில் வந்த 16 பேரும் நேற்று அதிகாலை கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப் படும் போது இந்திய மீனவர்கள் கற்பிட்டி கடற்பரப்பில் மீன் பிடித்துக் கொண்டிருந்ததாக கடற்படை ஊடகப் பேச்சாளர் வர்ணகுலசூரிய தெரிவித்துள்ளார்.

இந்திய மீனவர்கள், இலங்கை கடற்படையினரால் தொடர்ச்சியாக தாக்கப்படுவதாக குற்றச்சாட்டுக்கள் எழுந்துள்ள நிலையில் இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.




மன்னார் - எருக்கலம்பிட்டி முஸ்லிம் மகாவித்தியாலய மைதானத்தில் சென்ற வாரம் நடைபெற்ற மீலாத்விழாவில் அஹதிய்யா மாணவர்களிக் இஸ்லாமிய நிகழ்வையும் உலமாக்கள் கடற்படைத் தளபதி, பொலிஸ் அதிகாரிகள் மேடையில் அமர்ந்திருப்பதையும் காணலாம். (105)


**24, 25 ஆம் வினாக்களிலே தொடக்கத்தில் தரப்பட்டுள்ள கூற்றைப்பற்றிய சரியான முடிவை தெரிவுசெயக.**

24) தினமும் பாடசாலை காலை 7.30 மணிக்கு ஆரம்பமாகும்.
   1) இது பெரும்பாலும் நடைபெறும் ஒரு நிகழ்ச்சியாகும்.
   2) இது எப்போதும் நடைபெறும் ஒரு நிகழ்ச்சியாகும்.
   3) இது ஒருபோதும் நடைபெறுவதில்லை.

25) தரம் - 5 புலமைப்பரிசில் பரீட்சை ஒவ்வொரு வருடமும் நடைபெறும்.
   1) இது எப்போதும் உண்மையாகும்.
   2) இது பெரும்பாலும் உண்மையாகும்.
   3) இது ஒருபோதும் உண்மையானதன்று.

26) மழை பெய்தால் வெப்பம் குறையும். இப்போது மழை பெய்யவில்லை. எனவே
   1) வெப்பம் அதிகரிக்கும் 2) வெப்பம் மாறாதிருக்கும் 3) வெப்பம் குறையும்

27) இங்கு தரப்பட்டுள்ள உருக்களை ஏதோ ஒரு அடிப்படையில் வகைப்படுத்துக.




(1) A B / C D / E F (2) C D / A E / B F (3) A B / C E / D F

**பின்வரும் அழைப்பினைப் பயன்படுத்தி விடை தருக.**

| |
|---|
| **மட் / களுதாவளை ம.வி - ஆரம்பப்பிரிவு** |
| **மாணவர்களின் கல்விக் கண்காட்சி - 2008** |
| இடம் : ஆராதனை மண்டபம் |
| காலம் : ஏப்ரல் 18, 19 மற்றும் 20 ஆம் திகதி காலை 9.00 மணி தொடக்கம் 4.30 மணிவரை |
| பிரதம அதிதி : பேராசிரியர் C.J.ஜேசுதாசன் |
| இக்கண்காட்சியைப் பார்வையிட வருமாறு தங்களை அன்புடன் அழைக்கின்றோம். |
| மட் / களுதாவளை ம.வி — அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் |

28) மேற்படி கல்விக் கண்காட்சி எத்தனை நாட்கள் நடைபெறவுள்ளது?
   1) 2 2) 3 3) 4

29) தினமும் கல்விக் கண்காட்சி எவ்வளவு மணிநேரம் நடைபெறும்?
   1) 6 மணி 30 நிமிடம் 2) 7 மணி 30 நிமிடம் 3) 8 மணி 30 நிமிடம்

30) ஒரு குவியலிலுள்ள 612 மாம்பழங்களை 9 பேருக்கு சமமாகப் பங்கிடப்பட்டால் ஒருவருக்கு 68 பழங்கள் கிடைத்தன. அப்பழங்களை 6 பேருக்கு சமமாக பங்கிட்டால் ஒருவருக்கு எத்தனை பழங்கள் கிடைக்கும்? ..............................................

புலமைப்பரிசில் மாணவர்களுக்கான பரீட்சை வினாத்தாளுக்கான விடைகள் இனி வெளிவரும் இதழ்களில் தங்களுக்குப் பிரசுரிக்கவுள்ளோம் என்பதை தெரிவித்துக்கொள்கிறோம்.



# தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சை - 2013

பகுதி - I
1.30 மணி


# கல்வி முரசு




S.T.திலக்

**கீழே தரப்பட்ட விபரணத்தை வாசித்து விடை தருக.**

**பின்வரும் அடைப்புகளில் காணப்படும் முகங்களில் ஒன்று வேறுபட்டது. அந்த அடைப்பின் கீழ் கோடிடுக.**





2) பின்வரும் உருவிலுள்ள வெற்றிடத்திற்குப் பொருத்தமான விடையின் கீழ் கோடிடுக.




3) பின்வரும் உருக்களை நன்றாக அவதானிக்கவும்

குறித்த உருக்களை ஒரு குறித்த இயல்பின் அடிப்படையில் ஒழுங்குபடுத்தி வைத்தால் சரியான விடை
1) B,D,A,C
2) B,A,D,C
3) C,B,A,D




பின்வரும் பட்டியலைப் பார்க்க

| குறியீடு | பொருள் | அளவு | விலை |
|---|---|---|---|
| A | சீனி | 1 Kg | ரூ. 68 |
| B | மாசி | 500g | ரூ. 250 |
| C | பருப்பு | 1 kg | ரூ. 90 |
| D | தேயிலை | 2.50g | ரூ. 200 |

ஒவ்வொரு பொருளினதும் விலைக்கு ஏற்ப ஒழுங்குபடுத்தினால் கிடைக்கும் விடை
1) A,C,D,B 2) B,D,A,D 3) D,B,C,A

5) ஒரு மொழுகுவர்த்தி நான்கு மணிநேரம் ஒளிரும். இவ்வாறான நான்கு மெழுகுவர்த்திகளை ஒரே நேரத்தில் பற்ற வைத்தால் எத்தனை மணி நேரம் ஒளிரும்?
   1) 4 மணித்தியாலம் 2) 8 மணித்தியாலம் 3) 16 மணித்தியாலம்

6) பாடசாலைத் தோட்டமொன்றில் 5 cm இடைவெயியில் கனகாம்பரத்தை நடுவதற்கு தீர்மானிக்கப் பட்டது 20 m நீளமுடைய பாத்தியில் நடுவதற்கு எத்தனை கனகாம்பரக் கன்றுகள் தேவை?

1) 5 2) 4 3) 3

7) ஒரு தண்ணீர்த்தாங்கியில் 30 லீற்றர் நீர் உள்ளது. இத்தாங்கியிலிருந்து 05 நிமிடத்தில் ஒரு லீற்றர் நீர் வெளியேறும் எனில், தாங்கியிலிருந்து நீர் முழுவதும் வெளியேற எவ்வளவு நேரம் தேவை?

1) 2 மணி 30 நிமிடம் 2) 3 மணி 20 நிமிடம் 3) 3 மணி 30 நிமிடம்

**பின்வரும் புதிர்களை நன்கு வாசித்து விடை எழுதுக.**


8) முதலாம் எழுத்து கண்ணில் உண்டு. காதில் இல்லை, இரண்டாம் எழுத்து பத்தில் உண்டு. இருபதில் இல்லை, மூன்றாம் எழுத்து தினத்தில் உண்டு, செவ்வாயில் இல்லை. அது என்ன?

1) பத்து 2) கத்தி 3) கயிறு


9) அச்சு இல்லா சக்கரம், அழகு காட்டும் சக்கம் அது என்ன?

1) வண்டில் சில்லு 2) வட்டம் 3) வளையல்


கீழேயுள்ள கணிதச் செய்கையை அவதானித்து விடை தருக.




10) தரப்பட்டுள்ள உருக்களிடையே பெறுமதி குறைந்த உரு எது?




தரப்பட்டுள்ள உருக்களிடையே பெறுமதி கூடிய உரு எது?




12)  இற்குச் சமமான விடையைக் குறிக்கும் உரு எது?




**பின்வரும் பொருட்களின் விலைகளின் கூட்டுத்தொகையை அவதானித்து விடை எழுதுங்கள்**

| 2 பேனா, 3 பென்சில் | 2 பேனா, 2 பென்சில் | 2 பென்சில், 1 புத்தகம் |
|---|---|---|
| ரூ.44 | ரூ.38 | ரூ.72 |

13) ஒரு பேனாவின் விலை எவ்வளவு?

1) ரூ. 11 2) ரூ. 12 3) ரூ. 13

14) ஒரு பென்சிலின் விலை எவ்வளவு?

1) ரூ. 13 2) ரூ. 6 3) ரூ. 4

15) ஒரு புத்தகத்தின் விலை எவ்வளவு?

1) ரூ. 55 2) ரூ. 60 3) ரூ. 65



16) அனுலா தனது 10 ஆவது பிறந்த தினத்தை இந்த வருடத்தின் யூன் 3 ஆம் திகதி புதன் கொண்டாடினாள். இவள் தனது 11 ஆவது பிறந்த தினத்தை அடுத்த வருடம் எந்தக் கிழமை கொண்டாடுவாள்?

1) செவ்வாய் 2) புதன் 3) வியாழன்

17) ஒரு பண்ணையொன்றில் 25 ஆடுகளும், 13 கோழிகளும், 9 வாத்துக்களும் உள்ளன. இப்பண்ணையிலுள்ள விலங்குகளின் கால்களின் எண்ணிக்கை யாது?

1) 142 2) 144 3) 146

**பின்வரும் வினாக்களுக்கு வெற்றிடத்திற்கு பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்து எழுதுக.**

18) அழகிய பறவை கிளி, அச்சத்தால் வருவது ..............

1) பயம் 2) கிழி 3) கிலி

19) உணவின் மறுபெயர் ஊண் , உடம்பின் மறுபெயர் ...................

1) மெய் 2) ஊன் 3) பொய்

**பின்வரும் பாடலை வாசித்து, தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை தருக.**

கடலிற் பொங்கும் திரையைப்பார்
காற்றில் சிதறும் நுரையைப்பார்
அலைகள் மோதும் கரையைப்பார்
அவைகள் தடவும் தரையைப்பார்

20) இப்பாடலிலுள்ள ஒத்து ஒலிக்கும் சொற்கள்

1) கடலில், காற்றில் 2) திரை, நுரை 3) பொங்கும், மோதும்

21) கடலில் நுரைகள் தோன்றுவற்கு காரணம் யாது?

1) காற்று வீசுவதால் 2) கடல் பொங்குவதால் 3) அலைகள் மோதுவதால்

22) அடைப்பினுள் தரப்பட்டுள்ள சொற்களைக் கொண்டு இடைவெளி நிரப்புக.

| | | |
|---|---|---|
| நண்டு | குன்று | குறிப்பு |
| குளவி | புயம் | விசம் |

பத்து → துப்பி → பிறகு → .................. → ........................

23) முயற் கொம்பினால் செய்யபட்ட அலங்காரப் பொருட்களின் விலை சந்தையில் மிகவும் உயர்வாக இருந்தது. இது நடைபெற இயலாது. இதற்கு காரணம்

1) முயலின் கொம்பினால் அலங்காரப் பொருட்களை செய்ய முடியாது.

2) முயற் கொம்பினால் செய்யப்பட்ட அலங்காரப் பொருளின் விலை குறைவு.


3) முயலுக்கு கொம்பு காணப்படுவதில்லை.

# காங்கிரஸ் கட்சி தலைவர்களுடன் ஆலோசனை நடத்தும் ராகுல்



எதிர்வரும் நாடாளுமன்ற தேர்தலில் காங்கிரஸின் கரங்களை பலப்படுத்துவதற்காக அக் கட்சியின் பொதுச்செயலாளராக உள்ள ராகுல் காந்தி ஒவ்வொரு மாநிலமாக சென்று அக் கட்சியின் பொறுப்பாளர்களையும் கட்சித் தொண்டர்களையும் சந்தித்து அவர்களின் ஆக்கபூர்வமான ஆலோசனைகளை அவர் கவனமாக கேட்டறிந்து வருகிறார்.


கடந்த வெள்ளியன்று மராட்டிய மாநிலத்தில் அவர் ஆலோசனை கூட்டத்தில் பங்கேற்ற போது காங்கிரஸ் கட்சியின் அதிகாரபூர்வ வேட்பாளர்களை எதிர்த்து போட்டியிட்டவர்கள் எக்காரணத்தைக் கொண்டும் இனி மீண்டும் காங்கிரஸ் கட்சியில் சேர்த்துக் கொள்ளப்பட மாட்டார்கள் என உறுதிபட தெரிவித்தார்.




ராகுல் காந்தியின் இத்தகைய துணிச்சலான அனுகுமுறை காங்கிரஸாரிடையே உற்சாகத்தையும், புதிய உத்வேகத்தையும் ஏற்படுத்தியுள்ளது. 4-ஆம் திகதிவரை மாநில காங்கிரஸ் நிர்வாகிகளுடன் கலந்தாலோசனை கூட்டங்களில் பங்கேற்கும் ராகுல் காந்திக்கு வரும 6ஆம் திகதி காங்கிரஸ் மேலிடத் தலைவர்களின் கூட்டத்திற்கு ஏற்பாடு செய்துள்ளனர்.

இந்த கூட்டத்தில் எதிர்க்கட்சிகளின் குற்றச்சாட்டுகளுக்கு பதிலடி தருவது, கட்சியின் அடிப்படை அமைப்புகளை பலப்படுத்துவது, நாடாளுமன்ற தேர்தலை எதிர்கொள்வது உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகள் தொடர்பாக விவாதிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# பலாத்காரத்தின் எதிரொலி; டில்லியில் வன்முறை



டில்லியில் மங்கோல்புரி பகுதியில் அரசுப் பள்ளியிலேயே 7 வயது மாணவி, பலாத்காரம் செய்யப்பட்ட சம்பவத்தை அடுத்து பல பகுதிகளில் வன்முறை வெடித்துள்ளது.

எனவே வன்முறைச் சம்பவத்தை தடுக்கும் வகையில் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் மாலை இந்த செய்தி பரவியதும், பள்ளி மாணவி சிகிச்சை பெற்று வரும் பகுதிக்கு அருகே கூடிய 500க்கும் மேற்பட்டோர், அவ்வழியாக வந்த பேருந்துகளை கற்களை வீசி தாக்கினர்.

அவர்களை அப்புறப்படுத்த காவல்துறையினர் கண்ணீர் புகைக் குண்டுகளை வீசினர்.

வன்முறையில் ஈடுபட்ட 17 பேர் கைது செய்யப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.



டில்லியில் நடைபெற்ற பா.ஜ. தேசிய செயற்குழு கூட்டத்தில் பா.ஜ. வின் பிரதமர் வேட்பாளர் பதவிக்கு குஜராத் முதல்வர் நரேந்திர மோடி ஆதரவு அதிகரித்துள்ளது. கூட்டத்தில் பங்கேற்று கலந்துரையாடிய மூத்தத் தலைவர்கள் சுஷ்மா சுவராஜ், எல்.கே.அத்வானி, அருண் ஜெட்லி.

# அனுஷ்காவிற்கு திருமணம் மாப்பிள்ளை தொழிலதிபராம்



அருந்ததி படத்திற்குப் பிறகு அதிரடி நடிகையாக உருவெடுத்தவர் அனுஷ்கா. ஏற்கனவே மாதவனுடன் நடித்த இரண்டு படத்திற்கு பிறகு தமிழில் படவாய்ப்பில்லாமல் தெலுங்கு சென்ற அனுஷ்கா, தென்னிந்திய அளவில் முக்கியமான நடிகைப் பட்டியலில் இடம் பிடித்தார். குறிப்பாக, முன்னணி நடிகர்களே அனுஷ்காவுடன் நடிக்க பயப்படும் அளவுக்கு திகழ்ந்து வருகிறார். அந்த வகையில், தற்போது தமிழில் சிங்கம் -2, இரண்டாம் உலகம் படங்களை முடித்து விட்ட அனுஷ்கா, அடுத்தபடியாக தெலுங்கில் ராணி ருத்ரம்மா தேவி மற்றும் நான்ஈ இயக்குனர் ராஜமவுலி இயக்கும் படம் என இரண்டு சரித்திர படங்களில் நடிப்பதற்கு சம்மதித்துள்ளார்.

ஆக, ஒரே நேரத்தில் இரண்டு சரித்திர படங்களில் நடிக்கிறார் அனுஷ்கா. இதே படங்களில் முன்னணி நடிகர்கள் இருந்தாலும், அனுஷ்காவை சுற்றியே கதை பின்னப்பட்டுள்ளதாம். அதனால் சரித்திர காலத்து அரசியல்கள் போன்று வால் சண்டை, கத்தி சண்டை, குதிரை ஏற்றம் என்றெல்லாம் பயிற்சி எடுத்து இந்த படங்களில் நடிக்கிறார் அனுஷ்கா. ஆனால் இந்த நிலையில், தற்போது அனுஷ்கா 30 வயதை கடந்து விட்டதால், அவரது பெற்றோர்கள் அவருக்கு தீவிரமாக மாப்பிள்ளை பார்த்து வந்தார்களாம். அப்படி பார்த்ததில் ஐதராபாத்தைச் சேர்ந்த பிரபல தொழிலதிபர் ஒருவர் அனுஷ்காவை திருமணம் செய்து கொள்ள முன்வந்ததையடுத்து, அனுஷ்காவுக்கு திருமணமும் முடிவாகிவிட்டதாம். என்றாலும், கைவசமுள்ள இரண்டு படங்களையும் நடித்துக்கொடுத்த பிறகுதான் கல்யாணமாம். ஆனால் நடித்து வரும் படங்கள் திரைக்கு வந்த பிறகுதான் திருமண விசயத்தை வெளியிட வேண்டும் என்று அனுஷ்காதரப்பு இரகசியமாக வைத்திருந்த போதும், இப்போது எப்படியோ அந்த செய்தி கசிந்து விட்டது.

அதனால் இந்த உண்மைச் செய்தியை ஒத்துக்கவும் முடியாமல், மறுக்கவும் முடியாமல் தடுமாறிக்கொண்டிருக்கிறார் அனுஷ்கா.

## மோனோ ரயில் சேவை சில மாதங்களில் சென்னையில்

தமிழக அரசு கடந்த ஒன்றரை ஆண்டுகளுக்கு முன்பு தொடங்கிய மோனோ ரயில் திட்டம் இன்னும் 2 மாதங்களில் முடிவடைகிறது.

இந்த ரயில் சேவை முதல் கட்டமாக 57 கி.மீ தூரம், வண்டலூர்- வேளச்சேரி, பூந்தமல்லி-கத்திப்பாரா, வடபழனி வழித்தடத்தில் செயல்பட உள்ளது என்றும் தெரிய வருகிறது. முதல் கட்டமாக 57 கி.மீ தூரத்துக்கு செயற்படுத்தப்படும் இந்த திட்டப்பணிக்கு மதிப்பீடு ரூபாய் 8 ஆயிரத்து 500 கோடியாகும்.

3 வழித்தடங்களாக பிரிக்கப்பட்டு மோனோ ரயில்திட்டம் நிறைவேற்றப்படுகிறது. வண்டலூர் முதல் வேளச்சேரி வரையிலான 23 கி.மீ தூரத்துக்கு ஒரு வழித்தடம் அமைக்கப்படுகிறது.

பூந்தமல்லி முதல் கத்திப்பாரா வரையிலான ஒரு வழித்தடம் 14 கி.மீ 2ஆவது வழித்தடமாக அமைக்கப்பட்டுள்ளது. பூந்தமல்லி, வடபழனி வரையிலான வழித்தடம் மூன்றாவது வழித்தடமாகும். இது 18 கி.மீ தூரம் என்பது குறிப்பிடத்தக்கது. இந்த திட்டப்பணிகள் குறைந்த பட்சம் 2 மாத காலத்துக்குள் முடிவடைந்து, ஜூன் மாதம் மோனோ சேவை தொடங்கப்படும் என்று தெரியவருகிறது.

## கிறிஸ்தவ நற்சிந்தனை
## சொந்த ஊரில் புறக்கணிப்பு

(2 அரசர்கள் 5:)
(லூக்கா 4:24 -30)

இன்றைய நற்செய்தி வாசகத்தில் இயேசு தனது சொந்த ஊரில் புறக்கணிக்கப்படுகின்றார். யேசுவின் பணி வாழ்வில் புறக்கணிப்பு மலிந்து இருந்தது. இயேசுவின் பணிக்கு இவை தடையாக இருக்கவில்லை. சீடர்கள், அரசியல்வாதிகள், மறைநூல் அறிஞர்கள், பரிசேயர் மற்றும் உறவினர்கள் என அனைவருமே இயேசுவின் பணிக்கு ஒத்துழைப்புக்கொடுப்பதற்குப் பதிலாக சவாலாக அமைந்தனர். யேசு இவற்றை மேற்கொண்டார். “இறைவாக்கினர் எவரும் தம் சொந்த ஊரில் ஏற்றுக்கொள்ளப்படுவதில்லை” (லூக் 4:24)என்று கூறுகின்றார். பின்பு எலிபா, எலிசா காலத்தில் நடைபெற்ற அற்புத நிகழ்வை எடுத்துச்சொல்லி இறைவன் அனைவருக்கும் சொந்தமானவர். அவரது வல்ல செயல்கள் ஆள் பார்த்து இடம்பெறுவதில்லை. மாறாக நம்பிக்கையின் அடித்தளத்தில் இடம்பெறுகின்றது. எனவே இறைவனை எமக்கு மட்டும் என்று சொந்தம் கொண்டாட முடியாது. இஸ்ராயேல் மக்கள் தாங்கள் மட்டுமே தெரிந்து எடுக்கப்பட்ட பரிசுத்த இனம், ஏனையவர்கள் தூய்மையற்றவர்கள், இறைவன் அவர்களுடன் இல்லை என்று நம்பினர். இயேசு இந்த மனப்பாண்மையைத் தகர்க்கின்றார். விசுவாசம் கொண்டவர்கள் இறைவனை உடைமையாகக்கொள்ளமுடியும். இறைவனின் அற்புத செயல்களை அனுபவிக்க முடியும்.

-வி.பி.தனேந்திரா.

எஸ்.ஜானகி...
(15ஆம் பக்கத்தொடர்ச்சி...)

நல்லவேளையாக சமரசம் செய்து கொண்டுள்ளார். இல்லையென்றால் (மற்ற பாடல்களை விட ஏனோ கேட்பவரிடம் மிகவும் பாதிப்பை உண்டாக்கும் வகையில் அமையும்) சிறு பொன்மணி அசையும், மெட்டி ஒலி காற்றோடு, நான் தேடும் செவ்வந்தி பூவிது, அடி ஆத்தாடி, பூ மாலையே தோள் சேரவா, தென்றல் வந்து தீண்டும் போது என இளையராஜாவும் அவரும் சேர்ந்து பாடிய டூயட்களை நாம் கேட்காமலேயே போயிருப்போம்.

தாய் மொழியான தெலுங்கோ, பிரபலமாக விளங்கிய தமிழோ அல்லாது மலையாளம் மற்றும் கன்னடத் திரையிசை உலகிலும் கூட இதுவரை அதிக பாடல்கள் பாடியவர் என்று தென்னிந்திய அளவில் சாதனை புரிந்தவர் ஜானகி. ஆனால் வாங்கினால் பாரத ரத்னா மட்டுமே வாங்குவேன் என அவர் சொன்னதில் எழுபத்தைந்து வயது மூதாட்டியின் பிடிவாதம் மட்டுமே தெரிகிறது. நிதானமான வேறொரு தருணத்தில் நிச்சயமாக அவர் இந்த நிபந்தனையைத் தவிர்த்திருக்கக்கூடும். அதே சமயம் பத்ம பூஷணை அவர் மறுத்ததும் நியாயமே. அந்த நிராகரிப்பில் நிச்சயமாக ஆணவம் இல்லை.

தென்னிந்தியக் கலைஞர்களை தொன்று தொட்டே அந்நியப்படுத்தி இருக்கிறார்கள் என்கிற பரவலான ஆதங்கத்தை கேட்பவர்களுக்கு உறைக்கும் வகையில் தன் நிலைமையை தெளிவுபடுத்தியிருக்கிறார்.


## வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் : ..........................................
முகவரி : ..........................................
பிறந்த ஆண்டு : ..........................................
கூப்பன்கள் ஐந்தும், புகைப்படமும்

..........................................
பெற்றோர் கையொப்பம்

உங்களது பத்து வயதுக்குட்பட்ட சிறார்களின் பிறந்த நாள் கொண்டாட்டங்களில் “தினமுரசு” தினப்பதிப்பும் இணைகின்றது. உங்களது சிறாரின் புகைப்படத்துடன் கீழ்வரும் கூப்பன்களில் ஐந்தினை நிரப்பி எமக்கு அனுப்பி வையுங்கள். தினமுரசு தினப்பதிப்பு உங்கள் அன்புச் செல்வத்தின் பிறந்த நாளன்று புகைப்படத்துடன் கூடிய பிறந்த நாள் செய்தியைப் பிரசுரிக்கும் என்பதை மனமகிழ்வுடன் தெரிவிக்கின்றோம்.

# செலவைக் குறைக்கும் உத்தரவு கையெழுத்திட்டார் ஒபாமா



8,500 கோடி டொலர் செலவைக் குறைக்கும் உத்தரவில் அமெரிக்க அதிபர் ஒபாமா கையெழுத்திட்டுள்ளார். அமெரிக்க அரசின் நிதிச்சுமையைக் குறைப்பதற்காக இந்த நடவடிக்கை எடுத்துள்ளதாகக் கூறியுள்ள அவர், நாட்டின் நலனுக்காக அமெரிக்கர்கள் அனைவருமே சுமையைப் பகிர்ந்து கொள்ள வேண்டியுள்ளது. இந்த நடவடிக்கையை குடியரசுக் கட்சி உறுப்பினர்கள் தவிர்த்திருக்க முடியும் என்றும் அவர் கூறியுள்ளார்.

அரசின் இந்த செலவு குறைப்பு நடவடிக்கையால் நேரடியாகவும், மறைமுகமாகவும் 7 லட்சத்து 50 ஆயிரம் பேரின் வேலைவாய்ப்பு பாதிக்கப்படும் என்று கருதப்படுகிறது.இந்த நடவடிக்கையை மேற்கொள்வது தொடர்பாக அமெரிக்க நாடாளுமன்ற உறுப்பினர்களின் கூட்டம் நடைபெற்றது. இதில் எதிர்க்கட்சியான குடியரசுக் கட்சியினர் இந்த கடுமையான செலவு குறைப்பு நடவடிக்கை எடுப்பது தொடர்பாக ஒருமித்த கருத்துக்கு முன்வரவில்லை. எனினும் செலவுகளைக் குறைப்பதற்கான உத்தரவில் ஒபாமா கையெழுத்திட்டுள்ளார்.

# உயிரடனோ பிணமாகவோ தேவை பட்டியலை வெளியிட்டது அல்கொய்தா

“இஸ்லாத்திற்கு எதிராக குற்றம் புரிந்ததற்காக உயிருடனோ பிணமாகவோ தேவை” என்ற தலைப்பில், அல்கொய்தா இணையத் தளத்தில் அறிவிப்பு வெளியாகியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதில் பலரின் பெயர்கள் பட்டியலிடப்பட்டுள்ளன. தடை செய்யப்பட்ட இந்த இணையதள இதழை வாஷிங்டன் மாகாணத்தில் உள்ள “மிடில் ஈஸ்ட் ரிசர்ச் இன்ஸ்டியுட்” என்ற நிறுவனம் வெளியிட்டுள்ளது.

2001 செப்டம்பர் 11 இல் அமெரிக்காவில் நடந்த தீவிரவாத தாக்குதல் நினைவு தினத்தில் குரானின் பிரதியை எரித்த பாஸ்டர் ஜான் டெர்ரி, அமெரிக்காவின் கேலி சித்திர ஓவியர் மொல்லி நோரிஸ், சோமாலிய நாட்டைச் சேர்ந்த பெண்ணியவாதியான அயான் ஹிர்சி அலி உள்ளிட்ட பலரின் பெயர்கள் இதில் படங்களுடன் இடம் பெற்றுள்ளதாக கூறப்படுகின்றன.

இந்திய வம்சாவழியைச் சேர்ந்த இங்கிலாந்து எழுத்தாளர் சல்மான் ருஷ்டியின் பெயரும் அதில் உள்ளது.

1989 ஆம் ஆண்டு இவர் எழுதிய “தி சாதனிக்



வெர்சஸ்” என்ற புத்தகம் வெளியானது. இதற்கு ஈரானின் தலைவர் மறைந்த அயத்துல்ல கொமேனி எதிர்ப்பு தெரிவித்தார். ருஷ்டியை கொலை செய்ய ஈரானின் கொர்டாத் அறக்கட்டளை 2.5 மில்லியன் பவுண் பரிசுத்தொகை அறிவித்திருந்தது. அல்கொய்தா இணையத் தளத்தில் வெளியிடப்பட்டுள்ள பிரபலங்களின் கொலைப் பட்டியல் அறிவிப்பு உலகம் முழுவதும் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

# போப் ஆண்டவரின் பதவி; விநோத தபால் தலை வெளியீடு



போப் ஆண்டவராக இருந்த 16 ஆம் பெனடிக்ட் கடந்த பெப்ரவரி 28 ஆம் திகதியுடன் பதவி விலகினார்.

600 ஆண்டுகால வரலாற்றில் போப் ஆண்டவர் பதவியை இதுவரை யாரும் இராஜினாமா செய்ததில்லை.

இவர்தான் முதன் முறையாக அப்பதவியை இராஜினாமா செய்துள்ளார்.

இதைத் தொடர்ந்து புதிய போப் ஆண்டவரை 80 வயதுக் குட்பட்ட 115 கர்தினால்கள் தேர்ந்தெடுக்கின்றனர். எதிர் வரும் ஏப்ரல் மாதத்தில் கான்கிளேவ் கூட்டத்தில் அவர் தேர்ந்தெடுக்கப்படுகிறார்.

அதுவரை போப் ஆண்டவர் பதவி காலியாக இருக்கும். அதை குறிக்கும் வகையில் வத்திக்கான் தபால் நிலையம் புதிய விநோதமான தபால் தலையை வெளியிட்டுள்ளது.

அதில், 2 சாவிகளை குறுக்காக வைத்து அதன் நடுவில் காலி இடம் இருப்பது போல் வடிவமைக்கப்பட்டுள்ளது. இந்த தபால்தலை விற்பனை செய்யப்படுகிறது.

இத்தாலியில் 70 யூரோவுக்கும், ஐரோப்பியா மற்றும் மத்திய தரைக்கடல் நாடுகளில் 85 யூரோவுக்கும், ஆபிபிரிக்கா மற்றும் ஆசிய நாடுகளில் 2 யூரோவுக்கும், அமெரிக்கா மற்றும் அவுஸ்ரேலியாவில் 2.50 யூரோவுக்கும் விற்பனை செய்யப்படுகிறது.

புதிய போப் ஆண்டவர் தேர்ந்தெடுக்கப்படும் வரை மட்டுமே இந்த தபால் தலை விற்கப்படும். அதன் பிறகு அதன் வெளியீடு நிறுத்தப்படும்.

உலகச் செய்திகள்

# மார்பகங்களால் கொலை முயற்சி; ஜேர்மனியில் பரபரப்பு

காதலனை மார்பகங்களுக்கு இடையே அமுக்கி மூச்சுத் திணறச் செய்யச் செய்து கொலை செய்ய முயன்றதாக ஜேர்மனி பெண் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

ஜேர்மனியின் உன்னா நகரைச் சேர்ந்த ஆன்ட்ரியல் கோல்லர் என்பவரை 33 வயதான கெரின் என்ற பெண் உடலுறவின்போது கொலை செய்ய முயன்றதாகவும், அவரது மார்பக மூச்சுத் திணறலில் இருந்து கோல்லர் தப்பியபோது அவரை கழுத்தை நெரித்து கெரின் கொல்ல முயன்றதாகவும் வழக்குப் பதிவாகியுள்ளது.


ஆனால், அந்தப் பெண்ணுக்கு சில மன நலப் பிரச்சினைகள் உள்ளதாக அவரது சட்டத்தரணிகள் நீதிமன்றத்தில் ஆவணங்களை தாக்கல் செய்ததையடுத்து இந்த வழக்கை நீதிபதிகள் இரத்து செய்தனர்.

இது குறித்து கோல்லர் கூறுகையில், நான் கெரினை முழு மனதோடு இன்னும் காதலிக்கிறேன். அவருக்கு தண்டனை வழங்கப்பட வேண்டும் என்று நான் கோரவில்லை என்றும் அவருக்கு உரிய மன நல சிகிச்சை தரப்பட வேண்டும் என்பதே என் விருப்பம எனவும் கூறினார்.

# பிரிட்டன் எண்ணெய்க் கிணற்றில் திடீர் எண்ணெய்க் கசிவு

பிரிட்டனைச் சேர்ந்த ஸ்கொட்லாந்து நாட்டின் வடக்குக் கடற்பகுதியில் ஆழ்கடல் எண்ணெய்க் கிணறுகள் உள்ளன. அவற்றில் முக்கியமானதாகக் கருதப்படுவது கார் மொரன்ட் ஆல்பா எனும் எண்ணெய் மேடையாகும்.

இம்மேடை ஷெட்லாந்து பகுதியின் லேர்விக் என்ற இடத்திலிருந்து வடகிழக்காக 94



மைல் தூரத்தில் அமைந்துள்ளது.

நேற்று முன்தினம் இங்கு அதிகாரிகள் வழக்கம்போல் பாதுகாப்புப் பணிகளில் ஈடுபட்டுக் கொண்டிருந்தனர். அப்போது ஒரு எண்ணெய்க் குழாயில் கசிவு ஏற்பட்டிருப்பதைக் கண்டுபிடித்தனர். இதையடுத்து, முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக இம்மேடையில் பணியாற்றிக்கொண்டிருந்த 145 ஊழியர்களில் 70 பேர் உடனடியாக அந்த இடத்தை விட்டு அப்புறப்படுத்தப்பட்டனர்.

இம்மேடையுடன் இணைந்து செயல்படும் மேலும் 8 மேடைகளிலும் எண்ணெய் உற்பத்தியும் பாதிக்கப்பட்டது. இம்மேடைகள் “அபுதாபி நேஷனல் எனர்ஜி” எனும் நிறுவனத்தால் நிர்வகிக்கப்படுகிறது. இது குறித்து அந்நிறுவனத்தின் தகவல் அதிகாரி கூறுகையில்,

எண்ணெய்க் குழாய்களில் ஹைட்ரோகார்பன் வெளியாவது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. பாதுகாப்பு கருதி தற்போது உற்பத்தி நிறுத்தி வைக்கப்படுள்ளது. மேலும் பழுதை சரிசெய்யும் பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

மேடையின் தூண் பகுதியில்தான் இந்த கசிவு ஏற்பட்டுள்ளது. எனவே சுற்றுப்புற சூழலில் இதனால் எந்த பாதிப்பும் இல்லை என்று கூறினார்.

# முஷாரப்பின் சொத்து முடக்கம்; மனைவியின் வழக்கு தள்ளுபடி

2008 ஆம் ஆண்டு பாகிஸ்தானில் ஏற்பட்ட ஆட்சி மாற்றத்தால் முன்னாள் பிரதமர் பர்வேஸ் முஷாரப் இங்கிலாந்து மற்றும் ஐக்கிய அரபு நாடுகளில் தஞ்சமடைந்தார்.

பெனாசிர் பூட்டோ 2007 ஆம் ஆண்டு கொல்லப்பட்ட போது அப்போதைய ஆட்சிப்பொறுப்பில் இருந்த முஷாரப் போதிய பாதுகாப்பு அவருக்கு வழங்கத் தவறியது ஏன் என்பன தொடர்பான வழக்குகள் பாகிஸ்தான் தீவிரவாத தடுப்பு கோர்ட்டில் நடைபெற்று வந்தவேளை இந்த வழக்கில் விளக்கமளிக்க வேண்டிய முஷாரப் நாட்டை விட்டு வெளியேறிவிட்டதால் அவரை தலைமறைவாக இருக்கும் நபர் என அறிவித்த தீவிரவாத தடுப்பு கோர்ட் முஷராப்பின் அசையா சொத்துகள் மற்றும் வங்கிகளில் இருக்கும் ரொக்கப்பணம் ஆகியவற்றை முடக்கவும் உத்தரவிட்டது.

கோர்ட்டின் இந்த உத்தரவை எதிர்த்து முஷராப்பின் மனைவி சேஹ்பா முஷாரப் மனு தாக்கல் செய்தார். தான் வசிக்கும் வீடு முஷராப் தனக்கு பரிசாக வழங்கியதாகவும் வங்கிகளில் உள்ள பணம் அனைத்து வெள்ள நிவாரணப் பணிகளுக்கு உதவும் வகையில் உருவாக்கப்பட்ட அறக்கட்டளைக்கு சொந்தமானது எனவும் அம் மனுவில் தெரிவிக்கப்பட்டிருந்தது.



இந்நிலையில் சேஹ்பா முஷாரப் வாதங்களை மெய்ப்பிப்பதற்கான ஆதாரங்களை அவரது வழக்கறிஞர் இலியாஸ் சித்திக்கி தாக்கல் செய்யாததால் மனுவை தள்ளுபடி செய்வதாக நீதிபதி அறிவித்ததோடு முன்னர் வெளியிட்டிருந்த ஆணை தொடர்ந்து நீடிக்குமெனவும் தெரிவித்தார்.

# அடையாள அட்டை விநியோகம்

## சாதாரண மாணவர்களுக்காக துரிதம்

இம்முறை கல்விப் பொதுத் தராதர சாதாரணதரப் பரீட்சையில் தோற்றவுள்ள மாணவர்களுக்கு துரிதமாக தேசிய அடையாள அட்டைகளை விநியோகிக்கும் திட்டமொன்று செயற்படுத்தப்பட்டுள்ளது.

இதற்கமைய இந்த வருடம் ஒக்ரோபர் மாதம் 31 ஆம் திகதி 16 வயது பூர்த்தியாகும் மாணவர்களின் விண்ணப்பங்களை அனுப்பிவைக்குமாறு அதிபர்களுக்கு பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளதாக ஆட்பதிவுத் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

இது தொடர்பில் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், கல்வி அமைச்சின் செயலாளர் மற்றும் கல்வி அமைச்சுக்களின் செயலாளர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக ஆட்பதிவு ஆணையாளர் நாயகம் ஆர்.எம்.எஸ். சரத்குமார தெரிவித்துள்ளார்.

மாணவர்களுக்கு 16 வயது நிரம்பும் வரை காத்திருக்காது மே மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னதாக அனைத்து விண்ணப்பங்களையும் சமர்ப்பிக்க வேண்டும் என ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

இதற்கமைய ஒக்ரோபர் மாதம் 31 ஆம் திகதி வரை 16 வயது நிரம்பும் அனைத்து மாணவர்களுக்கும் கட்டம் கட்டமாக தேசிய அடையாள அட்டைகளை விநியோகிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

நவம்பர், டிசம்பர் மாதங்களில் 16 வயது நிரம்பும் மாணவர்களுக்கான தேசிய அடையாள அட்டைகளை விநியோகிப்பதில் தாமதம் ஏற்படலாம் என ஆட்பதிவு ஆணையாளர் நாயகம் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதனால் இம்முறை கல்விப் பொதுத் தராதர சாதாரணதரப் பரீட்சையில் தோற்றவுள்ள குறித்த மாணவர்களுக்கு மாத்திரம் தபால் அடையாள அட்டையை முன்கூட்டியே பெற்றுக்கொள்ளுமாறு அதிபர்களுக்கு பணிப்புரை விடுத்துள்ளதாகவும் அவர மேலும் தெரிவித்துள்ளார்.

# சுகாதாரமற்ற முறையில் பாண்; விநியோகஸ்தருக்கு தண்டம்

வவுனியாவில் வெதுப்பகமொன்றில் இருந்து விநியோகிப்பதற்காக நேற்று முன்தினம் முச்சக்கரவண்டியில் சுகாதாரமற்ற விதத்தில் பாண் கொண்டு சென்றபோது திடீர் பரிசோதனையில் ஈடுபட்ட வவுனியா நகர சபை பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் அவற்றை பறிமுதல் செயதனர் என நகரசபை பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் தெரிவித்தனர்.

92 இறாத்தல் பாண் இவ்வாறு கொண்டு சென்றபோது அவற்றை பறிமுதல் செய்ததுடன் வவுனியா நீதிமன்றத்தில் அவருக்கெதிராக நேற்று முன்தினமே தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் பாண் கொண்டு சென றவருக்கு 3,000 ரூபா தண்டம் அறவிடப்பட்டதுடன் 92 இறாத்தல் பாணும் கைப்பற்றப்பட்டு அழிக்கப்பட்டது.

இதேவேளை, வவுனியா வர்த் தக நிலையங்களில் வவுனியா நகரசபையின் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் தொடர்ச்சியாக பரிசோதனைகளில் ஈடுபட்டு வருவதுடன் சுகாதாரமற்ற முறையில் அமைந்துள்ள உணவகங்கள் மற்றும் பாவனைக்குதவாத பொருட்களையும் கைப்பற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# இம்மாத நடுப்பகுதியில் மாணவர்கள் பல்கலைக்கு

(கொழும்பு)

2011 ஆம் ஆண்டு உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றி சித்தியடைந்த மாணவர்கள் இம்மாத நடுப்பகுதியில் பல்கலைக் கழகங்களுக்குள் உள்வாங்கப்படுவர் என பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தெரிவித்தது.

இதுவரை 90 வீதத்திற்கு அதிகமான மாணவர்களுக்கு அது பற்றியவிபரங்கள் அடங்கிய கடிதங்கள் அனுப்பபப்பட்டுள்ளதாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவி பேராசிரியை சனிக்கா ஹிரிம்புரேகம குறிப்பிட்டார்.

இதேவேளை, கடந்த வெள்ளியன்று திறந்துவைக்கப்பட்ட தென்கிழக்கு பொறியியல் பீடத்திற்கு 99 மாணவர்களை சேர்த்துக்கொள்வதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் பேராசிரியை தெரிவித்தார்.

# பாடசாலை கிரிக்கெட் போட்டிகள்; வீதிகளில் கோஷம் எழுப்பத் தடை

பாடசாலைகளுக்கு இடையில் கிரிக்கெட் சுற்றுப் போட்டிகள் இடம்பெறும் போது வீதிகளில் இறங்கி கோஷங்களை எழுப்புதல், போக்குவரத்துக்கு இடையூறுகளை ஏற்படுத்தல் போன்ற நடவடிக்கைகளில் ஈடுபடும் மாணவர்கள் மற்றும் ஏனையோருக்கு எதிராக கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்க பொலிஸ் திணைக்களம் தீர்மானித்துள்ளது.

கொழும்பு மற்றும் ஏனைய பிரதான நகரங்களில் இடம்பெறும் இது போன்ற விடயங்கள் தொடர்பாக கண்காணிக்கவென சீருடையிலும், சிவில் உடைகளிலும் பொலிஸார். விஷேட கடமைகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாகப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பொலிஸ் அத்தியட்சகர் புத்திக சிறிவர்தன தெரிவித்தார்.

வீதிகளில் இறங்கி கோஷங்களை எழுப்புதல், போக்குவரத்துக்கு இடையூறுகளை ஏற்படுத்தல் போன்ற சட்ட விரோத மற்றும் ஒழுக்கமற்ற செயற்பாடுகளில் ஈடுபட வேண்டாமென மாணவர்கள், ஆசிரியர்கள், பெறறோர்கள் மற்றும் பொதுமக்களிடம் பொலிஸ் திணைக்களம் வேண்டுகோள் விடுக்கின்றது. கொழும்பு நகர் மற்றும் அதனை அண்டிய நகர்புறங்களிலுள்ள பாரடசாலைகளில் அல்லது பாடசாலை அண்மித்த பகுதிகளில் நடைபெறும் கிரிக்கெட் விளையாட்டுப் போட்டிகளில் ஈடுபடுபவர்கள் பொதுமக்களுக்கு இடையூறுகளை ஏற்படுத்தும் வகையில் செயற்படுவது தொடர்பில் பாதுகாப்புத் தரப்பினருக்கு கிடைக்கப்பெற்ற தகவல்களையடுத்தே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றார்.

# குற்றச்சாட்டுக்கள் நிராகரிப்பு மனித உரிமை கண்காணிப்பகம் கவலை

படையினரின் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருந்த விடுதலைப் புலி சந்தேகநபர்கள் சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டதாகக் குற்றம் சாட்டப்பட்ட போதிலும், அதனை நிராகரிப்பதாக அரசாங்கம் தெரிவித்துள்ள பதில் தமக்குக் கவலையளிப்பதாக உள்ளதாக சர்வதேச மனித உரிமைகள் கண்காணிப்பகம் தெரிவித்துள்ளது. கண்காணிப்பகத்தின் தெற்காசியப் பணிப்பாளர் மீனாட்சி கங்குலி இவ்வாறு தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது, இலங்கை அரசாங்கம் தமது படைகள் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்களை தீவிரமான குற்றச்சாட்டாக கருதி நடவடிக்கை எடுக்கவேண்டும் என அவர் தெரிவித்துள்ளார்.

### இலங்கைத்...

தோல்வியடைந்து விட்டது. பொருளாதாரத்தை சரிவுப்பாதையில் கொண்டு சென்றுவிட்டது. இலங்கையிலுள்ள தமிழர்களின் நாகரிகம் மற்றும் பண்பாட்டை காப்பாற்றமுடியவில்லை.

இந்த விடயத்தில் பிரதமர் என்ன நினைக்கிறார் என்றே தெரியவில்லை. எனவே. பிரதமர் தன் நிலையை தெளிவுபடுத்த வேண்டும். இலங்கைத் தமிழர்களின் பாதுகாப்பை உறுதி செய்ய நடவடிக்கை எடுக்கவேண்டும். தமிழக மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் தாக்கப்படுவது கண்டிக்கத்தக்கது. தீவிரவாதத்தினை இரும்புக்கரம் கொண்டு அடக்கவேண்டும். இவ்வாறு அவர் பேசினார்.

### தமிழ் மக்கள்...

பயங்கரவாத செயற்பாடுகளினால் பாதிப்புக்குள்ளாகியிருந்தனர். அந்த நிலையினை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மாற்றியமைத்து சகலரும் அனுபவிக்கக் கூடிய சமாதானத்தை ஏற்படுத்தித் தந்துள்ளார். அதனை குறிப்பாக வடமாகாண மக்கள அனுபவித்து வருகின்றனர்.

வெளிநாடுகளில் இருந்து பெறப்படுகின்ற நிதிகளில் அதிகமானவை வடமாகாணத்தின் அபிவிருத்திக்கே செலவிடப்படுகின்றது. முற்றாக வடக்கில் புலிகளினால் அழித்து துவம்சம் செய்யப்பட்ட பல கட்டடங்களை மீள் புனரமைத்துள்ளோம். பாதைகள் நவீனமயப்படுத்தப்பட்டுள்ளன, மதவாச்சி, தலைமன்னார் புகையிரதப் பாதை நிர்மாணப் பணிகள் வேகமாக இடம்பெறுகின்றது. அதேபோல் புத்தளம் மன்னார் ஊடான யாழ்ப்பாண பாதைகள் அமைக்கப்பட்டு வருகின்றன.

நவீன வைத்தியசாலைகள், பிரதேச செயலகக்கட்டடங்கள் மற்றும் தேவையான பாடசாலை கடடடங்கள் என்பன நிர்மாணிக்கப்பட்டு வருகின்றன. இவைகளெல்லாம் இங்கு வாழும் மக்களுக்காகவே என்பதை நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும். இலங்கையில் 80 சதவீதமாக வாழும் பௌத்தர்களால் வழிபடும் தலதா மாளிகையின் நிர்மாணத்துக்கு கூட வழங்கப்படாத நிதிகள் மடு தேவாலய புனரமைப்புக்கு வழங்கப்பட்டுள்ளது. இதனை உலகில் கத்தோலிக்க மக்களது பிரதான வணக்கத் தலமாக மாற்றவேண்டும் என்பதுதான் எமது பிரதான நோக்கமாகும்.

அதேபோன்று தமிழ் மக்களது பிரசித்தம் பெற்ற 5 திருத்தலங்களில் ஒன்றான மன்னார் திருக்கேதீஸ்வரம் கோயில் புனரமைப்புக்கு என 350 கோடி ரூபாய்கள் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளது. இவைகளெல்லாம் இப்பிரதேசத்தில் வாழும் தமிழ் மக்களின் தேவைகளாகவுள்ளது. இவ்வாறு எம்மால் முன்னெடுக்கப்படும் அபிவிருத்தித் திட்டங்களை தடுப்பதற்கும், மக்கள் அதனை அனுபவிக்கக் கூடாது என்ற நோக்கத்தோடு சர்வதேச புலம்பெயர் சமூகத்திடமும், நாடுகளிடமும் சென்று தமிழ் கூட்டடைப்பு பிழையான தகவல்களை வழங்கிவருகின்றது.

புலிகளினால் வெளியேற்றப்பட்ட மக்கள் எங்கிருந்தாலும், எந்த சமூகத்தை, இனத்தை சார்ந்தவர்களாக இருந்த போதும், அவர்களது தாயகத்தில் வாழ வேண்டிய உரிமை அவர்களுக்கு இருக்கின்றது. அன்று மெனிக் பாமில் இருந்த மக்களை மீள்குடியேற்ற நடவடிக்கையெடுத்த போது, அவர்களை மீள்குடியேற்ற விடாமல் சர்வதேச நிறுவனமொன்றின் பிரதிநிதி அம்மக்களை ஏற்றிச் செல்ல தயாராக இருந்த பஸ் வண்டிக்கு முன்பாக வந்துநின்று செயற்பட்டதை நினைவு கூர விரும்புகின்றேன். அவ்வாறு அதற்கு பயந்து இம்மக்களை மீள்குடியேற்றம் செய்யாமல் இருந்திருந்தால் இன்னும் அவர்கள் அகதி முகாமில் வாழ நேரிட்டிருக்கும். அதனையும் காரணமாக கொண்டு ஜெனிவாவுக்கு சென்று அரசாங்கத்திற்கு எதிராக செயற்படும் சதித்திட்டத்தை தற்போது அங்கு சென்றுள்ள தமிழ் கூட்டமைப்பின் இந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் செய்திருப்பார்கள்.

அரசியல் காலங்களில் இங்கு வந்து மக்களின் இரத்தத்தை சூடேற்றி, அவர்களை பிழையாக வழிநடத்தி அதன்மூலம் தமது இருப்பை தக்க வைத்துக்கொள்ள முனையும் இது போன்ற அரசியல் வாதிகள், அப்பாவி சமாதானத்தை இன உறவை விரும்பும் இம்மக்களை இனக் கூறுகளாக பிரித்தாள நினைக்கும் எண்ணங்களை கைவிடுமாறு கேட்கின்றேன்.

இந்த நாட்டில் ஏற்படடுள்ள இந்த சமாதானத்தை இல்லாமல் ஆக்க எடுக்கப்படும் எந்தவொரு முயற்சிக்கும் எதிராக இந்த சமாதானத்தை தக்க வைத்துக் கொள்ள எடுக்கப்பட வேண்டிய அனைத்து நடவடிக்கைகளையும் நாம் எடுப்போம் என்பதை உறுதியாக கூறிக் கொள்ளவிரும்புகின்றேன் என தெரிவித்தார்.

### பயிற்சியில்...

கடற்படையினர் காயமடைந்தனர். அவர்களில் நால்வருக் குக் கடுமையான தீக்காயங்கள் ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்படு கிறது. இந்தச் சம்பவத்தைக் கடறபடைப் பேச்சாளர் கோசலவர ணகுல சூரியவும் உறுதிப்படுத்தியுள்ளார். (25)

### அமெரிக்கத்...

இலங்கைத் தமிழர் பிரச்சனை தொடர்பாக மத்திய அரசிடம் தொடர்ந்தும் வலியுறுத்துவோம். ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணையத்தில் இலங்கைக்கு எதிராக இந்தியா தனியே தீர்மானம் கொண்டுவரத் தேவையில்லை.

அமெரிக்கா கொண்டு வரும் தீர்மானத்தை இந்தியா ஆதரிக்க வேண்டும். இது தொடர்பான இந்தியாவின் முடிவை எதிர்பார்க்கிறோம். எங்களது உணர்வுகளை மத்திய அரசு புரிந்துகொண்டு செயற்படும் என நம்புகிறோம் என்றும் அவர் தெரிவித்தார்.

### சர்வதேசத்தை...

ஐக்கிய நாடுகள் அமைப்பிற்கான இலங்கையின் முன்னாள் வதிவிடப் பிரதிநிதியும் இராஜதந்திரியுமான பேராசிரியர் தயான் ஜயதிலக்க எச்சரித்துள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

சர்வதேச சமூகத்திற்கு சரியான தகவல்களை எடுத்துச் சொல்ல வேண்டியது மிகவும் முக்கியமானது. ஜெனிவாவிற்கு விஜயம் செய்துள்ள இலங்கைப் பிரதிநிதிகள் குழுவினர் சுயாதீனமாக இயங்க அனுமதியளிக்கப்பட வேண்டும்.

அரசாங்கத்தின் கொள்கை வகுப்பாளர்களின் வரையறைகளுக்கு உட்பட்டு நடவடிக்கை எடுக்கும் போது, குறித்த சந்தர்ப்பங்களுக்கு ஏற்ற வகையில் பதிலளிப்பதில் பிரதிநிதிகள் குழு நெருக்கடிகளை எதிர்நோக்க நேரிடும்.

உலகின் சகல நாடுகளும் இலங்கையைப் போன்ற நிலைப்பாட்டைக் கொண்டிருக்கும் என அரசாங்கம் கருதிவிடக்கூடாது. கடந்த ஆண்டு ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டபோது பெற்றுக்கொண்ட வாக்குகளை விடவும் குறைந்த எண்ணிக்கை யிலான் வாக்குகளை இலங்கை பெற்றுக்கொண்டால், சர்வதேச ரீதியில் இலங்கை தனிமைப்படுத்தப் படக் கூடிய அபாயம் காணப்படுகின்றது. இலங்கைக்கு எதிராக சர்வதேச ரீதியான விசாரணை நடத்தப்படக் கூடிய நிலைமை ஏற்பட்டால் அது மிகவும் ஆபத்தானது என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# புதிதாக அரசியல் கட்சிகளை முல்லையில் பதிய முடியாது

## தேர்தல்கள் செயலகம் அறிவிப்பு

முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைதுறைப்பற்று மற்றும் புதுக்குடியிருப்பு ஆகிய பிரதேச சபைகளுக்கான தேர்தல் நிறைவுபெறும் வரை புதிதாக அரசியல் கட்சிகளை பதிவு செய்ய முடியாது என தேர்தல்கள் செயலகம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் சட்டமா அதிபரின் ஆலோசனைகள் கிடைத்துள்ளதாக செயலகம் குறிப்பிட்டுள்ளது.

தேர்தல் காலத்திற்குள் புதிய அரசியல் கட்சிகளைப் பதிவு செய்ய முடியாது என தேர்தல் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாகவும் தேர்தல்கள் செயலகம் சுட்டிக்காட்டியுள்ளது.

வேட்புமனுத் தாக்கல் செய்யப்பட்ட நாள் முதல் தேர்தல் நடத்தப்பட்டு முடிவுகள் வெளியிடப்படும் நாள் வரையான காலப் பகுதியே தேர்தல் காலம் எனக் கருதப்படும்.

சட்ட நடவடிக்கை காரணமாக முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைதுறைப்பற்று மற்றும் புதுக்குடியிருப்பு ஆகிய பிரதேச சபைக ளுக்கான தேர்தல் இதுவரை நடத்த முடியாமற் போயுள்ளதாக தேர்தல்கள் செயலகம் குறிப்பிட்டுள்ளது.

எவ்வாறாயினும் இந்த இரண்டு பிரதேச சபைகளுக்கும் ஏற்கனவே வேட்புமனு கோரப்பட்டுள்ளதாக செயலகத்தின் சிரேஷ்ட பேச்சாளர் ஒருவர் கூறியுள்ளார்.

இதற்கமைய குறித்த இரண்டு பிரதேச சபைகளுக்குமான தேர்தல் நிறைவுபெறும் வரை புதிதாக அரசியல் கட்சிகளை பதிவு செய்ய முடியாது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

புதிய அரசியல் கட்சிகளை பதிவு செய்வதற்காக 80 இற்கும் மேற்பட்ட குழுக்கள் ஏற்கனவே விண்ணப்பங்களை அனுப்பிவைத்துள்ளதாக தேர்தல்கள் செயலகம் குறிப்பிட்டுள்ளது.

# கோண்டாவிலில் விபத்து ஐவர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

கோண்டாவில் சந்தியில் நேற்று இரவு இடம்பெற்ற விபத்தில் ஐவர் காயமடைந்துள்ளனர்.

கோண்டாவில் சந்தியில் முச்சக்கர வண்டியும் மோட்டார்சைக்கிலும் விபத்துக்குள்ளானதில் 5பேர் படுகாயமடைந்து யாழ். போதனாவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இவ்விபத்து நேற்றிரவு 9.45 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

இவ்விபத்தில் காயமடைந்தவர்கள் உரும்பிராய் பகுதியைச் சேர்ந்தவர்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இந்தியத்தொழிலாளர்களுக்கு நிறுத்தப்பட்டது நுழைவு விசா

வடக்கு,கிழக்கில் நெல் வயல்களில் அறுவடைப் பணிகளுக்கு இந்தியத் தொழிலாளர்களுக்கு நுழைவு விசா வழங்கும் முடிவை அரசாங்கம் கைவிட்டுள்ளது.

பாதுகாப்புக் காரணங்களுக்காகவே இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக விவசாய அமைச்சர் மகிந்த யாப்பா அபேவர்த்தன தெரிவிததுள்ளார்.

வடக்கு, கிழக்கில், விவசாயப் பணிகளில் ஈடுபடவும், அறுவடை இயந்திரங்களை இயக்குவதற்கும், இந்தியத் தொழிலாளர்களுக்கு அனுமதி வழங்க அரசாங்கம் திட்டமிட்டிருந்தது.

எனினும் பாதுகாப்புக் காரணங்களால், அந்தத் திட்டம் கைவிடப்பட்டுள்ளது.

அறுவடை இயந்திரங்களை இயக்குவதற்கு அந்தப் பகுதி இளைஞர்களுக்குப் பயிற்சி அளிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# ஹலால் சான்றிதழை வழங்க அரசு மறுப்பு

ஹலால் சான்றிதழ்களை வழங்கும் நடைமுறையை தாம் பொறுப்பேற்க முடியாது என்று அரசாங்கம் தெரிவித்துள்ளது.

இலங்கையின் பௌத்த சாசனம் மற்றும் மத விவகாரங்களுக்கான பிரதி அமைச்சர் எம். கே. டி. எஸ். குணவர்த்தன இதனைத் தெரிவித்துள்ளார்.

பொதுபலசேனா என்னும் பௌத்த அமைப்பு உணவுகளுக்கு ஹலால் சான்றிதழ் வழங்கும் முஸ்லிம்களின் நடைமுறையை விமர்சனம் செய்ததுடன் அந்த நடைமுறையை தடை செய்ய வேண்டும் என்றும் வலியுறுத்தி வருகின்றது.

இந்த நிலையில் இந்த ஹலால் சான்றிதழ் வழங்கும் நடைமுறையை அரசாங்கமே எடுத்து நடத்தலாமென இலங்கை ஜமியத்துல் உலமா அமைப்பு கேட்டிருந்தது.

ஆனால் இதனை பிரதி அமைச்சர் நிராகரித்துள்ளார்.

மதங்களுக்கு இடையே முறுகல் நிலை ஏற்படும் தருணத்தில் மாத்திரமே தாம் தலையீடு செய்ய முடியும் என்றும் தற்போது அதற்கான நிலைமை இல்லாத காரணத்தினால் அதில் தலையிட முடியாது என்றும் அமைச்சர் கூறியுள்ளார்.

ஹலால் என்பது முஸ்லிம்களின் மதத்துடன் சம்பந்தப்பட்ட ஒரு விடயம் என்பதால், அதற்கான சான்றிதழ்களை வழங்குவதை இஸ்லாமிய அமைப்பு ஒன்றே மேற்கொள்ள வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

# இலங்கையர்களின் பாதுகாப்பு இந்திய அதிகாரிகள் கவனத்திற்கு



இந்தியாவில், பெரும்பாலும் தென்பகுதியில் இலங்கை எதிர்ப்புச் செயற்பாடுகள் அதிகரித்துள்ளமை தொடர்பாக புதுடில்லியிலும் சென்னையிலும் உள்ள இலங்கை தூதரகங்கள், இந்திய அதிகாரிகளிடம் ஆழ்ந்த கவலையை வெளியிட்டுள்ளன.

இதுதொடர்பாக தகவல் வெளியிட்டுள்ள வெளிவிவகாரச் செயலர் கருணாதிலக அமுனுகம,

இந்த விவகாரம் குறித்து இலங்கைத் தூதுவர்கள் புதுடில்லியிலும், சென்னையிலும் உள்ள அதிகாரிகளின் கவனத்துக்குக் கொண்டு சென்றுள்ளனர்.

இந்தியாவுக்குப் பயணம் மேற்கொள்ளும் மற்றும் அங்கு தங்கியுள்ள இலங்கையர்களின் பாதுகாப்புக்குப் பொருத்தமான ஏற்பாடு செய்யும் படியும் அவர்கள் கேட்டுள்ளனர்.

குறிப்பாக வடஇந்தியாவில் உள்ள மதவழிபாட்டு இடங்கள், புதுடில்லி மற்றும் சென்னையில் உள்ள இராஜதந்திர தூதரகங்கள் உள்ளிட்ட இலங்கை மையங்களின் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது.

தற்போது, பயண எச்சரிக்கையை விடுப்பது குறித்து நாம் சிந்திக்கவில்லை.

ஆனால், களநிலைவரங்களின் மாற்றங்கள் தொடர்பாக நாம் உன்னிப்பாக கண்காணித்து வருகிறோம்.

கொழும்பிலுள்ள அதிகாரிகளுடன் அங்குள்ள தூதுவர்கள் தொடர்ச்சியான தொடர்பு இருந்து வருகின்றனர்.

எனினும், இந்தியாவுக்குப் பயணம் செய்யும் யாத்திரிகர்கள் மற்றும் பயணிகள் அங்கு கவனமாக இருக்க வேண்டும்.

அங்கு நடந்துள்ள சம்பவங்கள் மோசமானவையாக இல்லை.

அங்கு ஏற்படுத்தப்பட்டுள்ள பாதுகாப்பு மற்றும் இந்திய அதிகாரிகள் அளிக்கும் ஒத்துழைப்பு என்பன திருப்தி அளிக்கின்றன. என்று தெரிவித்துள்ளார்.

# பாடசாலை பிரதி அதிபர் கசிப்பு வடித்தவேளை கைது

கட்டுகஸ்தோட்டைப் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பாடசாலை ஒன்றின் பிரதிஅதிபர் கசிப்புத் தயாரிப்பில் ஈடுபட்டதாக சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர். இது குறித்து தெரியவருவதாவது, சந்தேகநபர் தனது நண்பர்களுக்கு மட்டுமே தான் தயாரித்த கசிப்பை விற்பனை செய்து வந்துள்ளார். இந்நிலையில், பொலிஸாருக்குக் கிடைத்த இரகசிய தகவல் ஒன்றின் அடிப்படையில் சம்பவ இடத்திற்கு சென்ற பொலிஸார் கசிப்பு வடித்துக் கொண்டிருந்த போது சந்தேக நபரை கைதுசெய்துள்ளனர். இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கட்டுகஸ்தோட்டைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# அரச இசை விருது; விண்ணப்பம் கோரப்படுகிறது

கலாசார மற்றும் கலை அலுவல்கள் அமைச்சு, கலாசார அலுவல்கள் திணைக்களம், இலங்கை கலைக் கழகத்தின் அரச இசைக்குழு ஒன்றிணைந்து ஏற்பாடு செய்கின்ற 2013 அரச இசை விருது விழாவுக்கான விண்ணப்பங்கள் தற்போது கோரப்படுகின்றது.

2011 முதல் 2012 வருடத்தில் வெளிவந்த படைப்புகளில் சிங்கள மற்றும் தமிழ் மொழிகளிலான சிறந்த பாடல (ஆண்) தனி, சிறந்த பாடல் (பெண்) தனி, சிறந்த பாடலாக்கல் மற்றும் இசையமைப்பு, சிறந்த பாடல் வரிகள் ஆக்கம்,சிறந்த திரை ஒளி ஆக்கம் (இயக்கம்), சிறந்த இறுவட்டு (தயாரிப்பு), (குறைந்தபட்சம் 10 பாடல்கள் இருத்தல் வேண்டும்).

சிறந்த சிறுவர் பாடல் (சிறுவன்) தனி, சிறந்த சிறுவர் பாடல் (சிறுமி) தனி, (வயதெல்லை 08-15 இடைப்பட்டதாக இருத்தல் வேண்டும்), பிரபல சிறுவர் பாடல் வரிகள் ஆக்கம் (திறந்த), சிறந்த சிறுவர் பாடலாக்கல் மற்றும் இசையமைப்பு (திறந்த), சிறந்த சிறுவர் திரை ஒளி ஆக்கம் (திறந்த) - இயக்கம்,

சிறந்த சிறுவர் இறுவட்டு (தயாரிப்பு), சிறந்த கிராமியப் பாடல் (ஆண்) தனி, சிறந்த கிராமிய பாடல் (பெண்) தனி, சிறந்த கிராமிய பாடல் நவீன வடிவம், (இதற்காக இசை மற்றும் இசை உபகரணங்கள் பாவித்தல்), சிறந்த வானொலி இசை நிகழ்ச்சி, சிறந்த குழுப் பாடல் ஆகிவற்றிற்கு விருதுக்காக விண்ணப்பிக்க முடியும்.

2013 அரச இசை விருது வழங்கலுக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் அதற்குரிய விண்ணப்பப் படிவத்தை பூரணப்படுத்தி குறிப்பிடப்பட்ட இறுவட்டுடன் 2013 மார்ச் 15 ஆம் திகதிக்கு முன்னர் பணிப்பாளர், கலாசார அலுவல்கள் திணைக்களம், 8ஆம் மாடி, செத்சிறிபாய, பத்தரமுல்லை என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பி வைக்குமாறு கலாசார திணைக்களம் அறிவித்துள்ளது.

# யுத்தம் முழுவடைந்ததால் மேற்கு நாடுகள் பொறாமை

## – என்கிறார் அமைச்சர் மகிந்த அமரவீர



இலங்கையில் யுத்தம் முடிவுக்கு கொண்டுவரப்பட்டமை தொடர்பில் மேற்குலக நாடுகள் பொறாமை கொண்டுள்ளதாக இடர்முகாமைத்துவ அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

தங்காலையில் காணி வசதியற்ற குடும்பங்களுக்கு உறுதிப் பத்திரங்களை பகிர்ந்தளிக்கும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் யுத்தத்தை முடிவுக்கு கொண்டுவந்த இராணுவ வீரர்களுக்கு எதிராக சில மேற்குலக நாடுகள் தற்போது பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகவும் அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

யுத்தம் முடிவுக்கு கொண்டு வரப்பட்டதன் காரணமாக குறைந்த பட்சம் 20 ஆயிரம் உயிர்களேனும் பாதுகாக்கப்பட்டமை தொடர்பில் சிந்தித்து சர்வதேச சமூகம் இலங்கைக்கு பாராட்டுக்களை தெரிவித்திருக்க வேண்டும் என அவர் தெரிவித்துள்ளார்.

# ஆனந்தா - நாலந்தா மோதல் தடுக்க கண்ணீர்குண்டு பிரயோகம்

கொழும்பு ஆனந்தா கல்லூரிக்கும் நாலந்தா கல்லூரிக்கும் இடையிலான நேற்றைய வருடாந்த கிரிக்கெட் போட்டியின் போது கைகலப்புச் சம்பவமொன்று இடம்பெற்றது.

இதனைக் கட்டுப்படுத்துவதற்காக கலகமடக்கும் பொலிஸார் அழைக்கப்பட்டதோடு பொலிஸாரால் கண்ணீர்க்குண்டுப் பிரயோகமும் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கொழும்பு எஸ்.எஸ்.சி விளையாட்டரங்கில் இடம்பெற்ற இந்தக் கலவரத்தின் போது மாணவர்கள், அமைதியை சீர்குலைக்கும் வகையில் நடந்துகொண்டமையினாலேயே கண்ணீர்க்குண்டு பிரயோகம் மேற்கொள்ள நேரிட்டதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகருமான பி.எம்.எச்.பீ.சிறிவர்தன தெரிவித்தார்.

இவ்விரண்டு பாடசாலைகளின் பழைய மாணவர்களே மோதலில் ஈடுபட்டதாக பொலிஸ் ஊடகப்பேச்சாளர் தெரிவித்தார்.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2013 மார்ச் 04 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.